# திட்டம்

## மாத இதழ்

மலர் 48 | ஆகஸ்ட் 2017

இதழ் 12 | ஷ்ராவன - பாத்ரபத் 1938-39

முதன்மை ஆசிரியர்

**தீபிகா கச்சல்**

முதுநிலை ஆசிரியர்

**ஆ.இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

**துணை இயக்குநர்**

**திட்டம்**

**சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை**

**சென்னை -600 006.**

**தொலைபேசி : 2827 2382**

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017
  - வீரேசலிங்கம்
- சரக்கு மற்றும் சேவை வரி - ஒரு எளிய அறிமுகம்
  - R. கோவிந்தன், S. கிருஷ்ணன்
- இந்தியாவின் பொருள்கள் மற்றும் சேவைகள் வரி: ஒரு அடிப்படை மாற்றம்
  - அருண் கோயல்
- நெறியற்ற முறையில் இலாபம் ஈட்டுதல் ஜி.எஸ்.டியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்
  - கிரீஷ் சந்திரபிரசாத்
- ஜி.எஸ்.டி இந்திய வரலாற்றில் வரிவிதிப்பு முறையில் ஒரு மைல்கல். முதலீடுகளை ஈர்க்கவும் வர்த்தகத்தை எளிதில் மேற்கொள்வதை மேம்படுத்தவும் ஒரே தேசம், ஒரே வரி
  - டி.என். அசோக்
- சரக்கு மற்றும் சேவைவரி பின்னலமைப்பு (GSTN) : இந்தியாவின் மிகவும் புரட்சிகரமான வரி சீர்திருத்தத்தின் பின்புலத்தில் இருக்கும் தொழில்நுட்பசக்தி
  - பிரகாஷ் குமார்
- ஜி.எஸ்.டி புதுயுகத்தின் விடியல்
  - உபேந்தர்குப்தா
- GSTயும் எளிதாகத் தொழில்செய்தலில் அதன் தாக்கமும்
  - டானிஷ் ஏ.ஹாஷிம், வர்ஷாகுமாரி
- பொருள்கள் மற்றும் சேவைகள் வரி பெரும் மாற்றமளிக்கக் கூடியது :
  - ஆ. தேவராஜ் ரெட்டி
- ஜி.எஸ்.டியும் நுகர்வோர் அதைப் புரிந்து கொள்ளுதலும்
  - சூரஜ் ஜெய்ஸ்வால்
- மத்திய மாநில அரசுகளின் புதுநிலை
  - ஜெயந்தாராய் சவுத்ரி

Log on to **http://publicationsdivision.nic.in/**

*in collaboration with* **bharatkosh.gov.in**

# சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017

- வீரேசலிங்கம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017 என்பது இந்திய அரசியலமைப்புச்சட்டம் 1950 சட்டப்பிரிவு 301இல் தெரிவித்துள்ள 'இந்தியா முழுமைக்கும் சென்று தொழில் செய்யலாம்' என்கிற நமது சட்ட மேதைகளின் கனவினை நனவாக்கும் ஒரு சட்டமாகும். இதுவே 'இந்தியா - வேற்றுமையில் ஒற்றுமை காணும்' என்ற தாரக மந்திரத்தின் உண்மையான செயலாக்க வடிவமாகும். உலகமயம் என்றும் தாராளமயம் என்றும் உலகளாவிய பொருளாதார சீர்திருத்தத்தினை 1991 ஆம் ஆண்டு முதல் இந்தியா கடைபிடித்து வந்தாலும் அதை நனவாக்கும் இந்தியா முழுமைக்குமான முதற்சட்டம் இதுவேயாகும். எப்படியெனில், உலகமயம், தாராளமயம் இவற்றிற்கிடைப்பட்ட இந்தியமயம் என்பதைச் சாத்தியமாக்கும் முதல் முழுச்சட்டம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017 ஆகும். மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, இச்சட்டத்தினை 01.07.2017 முதல் நடைமுறைப்படுத்தியதன் மூலம் மத்திய அரசு மாநில அரசுகளும் இணைந்து கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு புதுப்பொலிவையும் உண்மையான பங்களிப்பையும் அளித்துள்ளன.

உலகிலேயே முதன் முதலில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் பிரான்ஸ் நாட்டில் 1954ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. இருப்பினும் இந்தியா போன்ற உலகத்தில் மிக அதிக மக்கள் தொகை கொண்ட, பல்வேறு மத, மொழி, இன, சாதிகள் கொண்ட ஒரு நாட்டில் இது சாத்தியப்படுமா எனும் கேள்வியே உலகத்தின் முன்னால் இருந்தது. இப்பொழுது, கேள்விக்குறி ஆச்சரியக்குறியானது விந்தையிலும் விந்தையானதாகும். ஆம், 1987ஆம் ஆண்டு அன்றைய இந்திய நிதியமைச்சர் திரு வி. பி. சிங் அவர்களால் கருக்கொண்டு முன்னெடுக்கப்பட்டு, மெதுமெதுவாக, படிப்படியாக ஒவ்வொரு அடியாக முன்னேறி 2003இல் மதிப்புக்கூட்டு வரி என்று முகமெடுத்து ஒவ்வொரு மாநில அளவில் உருவாகி, திரு. ப.சிதம்பரம் போன்றோரால் வடிவமளித்து உருவாக்கப்பட்டு, இன்றைய இந்திய நிதியமைச்சர் திரு. அருண் ஜெட்லி அவர்களால் உலகமே வியக்கும்வண்ணம் இந்தியா செய்துகாட்டிய செப்படி வித்தையாகும் இந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017. இது சுதந்திரம் பெற்றபிறகு, இந்தியா மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களிலேயே மிக முக்கியமான, உலகமே எதிர்பார்த்த, பெரும்பாலான இந்தியர்களாலேயே இப்பொழுது முடியுமா என்று எதிர்பார்க்கப்பட்ட, ஆனால் உண்மையிலேயே சாத்தியமாக்கப்பட்ட ஒரு வரிச்சீர்திருத்தமாகும். இதனால் கடந்த 01.07.2017 முதல் தேசியக்கவி சுப்பிரமணியபாரதியார் கனவு கண்டது போல் நம் தாய்நாடாகிய இந்தியா சுமார் 130 கோடி முகமுடையாள் எனினும் ஒரே நாடு, ஒரே வரி, ஒரே சந்தை எனும் சிந்தனை உடையவளாக மாறியுள்ளது. இந்தியா சுதந்திரம் அடைந்த 70 ஆண்டுகள் கடந்த பின்னர் அவரது கனவு மெய்ப்பட்டுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017, இந்தியாவில் இதுவரை ஒருபுறம் மத்திய அரசால் விதிக்கப்பட்டு வந்த உற்பத்தி வரி, உள்நாட்டு உற்பத்தியைக் காத்துவந்த கூடுதல் எதிர்சமனப்படுத்தும் வரி, சிறப்புக் கூடுதல் வரி, சேவை வரி ஆகிய வரிகளுக்கு மாற்றாகவும், மற்றொருபுறம் மாநில அரசுகளால் விதிக்கப்பட்டு வந்த மதிப்புக்கூட்டு வரி, மத்திய விற்பனைவரி, ஆடம்பரவரி, கேளிக்கைவரி, சூதாட்டவரி, வாகன நுழைவு மீதானவரி, பொருட்கள் நுழைவு மீதான வரி, விளம்பரவரி போன்ற சுமார் பதினேழு

பதினெட்டு வரிகளை ஒன்றாக இணைத்துச் சமைத்த வரிச்சட்டமாகும். ஒன்றுபடல் எனும் இலக்கணம் தான் இந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017 என்றால் மிகையாகாது. இச்சட்டத்தினை உருவாக்க மத்தியஅரசு, 29 மாநிலஅரசுகள் மற்றும் சட்டமன்றம் உள்ள புது தில்லி மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இரு யூனியன் பிரதேசங்களின் நிதியமைச்சர்கள், தொடர்புடைய அமைச்சர்கள் ஆகியோர் இணைந்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தினை உருவாக்கி, அதன் மூலம் இந்த மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் மற்றும் யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் ஆகியவற்றை இயற்றியுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் இந்தியா முழுமைக்கும் சுமார் 1300 சரக்கு மற்றும் சுமார் 90 சேவைகளுக்கு 3, 5, 12,18 மற்றும் 28 சதவீதங்களில் வரி நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்துள்ளது.

சரி, இனி இதனால் இந்திய மக்களாகிய நமக்கும், இந்திய நாட்டிற்கும் கிடைக்கப்போகும் பலன்கள் அல்லது நன்மைகள் என்னவென்று பார்ப்போமா?

1. இந்தியாவில் இதுவரை நடைமுறையிலிருந்த பல்முனை வரிகள் நீக்கப்பட்டுள்ளன.
2. வரிக்கு மேல் வரி தவிர்க்கப்பட்டுள்ளது.
3. வரி ஏய்ப்பு நாளடைவில் குறைந்து, இந்தியப் பொருளாதாரம் இனி நாலுகால் பாய்ச்சலில் புதிய உத்வேகத்தோடு ஓட்டமெடுக்கும்.
4. மாநிலங்களுக்கிடையேயான வரி வித்தியாசம் இருக்காது.
5. இந்தியாவில் தயாரிப்போம் என்பதை இனி சாத்தியப்படுத்துவோம். இந்தியா இனி உலகத்திற்கு ஒரு தொழிற்சொர்க்கமாகும்.
6. இந்தியர்களுக்கு இந்தியாவிலேயே இனி வேலைவாய்ப்புகள் கைநிறைய சம்பளத்துடன் கைகூடும்.
7. இந்தியா ஒரு தொழில்நுட்ப வேலைவாய்ப்பு மையமாகும்.
8. இந்தியா இனி உண்மையிலேயே ஒரு தேசம், ஒரு வரியுடன் ஒரே சந்தையாகும் விந்தையாகும்.
9. இந்தியா இனி ஒரு சர்வதேசப் பொருளாதார சக்தியாகும்.
10. இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி 1 - 2 சதவீதம் கூடும்.
11. இந்தியர்களின் தனிநபர் சராசரி வருமானம் உயரும்.
12. இந்தியத் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து உண்மையான சமத்துவ, சமச்சீரான வளர்ச்சியாக மாறும்.
13. இந்திய ஏற்றுமதி ஏறுமுகமாகும்.
14. ஒற்றை வரியை சாத்தியமாக்கும் ஒரே வரி நாடடெங்கும்.
15. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இனி இறங்குமுகமாகும்.
16. இந்தியச் சந்தை - ஒரே சந்தை - உலகத்திலேயே மிகப்பெரிய சந்தையாகும்.
17. பல மத்திய மாநில வரிச்சட்டங்கள் ஒன்றாகி ஒரே வரிச் சட்டமானது.
18. மாநிலங்களுக்கிடையே இருந்த உள்நாட்டு எல்லைகள், சோதனைச்சாவடிகள் இனி இல்லை என்றானது.
19. நதிகள் தேசிய மயமாக்கத்திற்கு ஒரு முன்னோட்டம், மாநிலச் சந்தைகள் இணைந்த ஒரு தேசிய சந்தை.
20. இந்தியா என்றால் தேசபக்தி மக்களின் மனம் மாநில எல்லைகளைக் கடப்பது போல், இன்று பொருளாதாரம் - ஒரே சந்தை என மாநில எல்லைகளை கடந்துள்ளது.
21. நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தால் ஒருங்கிணைந்த பொருளாதாரச் சூழல் என்னும் தறியால் ஒன்றாகக் கட்டியுள்ளோம்.

வணிகர்களுக்கும், தொழிற்துறையினருக்கும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017 வழங்கும் பலன்களாவன:

1. இதுவரை மாதந்தோறும் மத்திய, மாநில என அரசு அலுவலகங்களுக்கு சென்றுவந்த நிலை இனி இல்லை. காரணம், அனைத்தும் கணினிமயம், அதனால் காலவிரயம் அறவே இல்லை.
2. பதிவு பெறுதல் இலவசம் - கணினி வழி - மூன்றே நாட்களில்.
3. பதிவுச் சான்று நிரந்தரக் கணக்கு எண்ணை அடிப்படையாக வைத்து 15 இலக்கம் கொண்ட எண்ணாக வழங்கப்படுகிறது.
4. பதிவெண் பெற ஆண்டு மொத்த விற்பனை ரூபாய் 10 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
5. வணிகர்கள் இணக்க வரி செலுத்த, இதுவரை நடைமுறையிலிருந்த ஆண்டு மொத்த விற்பனை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூபாய் 75 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இவர்கள் மாதாந்திர நமூனாகளுக்கு பதிலாக காலாண்டு அடிப்படையில் நமூனாக்கள் சமர்ப்பித்தால் போதுமானது.
6. பெரு வணிகர்களுக்குக் கிடைக்கும் அனைத்து சலுகைகளும் இனி சிறு, குறு வணிகர்களுக்கும் கிடைக்கும்.
7. வரி செலுத்துதல் முழுவதும் இணையவழியிலான எளிய சேவை - வங்கி வழி மூலம் முழு உத்தரவாதம். சிறு வணிகர்கள் ரூபாய் 10 ஆயிரம் வரை வங்கியில் நேரடியாக வரியினை செலுத்தலாம்.
8. வெளிமாநிலக் கொள்முதலுக்கும் உள்ளீட்டு வரி வரவு கிடைக்கும். மேலும் வெளிமாநில வர்த்தகத்திற்கு படிவங்கள் ஏதும் இனி தேவையில்லை.
9. உற்பத்தி முதல் நுகர்வு வரை ஒரே குடையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் வரி மேல் வரி கிடையாது.
10. இதுவரை உற்பத்தியில் உருவான வரி, இனி நுகர்வின்மீது விதிக்கப்படுவதால் உற்பத்திச் செலவு கணிசமாகக் குறையும். இச்செயல் நமது தொழிற்துறையினர் உலகளவில் போட்டியிட்டு வெற்றிபெற வழிவகுக்கும்.
11. உற்பத்திச் செலவு குறைவதால் அது தரத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்தி பொருளின் தரம் உயர உந்துசக்தியாக மாறும்.
12. இந்தியச்சந்தை, தரம் வாய்ந்த பொருள்கள் நிறைந்த சந்தையாகும்.
13. தொழிற்சாலைகள் தரமான பொருள்களை உற்பத்தி செய்யும் தர மையங்களாகும்.
14. தொழிற்கல்வி கற்றோர் இந்தியாவில் விரும்பிப் பணியாற்றும் சூழல் உருவாகியுள்ளது.
15. பொருட்களை ஓரிடத்திலிருந்து வேறிடங்களுக்குக் கொண்டு செல்வதில் இருந்த தங்கு தடைகள் அகற்றப்பட்டு, தடையற்ற சரக்குப் போக்குவரத்து சாத்தியமாகியுள்ளது.
16. உள்ளீட்டு வரி நேர்மையாக பொருளீட்ட நினைப்போருக்கு ஒரு தங்குதடையற்ற உந்து சக்தியாகும்.
17. மாநிலங்களுக்கு இடைப்பட்ட வழங்கலுக்கும், இறக்குமதிக்கும் இனி உள்ளீட்டு வரி கிடைக்கும்.
18. ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, யூனியன் பிரதேச சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்கள் தொழில் செய்வதை எளிமைபடுத்தியுள்ளன.
19. ஏற்றுமதி செய்தால், செலுத்திய உள்ளீட்டு வரி திருப்புத் தொகையாக கிடைக்கும். அதுவும் 90 சதவீதம் ஏழே நாட்களிலும் மீதமுள்ள 10 சதவீதம் நடைமுறைகளைப் பின்பற்றி அடுத்த 60 நாட்களுக்குள் உங்கள் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும். தவறினால் வட்டியுடன் வரவு உத்தரவாதமாகும்.
20. ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு இன்வாய்ஸ்கள் கணினி மூலமாகவும் கையினாலும் எழுப்பப்படலாம். கணினி இல்லையென்ற கவலை வேண்டாம்.

21. அதேபோன்ற ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு மாதாந்திர நமூனாக்கள் மட்டும் இணைய வழிப்பதிவேற்றம் செய்தால் போதுமானது.
22. வரிவிதிப்பு முற்றிலும் சுயம்சார்ந்ததாகும்.
23. மாற்றம் சார்ந்த சட்டப்பிரிவுகள் மத்திய மாநில வரி விதிப்பு நடைமுறைகளை எளிமையாக்குகின்றன. உண்மையாக இருக்கும் உள்ளீட்டு வரிகளை இச்சட்டத்தின்கீழ் உள்வாங்கும் சக்தியுடையனவாகும்.
24. இச்சட்டத்தின்படி மேல்முறையீடு செய்தல் மற்றும் தெளிவுரைகள் பெறுதல் எளிமையாக்கப்பட்டுள்ளது.
25. இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் மத்திய மற்றும் மாநில அரசு அலுவலர்களின் நேரடியான சந்திப்பிற்கு அவசியமின்றி அனைத்து சேவைகளையும் இணையவழி மூலம் வணிகர்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வணிகர்கள் தங்களின் சேவைகளைப் பின்வரும் முறைகளில் தொடர்ந்து பெறலாம்.

1. கட்டணமற்ற தொலைபேசி சேவை-1800 103 6751.
2. இணையதள சேவைகள்
   [i] www.gst.gov.in
   [ii] www.gstcouncil.gov.in
   [iii] http://ctd.tn.gov.in
   [iv] www.cbec.gov.in
3. மின்னஞ்சல் முகவரி - helpdesk@ctd.tn.gov.in

தமிழகத்தில் இதுவரை வணிக வரித்துறை என்றழைக்கப்பட்ட துறை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்ட அமலாக்கத்திற்குப் பிறகு மாநில வரித்துறை என்றழைக்கப்படுகிறது. வணிகர்களுக்கு இச்சட்டத்தின் பிரிவுகள், விதிகள் மற்றும் இதர நடைமுறைகளை எளிய முறையில் விளக்கும் வகையில் இச்சட்ட அமலாக்கத்திற்கு முன்னும் பின்னுமாக விளக்கக் கூட்டங்கள், கருத்தரங்குகள், கலந்தாய்வுக் கூட்டங்கள் தமிழகம் முழுவதும் ஒரு வணிக வரி வட்டத்தில் குறைந்தபட்சம் இரு கூட்டங்கள், சரக அளவில் மற்றும் கோட்ட அளவில் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. வணிகர்கள் இதில் பங்குபெற்று தங்களது ஐயங்களை களைந்து எளிதாக வணிகத்தினை தொடர்ந்து செய்திடல் வேண்டும். இதற்கென ஒவ்வொரு வணிக வரி வட்டத்திலும் உதவி மையங்கள் திறக்கப்பட்டு அவை திறம்பட வணிகர்களின் ஐயங்களைக் களைந்துவருகின்றன. மேலும் ஒவ்வொரு வணிக வரிக் கோட்டத்திலும் ''Facilitation Centre" அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சென்றும் வணிகர்கள் தங்களது வினாக்களின் மூலம் விடைபெறலாம்.

இந்திய மக்களாகிய நாம், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தால் கிடைக்கப்போகும் நன்மைகளை மனதில் வைத்து அனைவரும் தவறாது வரிகளை உள்ளடக்கிய பில் என்னும் விலைப்பட்டியல்களைக் கேட்டுப்பெறுவோம். வருங்கால சமுதாயம் வளமாய் வாழ வழி வகுப்போம். தரமான சமுதாயமே இந்திய ஜனநாயகத்தின் ஊற்றுக்கண் என்பதை மெய்ப்பிப்போம். உலக அரங்கில் இந்தியாவில் பெருமையைப் பறை சாற்றுவோம். இந்தியர்களின் கனவான வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவோம்.

---

அலுவலக முகவரி:

**ஆ.நா. வீரேசலிங்கம்,**
துணை ஆணையர் (மாநில வரி),
சரகம் - 3, சென்னை (வடக்கு) கோட்டம்,
மூன்றாம் தளம், அறிஞர் அண்ணா பவளவிழா நினைவு கட்டடம்,
எண். 1, கிரிம்ஸ் சாலை, சென்னை - 600 006.

அலுவலகத் தொலைபேசி எண் - 044 28290349
அலுவலகக் கைப்பேசி எண் - 94451 95037.
தனிநபர் கைப்பேசி எண் - 98413 92554.

# சரக்கு மற்றும் சேவை வரி- ஒரு எளிய அறிமுகம்


- V. R. விஸ்வநாதன்,
- R. கோவிந்தன், S. கிருஷ்ணன்

மறைமுக வரி விதிப்பில் ஒரு மிகப்பெரிய சீர்திருத்தம்,30.06.2017 அன்று நள்ளிரவு பாராளுமன்ற மைய மண்டபத்தில் அரங்கேறியது. அந்த சமயம் இந்திய ஜனாதிபதியும், பிரதமரும் கை கோர்த்து ஜி எஸ் டி என்று சுருக்கமாக அழைக்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை நாடு முழுவதும் அமல்படுத்தினர். மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்ட நெடுநாள் முயற்சி அன்று நடைமுறைப்படுத்தப்பட்டு 01.07.2017 முதல், ஒரு நாடு, ஒரே சந்தை, ஒரு வரி என்ற பொருளாதாரக்கனவு நனவானது. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சீர்திருத்தம் பற்றி நாம் முழுவதும் புரிந்து கொள்ள முதலில் நாம் நம் பழைய மறைமுக வரி விதிப்பை பற்றியும், அதிலிருந்து இந்த புதிய சரக்கு மற்றும் சேவை வரி எவ்விதம் மாறுபட்டது மற்றும், மேலானது என்பதைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

## பழைய வரி விதிப்பின் சில குறைபாடுகள்


இந்தியாவில் சரக்குகள் மற்றும் சேவைகளின் மேல் பல்வேறு விதமான வரிகளை மாநில மற்றும் மைய அரசுகள் வசூலித்து வந்தன. ஒரு பொருள் உற்பத்தியாவதில் இருந்து அது நுகர்வோரை கடைசியாக சென்றடையும் வரை உற்பத்தி வரி, மதிப்புக்கூட்டு வரி, மைய விற்பனை வரி, நுழைவு வரி உள்ளிட்ட பல்வேறு விதமான வரி விதிப்பிற்கு உட்படுத்தபபட்டன. உற்பத்தி மற்றும் சேவைகள் மீதான வரிகளை மத்தியஅரசும், விற்பனை மீதான வரியை அரசும் வசூலித்து வந்தன. இதனால் சரக்கு நுகர்வோரை சென்றடையும் முன் பல விதமான வரி விதிப்பிற்கு உள்ளாகியது. சீரான ஒரே வரி விகிதம் இல்லாமல் போனது. மேலும் இந்த முறை, வரி மேல் வரி விதிப்பு செய்ய அனுமதித்தது. உதாரணமாக விற்பனை வரி, உற்பத்தி வரி உள்ளடக்கிய மதிப்பின் மீதே விதிக்கப்பட்டது.

### பழைய வரி விதிப்பு முறை - பல வரிகள்




மற்றொரு குறைபாடு என்னவென்றால், சரக்கு பல உற்பத்தி மற்றும் விற்பனை நிலைகளை கடந்து நுகர்வோரை சென்றடைவதால், ஒரு சரியான வரி விதிப்பு முறை, ஒவ்வொரு நிலையிலும் நிகழும் மதிப்பு கூட்டலுக்கு மட்டும் வரி விதிக்க வழி செய்ய வேண்டும். இது முந்தைய நிலையில் செலுத்தப்பட்ட வரிகளை முழுவதுமாக உள்ளீட்டு வரி ஆதாயமாக, வரி செலுத்துவோரை எடுத்துக்கொள்ள அனுமதிப்பதன் மூலமே சாத்தியம். ஆனால் பழைய வரி விதிப்பு முறையில் மாநில வரிகளை மத்திய வரி செலுத்தவும், மத்திய வரிகளை மாநில வரி செலுத்தவும் உள்ளீட்டு வரி ஆதாயமாக பயன் படுத்த இயலாது. மேற்சொன்ன இரண்டு காரணங்களும் சரக்கு மற்றும் சேவைகளின் நுகர்வோரை சென்றடையும் விலையை உயர்த்தின.

## ஜி எஸ் டி வரி




ஜிஎஸ்டி என்பதை நுகர்வு அல்லது பயன்பாட்டு வரி என்றும் புரிந்து கொள்ளலாம். எனவே, ஒரு சேவை அல்லது பொருள், நுகர்வோரால் பயன்படுத்தப்படும்வரை இந்த வரியின் கரங்கள் நீளும். தற்போது அமல் செய்யப்பட்ட ஜீ எஸ் டி வரி முந்தைய பல்வேறு மறைமுக வரிகளை ஒன்றிணைத்து சரக்கு மற்றும் சேவை நுகர்வோரை சென்றடையும் முன் ஒவ்வொரு நிலையிலும் நிகழும் மதிப்பு கூட்டலை மட்டும் வரிக்கு உட்படுத்துகிறது. இது நுகர்வோர் இலக்கை சென்றடையும் வரியாகும். இதனால் ஒரு சரக்கு அல்லது ஒரு சேவை இந்தியா


முழுவதும் ஒரே வரி விகிதத்தில் வரி விதிப்புக்கு உட்படுத்தப் படுகிறது. மேலும் ஒவ்வொரு நிலையிலும் முந்தைய நிலையில் செலுத்த பட்ட வரி உள்ளீட்டு வரி ஆதாயமாக முற்றிலும் அனுமதிக்கப்பட்டு அவை வரி செலுத்துவோரின் வெளியீட்டு வரி செலுத்த பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இதன் மூலமாக ஒரு தேசம் ஒரு வரி என்ற மேம்பட்ட இலக்கை எட்ட வழிவகை செய்கிறது. ஜி எஸ் டி வரி நடைபெறும் சரக்கு மற்றும் சேவை விநியோக முறை பொறுத்து மாறுபடும் . ஒரு மாநிலத்திற்குள்ளேயே நிகழும் விநியோகத்திற்கு மத்திய வரி (CGST) மற்றும் மாநில வரி (SGST) விதிப்புக்கு உட்படுத்தப்படும். இரண்டு மாநிலங்களுக்கு இடையில் நிகழும் விநியோகங்களுக்கும் மற்றும், ஏற்றுமதி இறக்குமதி விநியோகங்களுக்கும் ஒருங்கிணைந்த ஜி எஸ் டி (IGST) விதிக்கப்படும்.

விநியோகத்தில் ஈடுபடும் நபரின் விநியோக மதிப்பு 20 இலட்ச ரூபாய் அளவை தாண்டுகையில் அவர் ஜி எஸ் டி வரி செலுத்த முறைப்படி பதிவு செய்ய வேண்டும். இந்த 20 இலட்ச ரூபாய் விலக்கு, சிறப்பு மாநிலங்களுக்கு, 10 இலட்ச ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த விலக்கு சில விதமான விநியோகங்கள் செய்பவருக்கு பொருந்தாது. உதாரணமாக மாநிலங்கள் இடையிலான விநியோகம் செய்பவர்கள் முதலிலிருந்ததே பதிவு செய்து வரி செலுத்த வேண்டும். விவசாய பொருட்கள் உற்பத்தி விநியோகம் செய்பவரும் முழுவதும் வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களை மட்டும் விநியோகம் செய்பவரும் ஜி எஸ் டி பதிவு செய்யவோ வரி செலுத்தவோ அவசியம் இல்லை. ஐந்து வகையான பெட்ரோலிய பொருட்கள் விநியோகம் தாற்காலிகமாகவும், மனித நுகர்வுக்கு பயன்படும் மது விநியோகம் நிரந்தரமாகவும் இந்த சட்டத்தில் இருந்து விடுவிக்கப்படுகிறது.

### ஜி எஸ் டி வரி விகிதங்கள்

ஜி எஸ் டி தற்போது சரக்கு மற்றும் சேவைகள் மீது 6வரி விகிதங்களில் விதிக்கப்படுகிறது. அவை முறையே 0,3,5,12,18 மற்றும் 28 ஆகியவை. பெரும்பாலான அத்தியாவசிய மற்றும் உணவு பொருட்களும் 0% மற்றும் 5% விகிதத்தில் வரி விதிப்புக்கு உட்படுத்த படுகின்றன.தங்கம் மற்றும் விலை உயர்ந்த உலோகங்கள் 3% வரி விதிப்பின் கீழ் உள்ளன.அத்தியாவசிய சேவைகள் 5% மற்றும் 12% ம் , மற்றவை 18% ஜி .எஸ் டி விதிக்கப்படுகிறது. இதனால் புதிய வரி விதிப்பு விலைவாசி ஏற்றத்தை ஏற்படுத்தி பொது மக்களுக்கு சுமையாக மாறாமல் வகை செய்யப்பட்டது. ஏற்றுமதி விநியோகம் 0% ஜீ எஸ் டி மற்றும் முழு உள்ளீட்டு வரி ஆதாயம் பெற அனுமதிக்கப்படுகிறது.

### ஜி எஸ் டியின் பயன்கள்




ஜி எஸ் டி அமலுக்கு வருவதன் மூலம் பல தற்காலிக மற்றும் நிரந்தர நன்மைகள் விளையும். வரி விதிப்பு என்பது வெளிப்படையானதாக மாறிவிடும், எளிதானதாக இருக்கும். எனவே எந்த பொருளுக்கு வரி விலக்கு உள்ளது, எதற்கு வரி விலக்கு இல்லை என்பது போன்ற தகவல்கள் எளிதாக அனைவருக்கும் புரியும். வரி வசூலுக்கு உதவும். இதனால் அரசின் வருமானம் அதிகரிக்கும். வரி விலக்கு லாபங்களை பார்த்து அந்த பகுதிகளில் தொழில் தொடங்காமல், தங்கள் தொழிலுக்கு ஏற்ற இடங்களில் நிறுவனங்களை தொடங்க முடியும். நிறுவனங்கள் இடையே ஆரோக்கிய போட்டி அதிகரிக்கும். விநியோகம் செய்பவர்களுக்கு, ஒரு எளிய ஒரு நாடு ஒரு சந்தை ஒரு வரி என்ற வரி விதிப்பக முறை அமைகிறது. முழு உள்ளிட்டு வரி ஆதாயத்தால் நிறுவனங்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் பயன் பெறுவர். அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் வரி விதிப்பு விலக்கு இருப்பதால் நுகர்வோர் பயன் அடைவர். நுழைவு வரி ரத்தால் நாடு முழுவதும் சரக்குகள் தடை இன்றி வேகமாய் சென்றடையும். வரி விதிப்பு ஆன்லைன் கண்கணிப்பால் வரி ஏய்ப்பு மற்றும் ஊழல் மறைந்து இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். இந்த வரி விதிப்பு முறையால் இந்தியாவல்லரசாகும் நாள் விரைவில் வரும்.

- **V. R. விஸ்வநாதன்**, உதவி ஆணையர்

– **R. கோவிந்தன், S. கிருஷ்ணன்,** கண்காணிப்பாளர்கள் GST பவன் சென்னை.

# இந்தியாவின் பொருள்கள் மற்றும் சேவைகள் வரி : ஒரு அடிப்படை மாற்றம்

- அருண் கோயல்

ஜூலை மாதம் முதல் தேதி நள்ளிரவில் நாடாளுமன்ற மத்திய மன்றத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி திரு. பிரனாப் முகர்ஜி முன்னிலையில் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்தியாவின் பொருள்கள் மற்றும் சேவைகள் வரியை (ஜிஎஸ்டி) துவக்கி வைத்தார். இது, உண்மையிலேயே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அடிப்படை மாற்றமாகும் - ஏனெனில் இந்தியா, ‘‘ஒரே நாடு, ஒரே வரி, ஒரே சந்தை என்ற பாதையில் பயணத்தைத் துவக்கியது. உலகளாவிய அனுபவங்களின்படி பொருள்கள் மற்றும் சேவைகள் வரி செயலாக்கத்தால் பல்வேறு தரப்பினருக்கு நன்மைகள் விளைந்துள்ளன. பலகட்ட வரிகளைத் தவிர்ப்பதாலும், திறமையான செயல்பாட்டாலும், நுகர்வோர் பயன்பெறுவர். தொழில் துறையினருக்கும், வணிகர்களுக்கும் பயன் உண்டு - நாடெங்கிலும் ஒரே சீரான ஒரே மறைமுக வரி, இடுபொருள்களுக்கான வரிகளுக்கான உடனடி பலன் இவற்றோடு மாநிலங்களுக்கிடையேயான எல்லையில் வரி சார்ந்த தடுப்பு நிறுத்தங்கள் அகன்றுள்ளன. பொருள்களை உற்பத்தி செய்து பிற பகுதிகளுக்கு அனுப்புவதற்கான போக்குவரத்து செலவு குறைவு, கச்சாப் பொருள்கள் கொள்முதலிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருள்கள் நுகர்வோரிடம் சென்றடையும் வரை கணினிசார் அமைப்புகள் மற்றும் வரி வசூலிப்பவர்களோடு குறைந்தபட்ச போக்குவரத்து ஆகியவை ஏற்பட்டுள்ளன. பொருள் உற்பத்தியாளர்கள் மூலப் பொருட்களை கொள்முதல் செய்யவும், உற்பத்திக்கான கிடங்குகளை எங்கே நிறுவுவது போன்ற அறிவார்ந்த முடிவுகளை எடுக்கவும் முடியும். மத்திய, மாநில அரசுகளுக்கு வரிசார் வருவாய் உயர்வதோடு, வரிகள் வசூலிப்பதற்கான செலவுகளும் குறையும். ஏற்றுமதியாளர்களும் சிறப்பாகப் போட்டியிடமுடியும், ஏனெனில், அந்தப் பொருட்களுக்கு வரிகள் இருக்காது. இந்தியாவில் தொழில் - வியாபாரம் துவங்குவது எளிதாக்கப்பட்டுள்ள நிலையில் ‘‘இந்தியாவில் உற்பத்தி செய்வோம்’’ என்ற திட்டம் வலுப்பெறும். மலிவான பொருட்களின் மீது, அடிப்படை சுங்கவரியோடு ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவை வரி விதிக்கப்படுவதன் மூலம் அவைகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும். இவ்வனைத்து பயன்களோடு, மத்திய காலகட்டத்திலும், நீண்ட காலகட்டத்திலும் உள்நாட்டு மொத்த உற்பத்தியின் வளர்ச்சி மிகும்.

### அரசியல் சட்டத் திருத்தம் தேவை :

ஒரு சில நாடுகளைத் தவிர்த்து, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்பட்ட நாடுகளில் அவை மத்திய அரசினாலோ, மாநில அரசுகளாலோ யாராவது ஒருவரால் மட்டுமே விதிக்கப்படுகிறது. ஜிஎஸ்டி வரி விதிப்பிற்கு முன்னால், அரசியல் சட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகளுக்கான நிதி நிலை அதிகாரங்கள், மத்தியத் தொகுப்பு மற்றும் மாநிலங்கள் தொகுப்பு என்று தெளிவாகப் பிரிக்கப்பட்டிருந்ததால், அரசியல் சட்டத் திருத்தம் தேவைப்பட்டது. கஞ்சா, பிற போதைப் பொருட்கள் மற்றும் மக்கள் உட்கொள்ளும் மதுபானங்கள் தவிர்த்து, மற்ற பொருள்கள் உற்பத்தி மீது, வரிவிதிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது. இப்பொருட்களை விற்பனை செய்யும் போது அதன்மீது வரிவிதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு இருந்தது. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு விற்கப்பட்ட பொருட்களின் மீது, மத்திய விற்பனை வரி விதிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது. ஆனால், இந்த வரியை மாநில அரசுகள் வசூலித்து, தங்களிடமே வைத்துக்கொள்வார்கள். சேவைகளைப் பொறுத்த வரையில் மத்திய அரசு மட்டுமே, சேவை வரி விதிக்கமுடியும். அரசியல் சட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகள் தனித்தனியான பொறுப்புக்களை நிர்வகிக்கும் நிலையில் அதற்காக அவர்களுக்கு நிதி தேவைப்படுகிறது. ஆகவே, மத்திய மாநில அரசுகள் ஒரே சமயத்தில் ஜிஎஸ்டி வரி விதித்து, வசூலிக்க ஏதுவாக அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டியிருந்தது. இந்தியாவில், இப்படி இருவரும் ஜிஎஸ்டி வரி விதிக்கும் தன்மை, அரசிலமைப்பு சட்டத்தின் கீழ் செயல்படும் கூட்டு ஆட்சிக்கு உகந்ததாகும்.

### இந்தியாவில் ஜிஎஸ்டியின் பயணம் :

ஜிஎஸ்டி முதன்முதலில் 1954இல் பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது 160 நாடுகளில் செயல்பட்டு வருகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு ஜிஎஸ்டியால் பல நன்மைகள் விளையும் என்பதால், இதனை அறிமுகப்படுத்த அரசியல் முயற்சிகள் பல ஆண்டுகளாக செய்யப்பட்டு வந்தன. பல ஆண்டுகளில் பல அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள், மற்றும் மத்திய மாநில அலுவலர்கள் ஆகியோரின் முயற்சியால் இந்த ஜிஎஸ்டி பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஜிஎஸ்டி வரி விதிக்கும் எண்ணம் 2000வது ஆண்டில்

பிரதமர் திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களால் துவங்கப்பட்டது. அவர், மேற்குவங்க மாநில நிதியமைச்சர் திரு. அசிம் தாஸ் குப்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்து, ஜிஎஸ்டி வரி முன்மாதிரியை தயாரிக்க சொன்னார். 2003இல் திரு. வாஜ்பாய் அரசு, திரு. விஜய் கேல்கர் தலைமையில் வரிகள் சீர்திருத்தம் சார்ந்த மற்றொரு செயற்குழுவை அமைத்தது. பிப்ரவரி 28, 2006-07க்கான தமது பட்ஜெட் உரையில் அன்றைய நிதியமைச்சர், ஜிஎஸ்டி வரி ஏப்ரல் 1, 2010லிருந்து செயல்படும் என்று அறிவித்தார். மாநிலங்கள் விதித்துவந்த மதிப்புக்கூட்டு வரியை உருவாக்கிய மாநில நிதியமைச்சர்களின் அதிகாரக் குழு இந்தப்புதிய பொருள்கள் மற்றும் சேவைகள் வரியின் அமைப்பையும் நடைமுறைப்படுத்தும் திட்டத்தையும், வடிவமைக்குமாறு பணிக்கப்பட்டது. இதற்காக, மத்திய மாநில அரசுகளின் அலுவலர்களின் குழு ஒன்று அமைக்கப்பட்டு, ஜிஎஸ்டி சார்ந்த சலுகைகள், வரியின் அளவுகள், சேவைகள் மீதான வரிகள் மற்றும் ஒரு மாநிலத்திலிருந்து, பிற மாநிலங்களுக்குச் செல்லும் பொருட்கள் மீதான வரிகள் பற்றி ஆராய பணிக்கப்பட்டது. இந்தக் குழு மேற்கொண்ட விவாதங்களின் அடிப்படையில் நவம்பர் 2009இல் இந்த உயர்மட்டக்குழு ஜிஎஸ்டி சார்ந்த தனது முதலாவது விவாத அறிக்கையை வெளியிட்டது. இந்த முதல் விவாத அறிக்கையில் ஜிஎஸ்டியின் முக்கிய அம்சங்கள் விவரிக்கப்பட்டு, அவை, இப்போது விதிக்கப்பட்டிருக்கும் ஜிஎஸ்டி வரிக்கு ஆதாரமாக அமைந்தன.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்துவதற்கு அரசியல் சட்டத் திருத்தம் தேவைப்பட்டதால், அதற்கான அரசியல் ஒருமித்த கருத்து உருவாக பல ஆண்டுகளாயின. தற்போதைய அரசு பதவி ஏற்றபின் ஜிஎஸ்டியை அறிமுகப்படுத்தும் பணி துரிதமாக்கப்பட்டது. அரசியல் சட்ட (122வது) திருத்த மசோதா 2014 மக்களவையில் டிசம்பர் 19, 2014இல் அறிமுகப்படுத்தப்பட்டு, மே 2015இல் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்ட முன்வடிவு, மாநிலங்கள் அவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின் அது, மாநிலங்களவை மற்றும் மக்களவையில் கூட்டு தனி குழுவுக்கு, மே 14, 2015இல் அனுப்பி வைக்கப்பட்டது. இந்தக் குழு, ஜூலை 22, 2015இல் தனது அறிக்கையை சமர்பித்தது. அதற்குப்பிறகு, வேகமான முன்னேற்றம் ஏற்பட்டது. அனைத்து கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் மாற்றியமைக்கப்பட்ட அரசியல் சட்டத் திருத்த மசோதா ஆகஸ்டு 1, 2016இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சட்ட முன் வடிவு மாநிலங்கள் அவையில் ஆகஸ்டு 3, 2016லும் மக்களவையில் ஆகஸ்டு 8, 2016லும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேவையான அளவு, மாநில சட்டமன்றங்கள், இந்த சட்ட முன்வடிவை, ஏற்றுக்கொண்டதற்குப்பின்னும், ஜனாதிபதியின் ஒப்புதலுக்குப் பிறகும், செப்படம்பர் 8, 2016இல் அரசியல் (101வது திருத்த) சட்டம் 2016 அறிவிக்கப்பட்டது. இந்த அரசியல் சட்டத் திருத்தத்திற்குப்பின் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**அரசியல் சட்ட (101வது திருத்தம்) 2016 :**

இந்த அரசியல் சட்டத் திருத்தத்தின்படி மத்திய மாநில அரசுகள், பொருட்கள் மற்றும் சேவைகள் வரியை விதித்து வசூலிக்க முடியும். ஜிஎஸ்டி வரி என்பது மக்கள் உட்கொள்ளும் மதுபானங்கள் தவிர பிற பொருட்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படும் வரியாகும். ஆகவே, அரசியல் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளபடி மக்கள் பயன்படுத்தும் மதுபானங்களுக்கு ஜிஎஸ்டி வரி இருக்காது. மற்றொரு வகையில் ஐந்து வகையான பெட்ரோலியம் பொருட்கள், அதாவது, பெட்ரோலிய கச்சா எண்ணெய், பெட்ரோல், உயர் வேக டீசல், இயற்கை எரிவாயு, விமானங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள் ஆகியவற்றின் மீது தற்காலிகமாக ஜிஎஸ்டி வரி விதிக்கப்படவில்லை. இவற்றின் மீது இந்த வரி எப்போதிலிருந்து துவங்கும் என்று ஜிஎஸ்டி கவுன்சில் பிறகு முடிவு செய்யும். ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்குச் செல்லும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீது மத்திய அரசு ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி வரியை விதிக்கும். இதன்படி ஜிஎஸ்டி வரி என்பது, கடைசியாக ஒருவர் ஒரு பொருளை அல்லது சேவையை பயன்படுத்தும் போது, அதன் மீது விதிக்கப்படும் வரியாகும். ஆகவே, ஒரு பொருள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குச் செல்லும் போது உற்பத்தியாளர் / வியாபாரி கொடுக்கும் எல்லா வரிகளுக்கும் இழப்பீட்டுப் பயன்கள் கிடைக்கும்.

**ஜிஎஸ்டி கவுன்சில்**

இந்த அரசியல் சட்டத் திருத்தத்தின் சிறப்பு அம்சமாக, ஜிஎஸ்டி கவுன்சில் விளங்கும். இந்த கவுன்சிலின் தலைவராக, மத்திய நிதியமைச்சர் இருப்பார். உறுப்பினர்களாக, மத்திய நிதி இணை அமைச்சர் மற்றும் டெல்லி புதுச்சேரி யூனியன் பிரதேசங்கள் உள்ளிட்ட 29 மாநிலங்களின் நிதியமைச்சர்கள் இருப்பார்கள். இந்த ஜிஎஸ்டி கவுன்சிலின் வழிகாட்டு நெறியாக இருப்பது, மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கிடையிலும், மாநிலங்களுக்கு இடையேயும் ஒருமித்த கருத்தோடு கூடிய பொருள்கள் மற்றும் சேவை சந்தையை உருவாக்குவதாகும். இந்த கவுன்சில் மத்திய மாநில அரசுகளுக்கு கீழ்க்காணும் பரிந்துரைகளை அளிக்கும்.

(i) ஜிஎஸ்டிக்குள் இணையும் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சிகள் விதிக்கும் வரிகள், தீர்வைகள் மற்றும் கூடுதல் வரிகள் ;

(ii) ஜிஎஸ்டி சேவைக்குட்பட்ட மற்றும் அதிலிருந்து விலக்கப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகள் ;

(iii) எந்தத் தேதியிலிருந்து பெட்ரோலிய கச்சா எண்ணெய், பெட்ரோல், உயர் வேக டீசல், இயற்கை எரிவாயு மற்றும் விமானங்களில் பயன்படுத்தப்படும் எரிபொருள் ஆகியவற்றின் மீது ஜிஎஸ்டி வரி விதிக்கப்படும் என்பது.

(iv) மாதிரி ஜிஎஸ்டி சட்டங்கள், வரி விதிப்பிற்கான அடிப்படைக் காரணங்கள், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டியை மத்திய மாநில அரசுகளுக்கு எந்த அளவில் பிரித்துக் கொடுப்பது மற்றும் எந்த இடத்திலிருந்து வழங்கப்படுகிறது என்பதற்கான அடிப்படைத் தன்மைகள் ;

(v) எந்த அளவுக்குக் கீழே உள்ள பொருட்களுக்கும் சேவைகளுக்கும் ஜிஎஸ்டியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

(vi) ஜிஎஸ்டி சார்ந்த வரி அளவுகள் மற்றும் அடிப்படை விகிதங்கள் ஆகியவை ;

(vii) இயற்கைப் பேரிடர் மற்றும் பேரிடர் ஏற்படும் போது, கூடுதல் வருவாய்க்காக விதிக்கப்படும் சிறப்பு வரி விகிதம் / விகிதங்கள் ;

(viii) வடகிழக்கு மாநிலங்கள், ஜம்மு காஷ்மீர், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களுக்கான சிறப்பு ஷரத்துக்கள் ;

(ix) ஜிஎஸ்டி கவுன்சில் தீர்மானிக்கும் மற்ற எந்த நடவடிக்கைக்கும்.

அரசியல் சட்டத்திருத்தத்தின்படி ஜிஎஸ்டி கவுன்சில் மேற்கொள்ளும் ஒவ்வொரு முடிவும், கவுன்சிலில் அன்றன்று பங்குபெற்று வாக்களிக்கும் ¾ பகுதி உறுப்பினர்களின் பெரும்பான்மையுடன் இருக்க வேண்டும். இந்தப் பெரும்பான்மை, மத்திய மாநில அரசுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி இருக்க வேண்டும். அதன்படி, மத்திய அரசின் வாக்குக்கு 1/3 மதிப்பும், மாநிலங்களின் பங்கு 2/3 பகுதியாகவும் இருக்கும். இந்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெறுவதற்கு அடிப்படையான பதிவியல், மொத்த உறுப்பினர்களில் பாதியாக இருக்கும். வாக்களிக்கும் உறுப்பினர்களின் மதிப்பு, மத்திய அரசோ, மாநிலங்களோ தன்னிச்சையாக எந்தவொரு முடிவையும் மேற்கொள்ள இயலாத வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசுக்கு 33 சதவிகித வாக்கு அதிகாரம் மட்டுமே உள்ளதால், கவுன்சிலின் முடிவுக்கு மாநிலங்களின் ஒப்புதலும் அவசியமாகிறது. ஆனால், இதுவரை கவுன்சிலில் மேற்கொள்ளப்பட்டுள்ள எல்லா முடிவுகளும் ஒருமித்த எண்ண முடிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இதுவரை வாக்களிக்கும் நிலைமை ஏற்படவில்லை.

### ஜிஎஸ்டி கவுன்சிலின் செயல்முறை

ஜூலை 1, 2017 அன்று ஜிஎஸ்டி செயல்படுத்தப்பட்டதற்கு முன்பு நடைபெற்ற 18 கூட்டங்களில் ஒருமித்தக் கருத்து ஏற்பட இயலாது என்று நினைக்கப்பட்ட பல விஷயங்களில் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது. நடைபெற்ற ஒரு சில கூட்டங்களிலேயே, மத்திய ஜிஎஸ்டி, மாநிலங்களுக்கான ஜிஎஸ்டி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி, மாநிலங்களுக்கான இழப்பீடு, மற்றும் ஜிஎஸ்டி சார்ந்த பல நியதிகள் சார்ந்த மாதிரி சட்ட முன்வடிவுகளை இந்தக் கவுன்சில் வழங்கியுள்ளது. எதிர்மறை அதிகாரங்கள் மற்றும் வரி கொடுப்பவர்களை மத்திய மாநிலங்களுக்கு பிரிப்பது போன்ற சிக்கலான விஷயங்களில் உண்மையிலேயே விட்டுகொடுக்கும் போக்கு காணப்பட்டது. வெவ்வேறு மாநிலங்களில் இருந்த, பலவகையான மதிப்புக் கூட்டு வரிகளுக்கு பதிலாக எல்லா பொருள்களும், சேவைகளும் எளிதான முறையில் ஒரு சில அடுக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரசியல் சட்ட அமைப்பான ஜிஎஸ்டி கவுன்சிலில் மத்திய மாநில அரசுகள், தங்களுடைய இறையாண்மைகளை ஒன்றிணைத்து, தங்களுடைய நிதி ஆதாயங்களை ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து உண்மையிலேயே சிறப்பாகச் செயல்படும் ஒரு மாதிரி கூட்டாட்சியாக விளங்குகிறது. இந்தக் கவுன்சில், நிதி மற்றும் வரி சார்ந்த முடிவுகளில் நம்ப முடியாத அளவிற்கு ஒருமித்த கருத்தை எட்டியுள்ளது. மத்திய மாநில அரசுகளுக்கிடையே மற்ற துறைகளிலும் ஏற்பட வேண்டிய ஒருமித்த நிலைக்கு இது ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

### மாநிலங்களுக்கு இழப்பீடு

ஜிஎஸ்டி வரி என்பது பொருட்கள் மற்றும் சேவைகள் சென்றடையும் கட்டத்தில் விதிக்கப்படும் வரியாதலால், பொருள்களை உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு இது பாதகமாக விளங்கும் என்ற கருத்து சில மாநிலங்களுக்கிடையே இருந்தது. ஆகவே, அரசியல் சட்ட 101வது திருத்த சட்டம் 2016இன்படி ஜிஎஸ்டி வரி செயல்படுத்தப்படுவதால் இழப்பு ஏற்படும் மாநிலங்களுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரையின்படி பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம், 2017 இயற்றப்பட்டுள்ளது. இதன்படி,

மாநிலங்களின் வருவாயின் அளவு, 2015-16ஆம் ஆண்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு, ஆண்டிற்கு 14 சதவிகித உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் கட்டத்தில் அதனை ஈடு செய்ய தீர்வை வரி விதிக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தீர்வை, ஆடம்பரப் பொருட்கள் மற்றும் அநாவசியப் பொருட்கள் மீது விதிக்கப்படும்.

**வரி விகிதங்களை முடிவு செய்வது :**

வரி விகிதங்களை நிர்ணயிப்பது மூன்று அடிப்படை நோக்கங்களை கொண்டிருந்ததால், ஜிஎஸ்டி கவுன்சிலுக்கு மிகவும் சிக்கலாக இருந்தது. முதலாவது, ஏழைகளும் பாதிப்புக்குள்ளான மக்களும் பயன்படுத்தும் மற்றும் பெருமளவிலான அடிப்படைத் தேவைப் பொருட்களின் மீதான வரி மக்களின் ஏற்புத்தன்மைக்கு ஏற்றவாறு அமைய வேண்டும். இரண்டாவதாக, மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் ஒட்டுமொத்த வருவாய் குறையக்கூடாது. மூன்றாவதாக, பொருட்கள் மற்றும் சேவைகளின் மீது தற்போதுள்ள வரி அளவு பெருமளவு உயரவோ, குறையவோ கூடாது. இப்படிப்பட்ட எல்லா அடிப்படைத் தன்மைகளின் அடிப்படையில், நடத்தப்பட்ட நீண்ட விவாதங்களுக்குப் பிறகு, ஜிஎஸ்டி கவுன்சில் 5%, 12%, 18% மற்றும் 28% என்ற நான்கு அடுக்கு வரிகளை முடிவு செய்தது. இது அல்லாமல், வரி விலக்கப்பட்ட பொருட்களும், சேவைகளும் உள்ளன.

**நடுத்தர, சிறு தொழில்களுக்கு ஆதரவு :**

இந்த புதிய ஜிஎஸ்டி அமைப்பில் மத்திய மற்றும் சிறு தொழில்களின் பிரச்னைகள் சார்ந்த ஷரத்துக்கள் உள்ளன. இதன் அடிப்படையில் ஒரு நிதி ஆண்டில் ரூ.20 இலட்சத்திற்கும் குறைவான மொத்த விற்பனை உள்ள சில சிறப்புத் தகுதி மாநிலங்களில் ரூ.10 இலட்சம் உள்ள வியாபார நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அப்படிப்பட்ட தொழில்கள் ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டியதில்லை. இது அல்லாமல், பதிவு செய்யப்பட்ட ஒருவர், முந்தைய நிதியாண்டில், ரூ.75 இலட்சத்திற்கு மேற்படாத விற்பனை உள்ளவர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சுருக்கமான அறிக்கைப் படிவத்தை சமர்ப்பித்தால் போதும். இந்தத் திட்டத்தின்கீழ், பொருள்களை விற்பனை செய்வோரும், உற்பத்தி செய்வோரும், உணவு விடுதிகள் சார்ந்த வரி செலுத்துவேரும் பயன் பெறுவர். இந்தத் திட்டத்தின்கீழ் உற்பத்தியாளர்கள் 1% வரியும், உணவு விடுதிகள் 2.5 சதவிகிதமும், வியாபாரிகள் 0.5% வரியும் மொத்த விற்பனை அளவில் கொடுப்பார்கள். ஆனால், இந்தத் திட்டம் மாநிலங்களுக்கிடையே சேவைகளை வழங்குபவர்களுக்கும், வலைதளங்கள் மூலம் விற்பனை செய்பவர்களுக்கும் பொருந்தாது.

**வரி கசிவுகளையும், ஏய்ப்புகளையும் சமாளித்தல்**

இந்திய ஜிஎஸ்டி அமைப்பின் கீழ் விலைப்பட்டியல்களின் பொருத்தம் அவசியம். ஒரு பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக வாங்கப்பட்ட மூலப் பொருள்களுக்கு கொடுக்கப்பட்ட வரியும் அதை விற்றவர்கள், காட்டிய வரிவிதிப்பும் ஒன்றாக இருக்கவேண்டும். பொருள்கள் மற்றும் சேவைகள் வரி சார்ந்த கணினி உள் கட்டமைப்பு வசதிகள் மூலம் மாதத்திற்கு 300 கோடி விலைப்பட்டியல்களை ஒப்பிட்டுப் பார்க்கமுடியும். இது, ஒரு தானியங்கி செயல்பாட்டு முறையாகும். இதனால், வரிசார்ந்த மோசடிகளும், ஏய்ப்புகளும் தடுக்கப்பட்டு மேன்மேலும் பல வணிகங்கள், முறைப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் இணையும். இந்த புதிய ஜிஎஸ்டி அமைப்பில் வரி செலுத்துவோர் ஒரே ஒரு வலைதளத்தில் பதிவு செய்து, படிவங்களை சமர்ப்பித்து வரிகளைச் செலுத்த முடியும். ஒரு சில அரிய நிகழ்வுகளில், வரி செலுத்துவோர் வரி வசூலிப்பவர்களோடு தொடர்பு கொள்ள நேரிடும்போது ஒரே ஒரு அமைப்போடு தொடர்பு கொள்வார். அது, மாநில அரசாகவும் இருக்கலாம் அல்லது மத்திய அரசாகவும் இருக்கலாம். அனைத்து ஜிஎஸ்டி செயல்பாடுகளுக்கும் யாராவது ஒருவர் தீர்வு காணும் வரையில் மற்றவருக்கான அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வரி செலுத்துவோர், வரி செலுத்துவதைத் தவிர்க்கமுடியாததால், வரி வசூலிப்பவர்களோடு தொடர்பு குறைந்து இலஞ்சமும் தவிர்க்கப்படும்.

**முடிவாக**

ஜூலை 1, 2017இல் செயல்படுத்தப்பட்ட இந்திய ஜிஎஸ்டி வரி அமைப்பு வியாபாரம் செய்யப்படும் முறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் பங்கு பெறும் அனைவரும் இந்தச் சீர்திருத்தத்தை வரவேற்றிருக்கிறார்கள். இந்தப் புதிய ஜிஎஸ்டி அமைப்பின் மூலம் மேலும் பல வணிகங்கள், முறைப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் இணையும். இப்படிப்பட்ட பெரிய மாற்றத்தால் சில தொல்லைகள் ஏற்படலாம். இந்த மாற்றம் எளிதாக ஏற்பட மத்திய மாநில அரசுகளின் வரி வசூலிக்கும் அமைப்புகள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த சிறு தொல்லைகளால் ஏற்படும் பெரும் பலன்கள் இந்தியப் பொருளாதாரத்திற்கு பல ஆண்டுகளுக்குப் பயன்களை அளிக்கும்.

- **அருண் கோயல்**, ஜிஎஸ்டி கவுன்சிலில் பணியாற்றும் கூடுதல் செயலரும் இந்திய ஆட்சிப்பணி அலுவலரும் ஆவார்.

# நெறியற்ற முறையில் இலாபம் ஈட்டுதல் - ஜி.எஸ்.டியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்

- கிரீஷ் சந்திரபிரசாத்

பதினேழு மத்திய, மாநில வரிகளைப் பதிலீடு செய்கின்ற வகையிலும் $2.3 டிரில்லியன் மதிப்புள்ள ஒற்றைச் சந்தையை உருவாக்குவதிலும், மாநிலத் தடைகளை நீக்குகின்ற முறையிலும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) முறைக்கு இந்தியா மாறுவது என்பது வர்த்தகர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் அவர்களது வாழ்வை நிச்சயம் எளிதாக்கும் என்று கூறலாம். ஆனால் கொள்கையை உருவாக்குபவர்களின் மிகப்பெரிய அக்கறை எதுவென்றால் புதிய மறைமுக வரி முறையானது சரக்கு மற்றும் சேவைகளின் மீதான வரிச்சுமையைக் குறைப்பதால் கிடைக்கும் பலன்கள் நுகர்வோருக்குக் கிடைப்பதை உறுதி செய்வதே ஆகும். வர்த்தகர்களும் வியாபாரிகளும் பலன்களை நுகர்வோருக்கு மாற்றித் தருவதை உறுதிப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன - கொள்ளை இலாபம் ஈட்டுதலைத் தடுக்கும் ஆணையத்தை உருவாக்குதல், வியாபாரிகளுக்கும், நுகர்வோருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியன இதில் உள்ளடங்கும். மலேஷியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் ஜி.எஸ்.டிக்கு மாறியபோது கொள்ளை இலாபம் ஈட்டும் செயல்கள் நடைபெற்றதாகப் புகார்கள் செய்யப்பட்டன என்று அறியும் போது நம் நாட்டில் அதற்கு எதிரான நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகின்றன.

இதற்கு முன்பு நடைமுறையில் இருந்த பல படிநிலைகளிலான வரிகள் மற்றும் இரகசியமான மறைமுக வரி விதிப்பு முறை போன்று இல்லாமல், ஜி.எஸ்.டியானது வெளிப்படையானதாக உள்ளது. தான் வாங்கும் சரக்கு அல்லது பெறும் சேவை மீது விதிக்கப்படும் உண்மையான வரியை இறுதிநிலை வாடிக்கையாளர் தெரிந்து கொள்ள முடிகிறது. ஜி.எஸ்.டி-யால் வரி விகிதமானது அதிகரித்துள்ளது என்ற பொதுவான அபிப்பிராயமானது உருவாகி உள்ள நிலையில் வரிவிதிப்பு முறையை நுகர்வோர் தாங்களாகவே பரிசீலித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

இதற்கு முந்தைய வரி விதிப்பு முறையில் மாநிலங்கள் சில்லறை விற்பனையில் வசூலித்த மதிப்புக் கூட்டுவரியை (வாட்) மட்டுமே நுகர்வோர் தெரிந்து கொள்ள முடிந்தது. அல்லது மத்திய அரசு விதித்த சேவை வரி குறித்து மட்டுமே தெரிந்து கொள்ள முடிந்தது. உற்பத்தியின் அல்லது விநியோகத்தின் முந்தைய கட்டங்களில் ஒரு சரக்கு அல்லது சேவையில் படிப்படியாகச் சேர்ந்த வரிகள் என்னவென்று நுகர்வோர் தெரிந்து கொள்ள முடியாது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு தொழிற்சாலையின் வாசலில் விதிக்கப்படும் கலால் வரி அல்லது தான் பயன்படுத்தும் உபகரணத்தின் மீது தொலைத்தொடர்பு நிறுவனம் செலுத்திய ஆயத்தீர்வை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்த வரிவிகிதத்தை நுகர்வோர் தெரிந்து கொள்ள முடியாத நிலை இருந்தது. வியாபாரிகள் நுகர்வோரைத் திசை திருப்பி அதிக விலை வைத்து ஏமாற்றுவதை அதிகாரிகள் விரும்பவில்லை. இதற்கு அதிக அளவிலான வெளிப்படைத்தன்மையைக் காரணமாகக் காட்டுவதையும் அவர்கள் விரும்பவில்லை.

வர்த்தகர்கள் விநியோகச் சங்கிலித் தொடரில் முந்தைய காலகட்டங்களில் தாங்கள் செலுத்திய வரிகளுக்காக ஈட்டிய கிரெடிட்டைப் பயன்படுத்தி தங்களது சரக்கு அல்லது சேவைக்கு அவர்கள் வரி செலுத்துவதில் இருந்து தற்போது சலுகைகளைப் பெறலாம். இதற்கு முந்தைய வரிவிதிப்பு முறையில் அனுமதிக்கப்பட்டதைவிட இது அதிகமாகும். எனவே தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் ஒரு நிறுவனம் தான் உபயோகப்படுத்தும் உபகரணத்திற்காகச் செலுத்திய வரிகள் மீது கிடைத்த கிரெடிட்டைப் பயன்படுத்தி தான் வழங்கும் சேவைக்காக நுகர்வோர் செலுத்த வேண்டிய ஜி.எஸ்.டியில் சலுகை தரலாம். தற்போதைய ஜி.எஸ்.டி வரிவிகிதமானது முந்தைய வரிவிதிப்பு முறையைவிட சற்றே கூடுதலாக இருந்தாலும்கூட இந்த வகையில் சரக்கு அல்லது சேவை மீதான உண்மையான வரிச்சுமையைக் குறைக்க முடியும்.

கடந்த ஜுன் 11ஆம் தேதி ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டம் முடிந்த பிறகு நிதியமைச்சர் அருண் ஜேட்லி மேலும் கூடுதலாக

வரி விதிப்புச் சுமையைக் குறைக்கும் அறிவிப்பை வெளியிட்டார். அதாவது முந்தைய வரிவிதிப்பு முறையின் கீழ் விதிக்கப்பட்ட வரியின் அளவைவிட குறைவான வரி விகிதங்களை அவர் பல பொருட்களுக்கு அறிவித்தார். இந்த வரிக்குறைப்பானது நுகர்வு முறைகள் மற்றும் பொருளாதார எதார்த்தங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. மே மாதம் ஸ்ரீநகரில் நடைபெற்ற ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட வரிவிதிப்பு அளவைவிட ஜூன் 11இல் நடைபெற்ற கூட்டத்தில் 66 பொருட்களுக்கு ஜி.எஸ்.டி வரிவிகிதத்தை கவுன்சில் குறைத்துள்ளது.

நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டுவதைத் தடுக்கும் ஷரத்துடன் ஜி.எஸ்.டியை அறிமுகப்படுத்தியதன் உள்நோக்கம் வரிக்குறைப்பின் பலாபலன்கள் நுகர்வோருக்குக் கிடைக்க வழி செய்யாமல் வர்த்தகர்களும் வியாபாரிகளும் தங்களுக்கானதாக மட்டுமே வைத்துக் கொள்ளும் சாத்தியப்பாட்டைத் தடுப்பதே ஆகும். அதாவது நுகர்வோருக்குப் பலன்கள் கிடைக்காமல் செய்யும் செயல்பாட்டை இன்றைய அரசாங்கம் எதிர்க்கிறது.

மத்திய ஜி.எஸ்.டி சட்டமானது ‘‘எந்த ஒரு சரக்கு அல்லது சேவைகள் விநியோகத்திலும் செய்யப்படும் எந்த ஒரு வரி விகிதக் குறைப்பும் அல்லது உள்ளீட்டு வரிக்கான கிரெடிட் பலனும் சேவையை அல்லது பொருளைப் பெறுபவருக்குச் சென்று சேர வேண்டும் அதாவது விலைகள் குறைக்கபட்டு போய்ச் சேர வேண்டும்’’ என்று குறிப்பிடுகிறது. உருவாக்கப்பட உள்ள செயலாளர் நிலையில் ஒரு அதிகாரி தலைமை வகிக்க இருக்கின்ற, நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டுவதைத் தடுக்கும் ஆணையமானது இந்த ஷரத்தை அமல்படுத்தும். இந்த ஆணையம் நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டுகின்றனர் எனச் சந்தேகிக்கப்படும் வழக்குகளை டைரக்டர் ஜெனரல் ஆஃப் சேஃப்கார்ட்ஸ்க்கு பரிந்துரை செய்து அனுப்பும். இந்த அமைப்பானது மத்திய கலால் மற்றும் சுங்க வரிகள் வாரியத்தின் (சி.பி.இ.சி) கீழ் விரிவான புலனாய்வு அமைப்பாகச் செயல்படும்.

சரக்குகள் அல்லது சேவைகளை வழங்குகின்ற ஒரு விநியோகஸ்தருக்கு ஆணையமானது விலைகளைக் குறைக்குமாறு ஆணை இடலாம் அல்லது ஜி.எஸ்.டி வரிவிதிப்பு அமைப்பின் கீழ் வரி விதிப்புச் சுமை குறைப்பினால் கட்டாயமாக்கப்படாத வரிக்குச் சமமான தொகையை வாங்கியவருக்குத் திருப்பித் தருமாறு ஆணையிடலாம். நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டியதாகக் கண்டறியப்பட்டால், ஒரு வர்த்தகர் அல்லது வியாபாரி நுகர்வோருக்கு அளிக்காத வரிக்குறைப்பு அளவின் மீது 18% வட்டியைச் செலுத்த வேண்டியிருக்கும். குறைக்கப்பட்ட வரிச்சுமைக்கான பலன்களை ஒரு வாடிக்கையாளர் கேட்காதபட்சத்தில் ஆணையம் அவற்றை விநியோகஸ்தரிடம் இருந்து திரும்ப வசூலிக்க முடியும். நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டினால் அபராதமும் விதிக்கப்படும். மேலும் வர்த்தகரின் பதிவும் இரத்து செய்யப்படலாம். இது ஒரு கடுமையான ஷரத்தாகத் தெரிந்தாலும்கூட, அரசின் நோக்கம் என்பது முன்தடுப்பில்தான் உள்ளது. கட்டற்ற சந்தைப் பொருளாதாரத்தின் விலைகளை நிர்வகிக்கும் நுண்மேலாண்மை செயல்களில் ஈடுபடுவதைவிட ஒரு தொழிலில் அல்லது ஒரு சரக்கில் பெருமளவு மேற்கொள்ளப்படும் நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டும் செயலின் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்க இந்த ஷரத்தைப் பயன்படுத்த வேண்டும் என அரசு நினைக்கிறது. இந்த நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டுதலைத் தடுக்கும் ஷரத்தானது புதிய மறைமுக வரி விதிப்பு அமலாகும் இடைப்பட்ட காலகட்டத்தில் மட்டுமே செயல்பாட்டில் இருக்கும்.

இதுவரை வரி விதிப்பு முறை மாற்றமானது சிக்கல் இல்லாமல் நடைபெற்று வருகிறது. வர்த்தகர்களும் பலன்கள் நுகர்வோருக்கு விரைவில் கிடைக்க உதவுகிறார்கள். சில வர்த்தகர்கள் ஜூலை 1ஆம் தேதி நள்ளிரவு முதலே இவ்வாறு செயல்படத் தொடங்கி விட்டார்கள். அந்த நேரத்தில்தான் நாடாளுமன்றத்தின் மைய அரங்கில் குடியரசுத்தலைவர் பிரணாப்முகர்ஜியும் பிரதமர் நரேந்திர மோடியும் ஜி.எஸ்.டி அமலாக்கத்தை அறிவித்தார்கள். ஜி.எஸ்.டி அறிவிக்கப்பட்ட சனிக்கிழமை நள்ளிரவு முதல் அதைத் தொடர்ந்து வந்த வார இறுதி நாளில் ஆப்பிள் நிறுவனமானது ஐபோன்கள், ஐபேடுகள், மேக்ஸ் மற்றும் ஆப்பிள் வாட்ச் ஆகியவற்றின் சில்லறை விலைகளைத் தனது இந்திய நுகர்வோர்களுக்காகக் குறைத்தது. அதேபோன்று நுகர்வோர் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்யும் நிறுவனமான இந்துஸ்தான் லீவர் லிமிடெட்

கம்பெனி தனது டிடர்ஜென்ட் மற்றும் சோப்புகள் சிலவற்றின் விலைகளைக் குறைத்தது. இரு சக்கர வாகனத் தயாரிப்பு நிறுவனமான ஹீரோ மோட்டோகார்ப் லிமிடெட் தனது மாடல்களின் விலையை ரூ.400 முதல் ரூ.1,800 வரை குறைத்தது.

சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான வரிச்சுமையைக் குறைப்பதன் பலன் நுகர்வோருக்குக் கிடைப்பதை உறுதி செய்தல் என்பது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் மறைமுக வரிகள் ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும் பொருந்தும். ஆனால் வருமான வரி என்பது மக்கள் தொகையில் வரி செலுத்தக்கூடிய தகுதிநிலையைப் பொறுத்தே அமைகின்றது. வருமான நிலைகள் உயர உயர வருமான வரி விகிதங்களும் உயருகின்றன.

நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டுதலைத் தடுக்கும் நடவடிக்கைகள் மீது கவுன்சில் காட்டும் கவனம் என்பது தற்போது குறைக்கப்படும் வரிச்சுமையானது சில்லறை விற்பனையில் ஏற்படக்கூடிய பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அமைந்துள்ளது. அதாவது வரிச்சுமைக் குறைப்பு என்பது விலைகளைக் குறைக்க உதவுவதாக இருக்க வேண்டும். இந்த விலைவாசிக் கட்டுப்பாடு என்பது நுகர்வோர்களின் தேவையை அதிகரிக்கச் செய்வதோடு, பொருளாதார வளர்ச்சியோடு வரி வருவாயையும் அதிகரிக்கும்.

அதிக வரி வருவாய் என்பது மத்திய மற்றும் மாநில அரசுகள் நல்வாழ்வுத் திட்டங்களில் கூடுதலாகச் செலவழிக்கவும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயல்களில் அதிகமாக முதலீடு செய்யவும் உதவும். அதேசமயம், சந்தையில் போட்டி நிலவுவதும் வர்த்தகர்கள் எந்த ஒரு பலனையும் நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்வார்கள் என்பதையும் உறுதிப்படுத்தும். ஏனெனில் எந்த ஒரு நிறுவனமும் சந்தையில் தனக்கான பங்கினை இழக்க விரும்பாது.

ஜி.எஸ்.டி ஏழை மக்களுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கு நிதி அமைச்சர் அருண்ஜேட்லி தலைமையில் செயல்படும் இந்திய ஒன்றியத்தின் மறைமுக வரி விதிப்பு அமைப்பான ஜி.எஸ்.டி கவுன்சில் சரக்குகளுக்கும் சேவைகளுக்கும் நாடு முழுவதிலும் ஒரே வரி விகிதம் இருக்க வேண்டும் என்ற ஜி.எஸ்.டியின் கருத்தாக்கத்தையும் தாண்டி நான்கு வேறுபட்ட வரி விதிப்பு நிலைகளை அறிவித்துள்ளது. அதாவது 5%, 12%, 18% மற்றும் 28% ஆகிய விகிதங்களில் வரியானது விதிக்கப்படும். இந்த முறையானது மக்கள் பெருமளவில் பயன்படுத்தும் பொருட்களுக்கு குறைந்த சதவிகித அளவு வரி விதிக்க உதவும். சொகுசுப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்க வழி ஏற்படுத்தும்.

சமான விதியின் அடிப்படையில் ஜி.எஸ்.டி வரி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதாவது சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான தற்போதைய வரிகளுக்கு சற்றேறக்குறைய நெருக்கமான அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தொழிலகத்தின் சில பிரிவுகள் அதாவது ஜவுளி போன்ற பிரிவுகள் ஜி.எஸ்.டி-யில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டியனவாகும். இத்தகைய நடவடிக்கையானது நன்மை செய்வதற்குப் பதிலாக தீமையையே உருவாக்கும். ஒரு சரக்குக்கு ஜி.எஸ்.டி-யில் இருந்து விலக்கு அளித்து விட்டால், விற்பவர் உற்பத்திக்கு முந்தைய பல நிலைகளில் மூலப்பொருட்களுக்காக செலுத்திய வரிகளுக்கு கிரெடிட்டுகளைப் பெற முடியாமல் போகும். எனவே இவை பொருளின் விலையிலேயே சேர்ந்து விடும். தொழிலதிபர்கள் கவலைப்படும் ஒரு விஷயம் எதுவென்றால் சில குறிப்பிட்ட சேவைகள் மீது வரிச்சுமை அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதே ஆகும். சர்வதேச அளவில் கடைபிக்கப்பட்டு வரும் சரக்குகள் மீதான வரிவிதிப்பு வழிமுறைகளையே ஜி.எஸ்.டி கவுன்சிலானது சேவைகளுக்கும் கடைபிடித்துள்ளது. உதாரணமாக தொலைத்தொடர்பு சேவைகளுக்கான ஜி.எஸ்.டி வரி விகிதம் என்பது முந்தைய 15% சேவை வரி விகிதத்தில் இருந்து 18% என்று அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே தொலைதொடர்பு சேவை அளிக்கும் நிறுவனங்கள் இதனால் தொலைபேசிக் கட்டணங்கள் உயரக்கூடும் என்ற அச்சத்தில் உள்ளன. அரசு இது குறித்து மே 26ஆம் தேதி விளக்கம் அளித்துள்ளது. ஸ்பெக்ட்ரம் கட்டணம் செலுத்திய போது கட்டிய சேவை வரிக்கான கிரெடிட்டுகள் நிறுவனங்களுக்கு கிடைக்கும். மேலும் உபகரண இறக்குமதிக்காகச் செலுத்திய வரிகளுக்கும் கிரெடிட் கிடைக்கும். இவை எல்லாம் சேர்ந்து வரிவிகித உயர்வை நேர் செய்துவிடும் என அரசு தெளிவுபடுத்தி உள்ளது. ‘‘இவை எல்லாம் (வரி கிரெடிட்டுகள்) தொலைபேசி நிறுவனங்கள் ஜி.எஸ்.டிக்கு பணமாகச் செலுத்த வேண்டிய

தொகையைக் குறைத்துவிடும். கடந்த நிதியாண்டில் செலுத்தியதைவிட 87% அளவுக்குச் செலுத்தினால் போதும் என்ற நிலைக்குக் கொண்டுவந்து விடும்'' என்று அரசு விளக்கியுள்ளது. ஆனால் இதற்கு மாறாக நிறுவனங்கள் ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்திய பிறகு முதல் சுற்று நிறைவடையட்டும் என்று காத்திருக்கின்றன. அப்போதுதான் தொலைத்தொடர்பு சேவை வழங்கும் செலவை ஜி.எஸ்.டி அதிகரிக்குமா அல்லது குறைக்குமா என்ற முடிவுக்கு வர முடியம் என்கின்றன நிறுவனங்கள்.

சரக்குகள் மற்றும் சேவைகள் மீது வரி விகிதங்களை ஜி.எஸ்.டி கவுன்சில் நிர்ணயம் செய்த பிறகு மே மாதத்தில் கேரள மாநிலத்தின் நிதிஅமைச்சர் தாமஸ்ஐசக் மற்றும் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் நிதி அமைச்சர் ஹசீப் தீராயூ இருவரும் வரிக்குறைப்பினால் ஏற்படும் பலன்களை நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்வதாக இந்த வரி சீர்திருத்த அமலாக்கமானது இருக்க வேண்டியது அவசியம் என்று கூறி உள்ளனர். வருவாய் செயலாளர் ஹஷ்முக் ஆதியா ஜி.எஸ்.டி வரி விகிதங்கள் முடிவு செய்யப்பட்ட நாளில் இருந்தே வர்த்தகத்தில் விலை நிலவரத்தை நெறிமுறையற்ற முறையில் இலாபம் ஈட்டுவதைத் தடுக்கும் அமைப்பு கண்காணிக்க ஆரம்பிக்கும் என்று தெளிவுபடுத்தி உள்ளார். ஆனால் இந்த ஷரத்து பெரிய அளவிலான மோசடிக்கும் தொழிற்சாலை நிலையில் நெறிமுறையற்ற முறையிலான இலாபத்திற்கும் எதிராக மட்டுமே செயல்படுத்தப்படக்கூடும். சிறிய அளவிலான விலை மாற்றங்களுக்கு இது பயன்படாது. இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் ஜி.எஸ்.டி கவுன்சில் மற்றும் வரி விதிப்பு அதிகாரிகள் புதிய வழித்தடத்தில் வர்த்தகம் நடைபெறுதை உறுதிப்படுத்த வேண்டும். வர்த்தகர்கள் தங்கள் அளவில் அவர்களே தீர்மானித்துக் கொள்ள உதவ வேண்டும். மேலும் இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் நடைபெறும் சிறிய அளவிலான விதி மீறல்களை அதிகாரிகள் எளிதாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

- **கிரீஷ் சந்திரபிரசாத்**, புதுதில்லியில் இருக்கும் வணிக இதழியலாளர், 17 ஆண்டு அனுபவம் கொண்டவர். ●



# ஜி.எஸ்.டி - இந்திய வரலாற்றில் வரிவிதிப்பு முறையில் ஒரு மைல்கல் முதலீடுகளை ஈர்க்கவும் வர்த்தகத்தை எளிதில் மேற்கொள்வதை மேம்படுத்தவும் ஒரே தேசம், ஒரே வரி

- டி.என். அசோக்

ஜூன் 30 - ஜூலை 01, 2017 நள்ளிரவு - ஒரு வரலாறு உருவாக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டின் நள்ளிரவும் 1947ஆம் ஆண்டின் நள்ளிரவும் சுதந்திர உணர்வின் அடிப்படையில் ஒப்பிடப்பட முடியாதவைதான். ஆனால் அரங்க அமைப்பு, நாடாளுமன்றத்தின் உயர்மாட மத்திய முற்றம், பிரதம மந்திரியும் குடியரசுத் தலைவரும் அலங்கரிக்கப்பட்ட பின்னணியில் இருப்பது ஆகியன உண்மையில் இந்திய வரலாறைத் திரும்பிப் பார்க்க வைத்தன. அப்போது அதாவது 1947ஆம் ஆண்டில் அது அரசியல் சுதந்திரம் என்றால் இப்பொழுது இது பொருளாதாரச் சுதந்திரம் ஆகும்.

''ஒரே தேசம் ஒரே வரி'' என்ற முழக்கத்தை முன் வைக்கும் இந்திய அரசு ஒருங்கிணைந்த முழுமையான சந்தையை உருவாக்க விரும்புகின்றது. நாடு முழுவதும் எவ்விதமான தடைகளும் இன்றி சரக்குகள் எடுத்துச் செல்வதை எளிதாக்கும் சந்தை முறையானது விரும்பப்படுகிறது. இதனால் உற்பத்தியாளர்கள். தயாரிப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் வாழ்க்கை எளிதாகும். குறிப்பாக நம் நாட்டின் முக்கிய வர்த்தக பங்குதாரர்களான ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் நடைமுறையில் இருப்பதைப் போன்று உலகளாவிய தரக்கட்டுப்பாடுகளுடன் கூடிய இந்திய வரி விதிப்பு முறையை உருவாக்க ஜி.எஸ்.டி முயல்கிறது. எனினும் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நான்கு அடுக்கு வரிவிதிப்பு முறை எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். சில பொருட்களை விலை உயர்ந்ததாகவும் சில பொருட்களை விலை குறைந்ததாகவும் இது செய்துவிடும்.

பெருந்திரளான மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலை குறைவானதாகி உள்ளது. சொகுசு வாழ்க்கைக்கான பொருட்களின் விலை அதிகமாகி உள்ளது. புதிய வரி விதிப்பு முறையை பொதுமக்கள் புரிந்து கொள்வதற்கு சற்று காலம் ஆகலாம். தினசரி பயன்பாட்டுக்கான பொருட்களின் மீதான குறைந்த வரி விதிப்பு விகிதங்களுக்கும் எப்போதாவது பயன்படுத்தும் பொருட்களின் மீதான அதிகமான வரிவிதிப்பு விகிதங்களுக்கும் இடையிலான சம நிலையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு நுகர்வோருக்கு நாள்களாகும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமைப்பை உருவாக்க முற்பட்டவை என்று எந்த ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியையும் குறிப்பிட முடியாது. இதை நடைமுறைப்படுத்தும் முறைமையில் அவைகள் வேறுபட்டே இருக்கின்றன. முந்தைய பிரதமமந்தரி நரசிம்மராவின் கீழ் பணிபுரிந்த பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கான சிற்பியும் முன்னாள் பிரதமமந்திரியுமான டாக்டர் மன்மோகன்சிங்குக்கே ஜி.எஸ்.டி உருவாக்கப்பட்டதற்கான அங்கீகாரத்தைத் தரலாம். முந்தைய அரசுகள் இரண்டும் மற்றும் தற்போதைய அரசும் சில ஷரத்துகள் மீது மாறுபட்ட கருத்துகளைக் கொண்டு உள்ளன.

**ஜி.எஸ்.டி வரலாற்றை இப்போது நாம் பார்ப்போம். ஜி.எஸ்.டி எப்படி நடைமுறைக்கு வந்தது என்றும் தெரிந்து கொள்வோம்.**

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட மற்றும் மாநிலங்கள் அவையால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட நான்கு சட்டங்களின் தொகுப்பை ஏற்று தற்போதைய மத்திய அரசு ஜி.எஸ்.டியை அறிமுகப்படுத்தி உள்ளது (மாநிலங்கள் அவையில் நிதி மசோதாக்கள் நிறைவேற்றப்படுவதில்லை, அவை திருப்பி அனுப்பி வைக்கப்படும்). ஒரே சீரான மறைமுக வரி முறையை எதிர்க்கும் இந்தப் புதிய வரி விதிப்பு அமைப்பானது சமுதாயத்தில் சில பிரிவினர் எதிர்பார்ப்பது போல விலைவாசி உயர்வுக்கு இட்டுச் செல்லாது என்று நிதியமைச்சர் தெரிவித்து உள்ளார். ஜி.எஸ்.டியை நடைமுறைப்படுத்த இது வரையிலான அரசாங்கங்கள் தொடர்ந்து பங்காற்றி

வந்துள்ளன. ஜி.எஸ்.டிக்காக எந்த ஒரு தனிநபரும் அங்கீகாரம் கோர முடியாது. எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த திருத்தத் தீர்மானங்களைத் தாண்டி மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மக்களவை இந்த மசோதாக்களை மார்ச் 29ஆம் தேதி நிறைவேற்றியது. மே மாதத்தின் நடுவில் அரசாங்கம் GST விதிகளுக்கும் வரிவிதிப்பு விகிதங்களுக்கும் இறுதி ஒப்புதலை அளித்தது.

ஜி.எஸ்.டியை அமல்படுத்துவதற்காக கீழ்க்கண்ட மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன:

1. மத்திய ஜி.எஸ்.டி மசோதா, 2017
2. ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி மசோதா, 2017
3. ஜி.எஸ்.டி (மாநிலங்களுக்கான இழப்பீடு) மசோதா, 2017
4. யூனியன் பிரதேச ஜி.எஸ்.டி மசோதா, 2017

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது (ஜி.எஸ்.டி) பிரதானமாக மத்திய, மாநில அரசுகள் விதிக்கும் பல்வேறு விதிகளுக்கு மாற்றாக அமைகின்றது. அரசியலமைப்பு 122வது திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அரசியலமைப்பு (நூற்றி இருபத்து இரண்டாவது திருத்தம்) சட்டம், 2016 இயற்றப்பட்டது. இதன் மூலமாகவே ஜி.எஸ்.டி அமல்படுத்தப்பட்டது. ஜி.எஸ்.டியை ஜி.எஸ்.டி கவுன்சில் நிர்வகிக்கும். இந்தக் கவுன்சிலின் தலைவராக மத்திய நிதி அமைச்சர் இருப்பார். ஜி.எஸ்.டி வரிவிதிப்பின் கீழ் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு 0.25%, 5%, 12%, 18%, 28% என்ற விகிதத்தின்படி வரி விதிக்கப்படும். பட்டை தீட்டிய மற்றும் ஓரளவு பட்டை தீட்டப்பட்ட விலைமதிப்புள்ள கற்களுக்கு விசேஷ வரி விகிதமாக 0.25% வரி விதிக்கப்பட்டுள்ளது. தங்கத்திற்கு வரி விகிதம் 3% என விதிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றை நாம் மேலும் சற்று கூடுதலாக அணுகிப் பார்த்தால், 1986லேயே அப்போதைய பிரதம மந்திரி விஸ்வநாத் பிரதாப் சிங் திருத்தப்பட்ட மதிப்பு கூட்டு வரியை (மோட்வாட்) அறிமுகப்படுத்தியது தெரியவரும். மத்திய கலால்வரி, சேவை வரி, கூடுதல் சுங்கவரி, இதர கூடுதல் வரிகள், மாநில அளவிலான மதிப்பு கூட்டு வரி மற்றும் ஆக்ட்ராய் போன்றவற்றை உள்ளடக்கிய பல்வேறு மறைமுக வரிகளுக்குப் பதிலாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஜி.எஸ்.டி) இருக்கும். மாநிலங்களுக்கு இடையில் சரக்குப் போக்குவரத்துக்கு என்று தற்போது விதிக்கப்படும் இதர சுங்கக் கட்டணங்கள் ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறை மூலம் நீக்கப்படும்.

1. மத்திய கலால் வரி
2. வர்த்தக வரி
3. மதிப்புக்கூட்டு வரி (வாட்)
4. உணவு வரி
5. மத்திய விற்பனை வரி (சி.எஸ்.டி)
6. ஆக்ட்ராய்
7. கேளிக்கை வரி
8. நுழைவு வரி
9. கொள்முதல் வரி
10. சொகுசு வரி மற்றும்
11. விளம்பர வரி

போன்ற வரிகள் ஜி.எஸ்.டி வரியுடன் ஒருங்கிணைக்கப்படும்.

அனைத்து வர்த்தக நடவடிக்கைகளிலும் ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படும். அதாவது விற்பனை, பரிமாற்றம், கொள்முதல், குத்தகை அல்லது சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் இறக்குமதி என அனைத்துக்கும் வரி உண்டு. இந்தியா இரட்டை ஜி.எஸ்.டி வரி விதிப்பு மாதிரியை கடைபிடிக்கும். இதன் அர்த்தம் என்னவென்றால், மத்திய அரசு மற்றும் மாநில அரசு இரண்டுமே வரியை விதிக்கும்; பரிமாற்றம் நிகழும் மாநிலத்தில் உள்ள அரசு மாநில ஜி.எஸ்.டி வரியை விதிக்கும். மாநிலங்களுக்கு இடையிலான பரிமாற்றங்கள், சரக்குகள் அல்லது சேவைகளை இறக்குமதி செய்தல் ஆகியவற்றுக்கு மத்திய அரசு ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி வரியை (ஐ.ஜி.எஸ்.டி) விதிக்கும்.

ஜி.எஸ்.டி என்பது நுகர்வு அடிப்படையிலான வரியாகும். எனவே சரக்குகள் அல்லது சேவைகள் எந்த மாநிலத்தில் நுகர்வோரால் பயன்படுத்தப்படுகின்றதோ அந்த மாநிலத்துக்கு வரிகள் செலுத்தப்படும். அந்தப் பொருட்கள் உற்பத்தி ஆகும் மாநிலத்திற்கு வரிகள் கிடைக்காது. ஐ.ஜி.எஸ்.டி வரி வசூலிப்பதில் மாநில அரசுக்கு உரிமை இல்லை. மத்திய அரசு தாம் நேரடியாக வசூலித்த வரியில் இருந்து மாநிலங்களுக்கு உரிய

பங்கினை அளித்து விடும். முந்தைய வரிவிதிப்பு முறையின் கீழ் ஒரு மாநிலமானது ஒற்றை அரசாங்க முறையில் வரி வருவாயை வசூலித்து வந்தது.

ஜி.எஸ்.டி அமல்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய பாதிப்பால் மாநிலங்களுக்கு உருவாகக்கூடிய வருவாய் இழப்பை ஈடு செய்ய வழி வகைகள் உள்ளன. பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் மீது ஜி.எஸ்.டி விதிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதால் இது சாத்தியமாகும். ஜி.எஸ்.டி அமல் செய்யப்பட்ட நாளில் இருந்து ஐந்து ஆண்டு காலகட்டத்துக்குள் மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு ஏதாவது ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு வழங்கப்படும் என மத்திய அரசு உறுதி அளித்துள்ளது. ஜி.எஸ்.டி-யின் முதன்மை தாக்கத்தில் ஒன்றாக இந்தியாவில் டீசல், பெட்ரோல் விலைகள் தினமும் அறிவிக்கப்படுகின்றன.

பத்திரங்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படமாட்டாது. அவை வழக்கம்போல் பத்திரங்கள் பரிமாற்ற வரிக்கு (எஸ்.டி.டி) உட்பட்டே இருக்கும்.

இணையான செயல்பாடாக ‘‘சரக்குகள் மற்றும் சேவைகள் வரி’’ நெட்வொர்க் (ஜி.எஸ்.டி.என்) உருவாக்கப்பட்டுள்ளது. இது இலாபம் கருதாத அமைப்பாகச் செயல்படும். பங்குதாரர்கள், அரசு, வரி செலுத்துவோர் என தொடர்புடைய அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் ஒரு ஒற்றை போர்ட்டலாக இந்த மேடை உருவாக்கப்பட்டு உள்ளது. இந்தப் போர்ட்டலை மத்திய அரசு அணுகிப் பயன்படுத்த முடியும். ஒவ்வொரு பரிமாற்றத்தையும் அதன் இறுதிநிலை வரை அரசால் தடம் அறிய முடியும். வரி செலுத்துவோர் வருமான வரித்தாக்கல் செய்ய இது ஏதுவாக இருக்கும். ஆவணங்களைப்




முன்மொழியப்பட்டுள்ள ஜி.எஸ்.டி சட்டத்தை நிர்வகிப்பதற்காக 21 நபர் கொண்ட தேர்வுக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் யூனியன் பிரதேச ஜி.எஸ்.டி சட்டங்கள் ஜம்முகாஷ்மீர் நீங்கலாக அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இயற்றப்பட்டுள்ளன. ஜூலை 1, 2017 முதல் வரிவிதிப்பு முறையானது சிரமம் இன்றி செயல்பட இந்த நடவடிக்கைகள் வழி வகுத்துள்ளன.

பராமரிக்கவும் உதவும். ஐ.டி.நெட்வொர்க்கைத் தனியார் நிறுவனங்கள் வளர்த்தெடுக்கும். இது பிறகு மத்திய அரசுடன் இணைக்கப்படும். இதற்கான பங்கும் ஈவும் முறைப்படித் தரப்படும். இதில் மத்திய அரசு 24.5% பங்குகளை வைத்திருக்கும். மாநில அரசு 24.5% பங்குகளை வைத்திருக்கும். மீதியுள்ள பங்குகள் தனியார் வங்கி நிறுவனங்கள் பெற்றிருக்கும்.

ஜி.எஸ்.டி சட்டத்தின்படி இது செப்டம்பர் 2, 2017க்குள் அமலாக்கப்பட வேண்டும். கருணைக்கால எல்லையான செப்டம்பர் 12, 2017க்குப் பிறகு முந்தைய வரிகள் அனைத்தும் இரத்தாகிவிடும். அதனால் மத்திய அரசு ஜி.எஸ்.டியை ஜூலை 1, 2017இல் அறிமுகப்படுத்த விரும்பியது. அனைத்து மறைமுக வரிகளும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக ஒரே சீரான ஒற்றை வரி விதிக்கப்படும்.

எனவேதான் நள்ளிரவு வெளிச்சத்தை அரசு ஏற்படுத்தியது. ஜூலை 1, 2017இல் ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியையும் அரசு நிறைவேற்றியது. நாடாளுமன்றத்தில் சிறப்பு நள்ளிரவு அமர்வு நடைபெற்றது. உலகமே இந்த வரலாற்று நிகழ்வைப் பார்த்தது.

சில வரிவிதிப்பு விகிதங்கள் குறித்து மாற்றுக் கருத்துகள் உள்ளன. அதேபோன்று மிக விரைவாக ஜி.எஸ்.டியை அமல்படுத்தியது குறித்தும் விமர்சனங்கள் உள்ளன. புதிய வரி விதிப்பு முறையை உள்வாங்கி தனது செயல்முறைகளை மறுவடிவமைப்பு செய்ய இன்னமும் தாங்கள் தயாராகவில்லை என்பதைத் தொழில் உலகம் தெரிந்து வைத்திருந்தது.

எந்த ஒரு புதிய சட்டமும் தொடக்கத்தில் சந்தேகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தவே செய்யும். ஒட்டுமொத்த தேசமும் ஜி.எஸ்.டி-யை இந்த முறையிலேயே எதிர்கொண்டது. குடிமக்கள் திடீரென தங்கள் பில்களின் தொகையானது அதிகரித்துள்ளதைப் பார்த்தார்கள். பயன்படுத்தப்படும் இடத்தை மையமாகக் கொண்ட வரிவிதிப்புக்கு நாடு தற்போது மாறி உள்ளது என்பதை குடிமக்கள் இப்பொழுது வரையிலும் புரிந்து கொள்ளவில்லை. இது ஒரு நுகர்வை மையப்படுத்திய வரியாகும். நுகர்வு எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கு வரி விதிக்கப்படுகின்றது. தமிழ்நாடு அல்லது மகாராஷ்டிரம் அல்லது ஆந்திரப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் ஒரு சரக்கு உதாரணமாக தில்லியில் வாங்கி பயன்படுத்தப்பட்டால், சண்டிகரில் அல்லது ஜெய்ப்பூரில் அல்லது லக்னௌவில் வாங்கி பயன்படுத்தப்பட்டால் அங்குதான் அந்தச் சரக்குக்கு வரி விதிக்கப்படும்.

நவம்பர் 8, 2016இல் அறிவிக்கப்பட்ட பணமதிப்பு நீக்கம் தேசத்துக்கு முதல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது என்றால், ஜூலை 1, 2017இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) மக்களுக்கு ஆச்சரியத்தோடு அதிர்ச்சியையும் அளித்துள்ளது. ஆனால் அரசாங்கத்தின் நோக்கங்கள் நியாயமாகவும் தெளிவாகவும் உள்ளன. ‘‘ஒரே தேசம் ஒரே வரி’’ என்பதே அரசின் நோக்கமாகும். சந்தைகளை ஒருங்கிணைத்தல், சர்வதேசத் தரக்கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப உயர்தல் ஆகியவற்றின் மூலம் உலகளாவிய சந்தைகளில் இந்தியா திறம்பட போட்டியைச் சமாளிக்க முடியும்.

கறுப்புப் பணத்தின் மீதான இரண்டாவது துல்லியமான தாக்குதலாக ஜி.எஸ்.டி இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு வர்த்தகரும் பதிவு செய்தாக வேண்டும்; ஜி.எஸ்.டி.ஐ.என் (பதிவு எண்) பெற்றாக வேண்டும். மேலும் மாதாந்திர அல்லது காலாண்டுக்கான வரி வசூல் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு வர்த்தகரின் கணக்கும் இப்போது சட்டரீதியானதாக மட்டுமல்லாமல் கட்டாயமானதாகவும் மாறி உள்ளது.

### அரசு என்ன எதிர்பார்க்கிறது?

1. நாடு முழுவதும் அமலில் உள்ள சுமார் 15 முதல் 20 வரையிலான வரிகளை ஒரே ஒற்றை வரிக்குள் உள்ளடக்கும் வகையில் வரி விதிப்பதை ஜி.எஸ்.டி நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியா முழுவதிலும் சந்தைகளை ஒருங்கிணைத்தல், நாடு முழுவதும் சரக்குகளுக்கு சீரான ஒரே விலை என்பதும் நோக்கங்கள் ஆகும். இதனால் சில சரக்குகள் விலை அதிகமானதாகவும் சில சரக்குகள் விலை மலிவானதாகவும் மாறும் வாய்ப்பு இருந்தபோதிலும் இவையே நோக்கங்களாகச் சொல்லப்பட்டன.

2. ஜி.எஸ்.டி ஒரு எளிமையான வரியாக இருக்கிறது. ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவது என்பது சிக்கலானதாக உள்ளது. பல்வேறு சரக்குகளுக்கு ஜி.எஸ்.டியில் ஐந்து அடுக்கு வரிவிதிப்பு முறை உள்ளது. இதனால் சொகுசுப் பொருட்கள் விலை உயர்ந்தவையாக மாறும். பெருந்திரளான மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலையானது குறைவானதாக மாறும். இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. தங்களுடைய பொருட்கள் சர்வதேசப் போட்டியை திறம்பட எதிர்கொள்ளும் வகையில் உலகில் பல நாடுகள் ஏற்கனவே இதனை நடைமுறைப்படுத்தி இருக்கின்றன.

ஒரே ஒரு விதிவிலக்கு என்னவென்றால் சொகுசுப் பொருட்களுக்கான வரி அதிகபட்ச வரிவிதிப்பு அடுக்கான 28%இல் உள்ளது. இது உலகத்திலேயே அதிகமான வரியாகும். அமெரிக்க மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளில்கூட 17%க்கு மேல் ஜி.எஸ்.டி வரி இல்லை.

3. ஜி.எஸ்.டியின் கருத்துருவாக்கம் வித்தியாசமானதாகும். உற்பத்தி செய்யும் இடத்தில் வரி விதிக்கும் முறையாக இது இல்லை. இது பொருட்கள் பயன்படுத்தும் இடத்தில் வரி விதிக்கும் முறையாக உள்ளது. மேலும் தெளிவாகக் கூற வேண்டும் என்றால் இது நுகர்வு வரியாகும். ஒரு பொருளானது தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகிறது என்றால், அப்பொருள் நாடு முழுவதும் பயணம் செய்து தில்லியை அடைகிறது. அங்கு அப்பொருளை வாங்கும் நுகர்வோர் அல்லது வாங்குபவர் அப்பொருளுக்கான வரியைச் செலுத்துகிறார். இந்த வரியின் மீது மத்திய அரசு, மாநில அரசு இரண்டுக்கும் பங்கு இருக்கிறது. ஒரு உணவகத்தில் விதிக்கப்படும் வரி 18% என்றால் அதில் 9% வரியானது சி.ஜி.எஸ்.டி மூலமாக மத்திய அரசுக்குச் செல்லும். மீதி 9% வரியானது எஸ்.ஜி.எஸ்.டி மூலமாக மாநில அரசுக்குச் செல்லும். இது நுகர்வோர் வாங்கும் பொருட்களுக்கான பில்களில் தெளிவாகக் காட்டப்படும்.

மது அருந்துவதும் உணவு விடுதிகளில் உண்பதும் செலவு அதிகமான ஒரு செயலாக மாறி உள்ளன. விமானத்தில் பயணம் செய்வதை தவிர்த்துவிட முடியுமா என்ற சிந்தனையானது தோன்றும் வகையில் விமானக் கட்டணம் உயர்ந்துள்ளது. ஏ.சி, குளிர்சாதனப்பெட்டி, வாஷிங் மெஷின் போன்ற பொருட்கள் விலை உயர்ந்தவைகளாக மாறிவிட்டன. சுமார் 1200 பொருட்களுக்கு ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையால் 18% வரி விதிக்கப்பட்டுள்ளது. பொதுவான பலதரப்பட்ட நுகர்வுப்பொருள்கள் இப்பிரிவில் அடங்குகின்றன. இந்தப் பிரிவில்தான் 81% நுகர்வுப் பொருள்கள் உள்ளன.

விலை குறைந்துள்ள பொருள்களின் பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது:

**சாப்பிடும் பொருட்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | பால்பவுடர் | 16 | தேங்காய் எண்ணெய் |
| 2 | தயிர் | 17 | கடுகு எண்ணெய் |
| 3 | மோர் | 19 | சர்க்கரை |
| 4 | பிராண்ட் அல்லாத இயற்கைத் தேன் | 19 | வெல்லம் |
| 5 | பால் பொருட்கள் | 20 | சர்க்கரை இனிப்புப் பொருட்கள் |
| 6 | பாலாடைக் கட்டி | 21 | பாஸ்ட்டா |
| 7 | மசாலாப் பொருட்கள் | 22 | சேமியா |
| 8 | டீ | 23 | மக்ரோனி |
| 9 | கோதுமை | 24 | நூடுல்ஸ் |
| 10 | அரிசி | 25 | பழங்கள் மற்றும் காய்கறிகள் |
| 11 | மாவு | 26 | ஊறுகாய் |
| 12 | மசாலா | 27 | முரப்பா (சரக்கரையில் ஊறவைக்கப்பட்ட பழம் அல்லது காய்கள்) |
| 13 | கடலை எண்ணெய் | 28 | சட்னி |
| 14 | பனை எண்ணெய் | | |
| 15 | சூரியகாந்தி எண்ணெய் | | |

**அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | குளியல் சோப் | 11 | வீட்டு உபயோக எல்.பி.ஜி |
| 2 | தலைமுடிக்கான எண்ணெய் | 12 | ஸ்பூன் |
| 3 | டிடெர்ஜண்ட் பவுடர் | 13 | ஃபோர்க் |
| 4 | சோப் | 14 | கரண்டி |
| 5 | டிஷ்யூ பேப்பர் | 15 | ஸ்கிம்மர்ஸ் |
| 6 | நாப்கின் | 16 | கேக் சர்வர் |
| 7 | தீக்குச்சி | 17 | மீன் கரண்டி |
| 8 | மெழுகுவர்த்தி | 18 | இடுக்கி |
| 9 | நிலக்கரி | 19 | அகர்பத்தி |
| 10 | மண்ணெண்ணெய் | 20 | பற்பசை |

**எழுது பொருட்கள்**

| | |
|---|---|
| 1 | நோட்டுப்புத்தகம் |
| 2 | பேனா |
| 3 | அனைத்து வகையான தாள்கள் |
| 4 | கிராஃப் தாள் |
| 5 | பள்ளிக்கூடப் பை |
| 6 | பயிற்சி நோட்டுப் புத்தகங்கள் |
| 7 | படம் வரையும் வண்ணம் தீட்டும் புத்தகங்கள் |
| 8 | எழுதுவதற்குப் பயன்படும் வகையில் பாடம் செய்யப்பட்ட ஆட்டுத்தோல் |
| 9 | கார்பன் பேப்பர் |
| 10 | பிரிண்டர்கள் |

**ஆரோக்கியத்துக்கான பொருட்கள்:**

| | |
|---|---|
| 1 | இன்சுலின் |
| 2 | மருத்துவப் பயன்பாட்டுக்கான எக்ஸ்ரே பிலிம்கள் |
| 3 | நோய் அறியும் கருவித் தொகுப்பு |
| 4 | பார்வைக் குறைபாட்டைச் சீராக்கும் கண் கண்ணாடிகள் |
| 5 | நீரிழிவு மற்றும் புற்றுநோய்க்கான மருந்துகள் |

**ஆடைகள்:**

| | |
|---|---|
| 1 | சில்க் |
| 2 | கம்பளி ஆடைகள் |
| 3 | காதி நூல் |
| 4 | காந்தி குல்லாய் |
| 5 | ரூ.500க்குக் குறைவான காலணி |
| 6 | ரூ.1000 வரையிலான ஆடைகள் |

குறைவான ஜி.எஸ்.டி வரி விகிதமானது விலைவாசியைக் குறைக்கும் என எதிர்பார்த்தாலும் குறுகிய காலத்துக்குள் பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்க நிலையை எட்டும் என்று கூறுவதற்கு இல்லை. ஆனால் மத்திய காலகட்டத்துக்குள் நாட்டுக்கும் அரசுக்கும் பலன்களை இது அளிக்கும் என்று நிதிசார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். பெரும்பான்மையான சரக்குகளுக்கு ஜி.எஸ்.டி வரி விகிதங்கள் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பதால் விலைவாசி குறையும் என பல பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்து இருக்கின்றனர். நாடு ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறைக்கு மாறுவதால் உற்பத்திப் பிரிவுகளும் தொழிற்சாலைகளும் தங்களது வர்த்தகத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருப்பதே தற்போது இந்தியாவுக்கான பெரும் சவாலாக உள்ளது. ஜி.எஸ்.டி.ஐ.என் மூலம் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதால், அதிக எண்ணிக்கையில் சிறிய கம்பெனிகள் கூட இந்த வரிவிதிப்பு முறைக்குள் வர வேண்டிய தேவை உள்ளது.

விலைவாசி குறையும் என்று எதிர்பார்த்தாலும்கூட, அடுத்து வரும் கொள்கைப் பரிசீலனையில் பாரத ரிசர்வ் வங்கி வட்டி விகிதங்களைக் குறைக்கும் அளவிற்கு ஜி.எஸ்.டி தாக்கத்தை ஏற்படுத்தாது என பொருளாதார நிபுணர்கள் நம்புகின்றனர். முதன்மைப் பொருளாதார அதிகாரி சுனில் சின்ஹா பாரத ரிசர்வ் வங்கி மழைக்கால சூழலை மதிப்பிடும், புதிய வரி விதிப்பு

முறை செயல்படும் விதமும் கவனத்தில் கொள்ளப்படும் என கூறியிருப்பதாக ஊடகங்கள் மேற்கோள் காட்டி உள்ளன.

ஜி.எஸ்.டியானது குறுகிய காலத்துக்குள் ஐந்து பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என பொருளாதார நிபுணர்களும் தொழில் உலகத்தினரும் கூறுகின்றனர்:

## பெரும் நிறுவனங்களையும் அவர்களின் செயல்முறைகளையும் மாற்றும்: எவ்வாறு?

புதிய வரி விதிப்பு முறையானது பல நிறுவனங்களையும் தங்களது செயல்முறைகளை மறுவடிவாக்கம் செய்ய நிர்ப்பந்திக்கிறது. வரி விதிப்பில் இருந்து தப்ப முடியாதவாறு ஜி.எஸ்.டி முறையானது இருப்பதால் இப்போது நிறுவனங்கள் வியாபாரிகளையும் விநியோகஸ்தர்களையும் இன்வாய்ஸ் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்துகின்றன. விநியோகச் சங்கிலித் தொடரை முறையாகப் பராமரிப்பதால் பெரிய நிறுவனங்கள் இதனால் பயன் அடையும். மேலும் செலுத்திய உள்ளீட்டு வரிகளுக்கு அவை சலுகைகளை வழங்க முடியும். ஆனால் சிறிய நிறுவனங்கள் அதிக அளவில் செலவழிக்க முடியாது. ஜி.எஸ்.டிக்கு ஏற்ப அவர்கள் செயல்படுவது என்பது அதிக அளவு செலவை உண்டாக்கும். ''கலால்வரி விலக்கு அளிக்கப்பட்ட மண்டலங்களில் இருக்கின்ற உற்பத்திப் பிரிவுகளைத் தொடர்ந்து பல நிறுவனங்களிலும் தாக்கம் பலவிதமாக இருக்கும். ஜி.எஸ்.டி-யை அமல்படுத்துவது என்பது விநியோகச் சங்கிலித் தொடரில் செலவை மிச்சப்படுத்துவதாக அமையும். மேலும் ஒருங்கிணைக்கப்படாத வர்த்தகம் இனி ஒருங்கிணைக்கப்பட்ட வர்த்தகமாக மாறும்'', என வெளிநாட்டு கம்பெனி ஜெஃப்பெரீஸ் கூறி உள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## குறைவான வரியால் கிடைக்கும் பலன்கள் பொதுமக்களுக்கு எவ்வாறு கிடைக்கச் செய்வது?

நிதி அமைச்சர் தலைமையிலான ஜி.எஸ்.டி கவுன்சிலானது குறைவான வரிகளால் கிடைக்கும் பலன்களை நுகர்வோர் பெற நிறுவனங்கள் உதவுகின்றனவா என்பதை கூர்நோக்குடன் கண்காணிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. எனினும் அநியாய இலாபம் ஈட்டுவதைத் தடுக்கும் கொள்கை அமல்படுத்தப்படுவது குறித்த அபிப்பிராயத்தில் நிபுணர்கள் இரண்டு பிரிவாக உள்ளனர்.

''ஜி.எஸ்.டியின் நேரடி பலன்களை பெரு நிறுவனங்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் அதே சமயத்தில் சரக்குக் கட்டணச் செலவில் மிச்சமாகும் தொகையில் இருந்து மறைமுக பலன்களில் ஓரளவையாவது (முழுவதுமாக இல்லாவிட்டாலும்கூட) அந்நிறுவனங்கள் தங்களுக்காக நிறுத்தி வைத்துக் கொள்ளும் என நாங்கள் நம்புகிறோம். மேலும் அவை வர்த்தகச் செயல்முறைகளையும் மற்றும் உள்ளீட்டு கிரெடிட்களையும் சீரமைக்கும் என்றும் நம்புகிறோம்'' என்று நிதிசார் சேவைகள் வழங்கும் நோமுரா நிறுவனம் கூறியுள்ளதாக மேலே உள்ள வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஜி.எஸ்.டி சட்டங்கள் அநியாய இலாபம் ஈட்டுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினாலும்கூட, வரி விகிதத்தைக் குறைத்தல் மற்றும் உள்ளீட்டு கிரெடிட்டுகளின் பலன்கள் நுகர்வோர்களுக்கு அதற்கு ஈடான விலை குறைப்பால்தான் கிடைக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளை அமல்படுத்துவது சிரமமானது ஆகும். அவசரகதியில் நடைமுறைப்படுத்தினால் விலைக் கட்டுப்பாடு நடவடிக்கை போன்றே பிற்போக்கு நடவடிக்கையாக இருக்கும் என்கிறார் நோமுரா.


ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையின் கீழ் செலுத்தும் வரியில் இருந்து கிடைக்கும் சேமிப்பை நிறுவனங்கள் பயன்படுத்தலாம். ஓரளவிற்கு செலவைத் தாண்டி வரவு கிடைப்பதை மேம்படுத்தலாம். புதிய தொழில் தகுதிகளை வளர்த்தெடுக்க மீதி உள்ளவை பயன்படுத்தப்படலாம்.

அரசாங்கத்தின் இந்த மாபெரும் சீர்திருத்த நடவடிக்கை ஏற்படுத்தும் உண்மையான தாக்கம் குறித்து ஒரு ஆண்டு நடைமுறைப்படுத்திய பிறகே மதிப்பிட்டுச் சொல்ல முடியும் என பெரும்பான்மையான வரிவிதிப்பு நிபுணர்கள் கருதுகின்றனர். ஆனால் இதனுடைய உடனடி பாதிப்பு என்பது உங்களுக்கு கூடுதல் செலவு ஏற்படுத்துவதாக இருக்கலாம். அதேசமயம் வர்த்தகர்களைப் பொறுத்து உள்ளீட்டு வரி கிரெடிட் மூலம் அவர்களை இது அமைதிப்படுத்தும்.

அரசாங்கத்தின் வருவாய் மீது ஜி.எஸ்.டி ஏற்படுத்தும் தாக்கம் குறித்து கூற வேண்டுமென்றால், அது காத்திருந்து கண்காணித்தல் முறையில்தான் கணிக்கப்பட வேண்டும் என்று தோன்றுகிறது. வங்கிச்சேவை மற்றும் தொலைத்தொடர்பு சேவை உள்ளிட்ட சேவைகள் கூடுதல் செலவு மிக்கவையாக மாறுகின்றன. அடுக்கு மாடி வீடுகள், ஆயத்த ஆடைகள் ஆகியவற்றை வாங்குதல், மாதாந்திர

மொபைல் பில்கள், கல்விக்கட்டணங்கள் ஆகியவையும் செலவு மிகுந்தவையாக மாறி உள்ளன. அடுக்கு மாடி வீடு அல்லது கடை வாங்கினால் தோராயமாக ஆறு சதவிகிதம் வரி செலுத்தினால் போதும் என்ற நிலை முன்பு இருந்தது. ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையில் தற்போது இது 12 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஜி.எஸ்.டியை வரவேற்றுள்ளனர். 23 மாநிலங்கள் தங்களது செக்போஸ்ட்டுகளையும் தடுப்பு வாயில்களையும் நீக்கி உள்ள சூழலில் இந்த வெளிநாட்டு கலந்துரையாடலில் தெரிவித்தார். இந்தியாவில் ஒருங்கிணைந்த சந்தையை உருவாக்க முயலும் சரக்குகள் மற்றும் சேவை வரி குறித்து கூறும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிறைவாகச் சொல்ல வேண்டும் என்றால், ஜி.எஸ்.டி என்பது வரி ஏய்ப்பவர்கள் மீதான இரண்டாவது துல்லியத் தாக்குதல் ஆகும். பெரும்பான்மை வர்த்தகர்களை வரி செலுத்தும் அமைப்புக்குள் அது கொண்டு வருகிறது. நாட்டிற்குள் சரக்குகளைத் தடையின்றி பயணிக்கச் செய்கிறது. ஒற்றை வரியுடன் ஒருங்கிணைந்த சந்தையுடன் இது




முதலீட்டாளர்கள் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை சுதந்திரமாக எடுத்துச் செல்ல முடிகிறது.

நுகர்பொருள் விற்பனைக் குழுவும் ஹெட்ஜ் நிதிய மேலாளருமான ஜிம் ரோஜர்ஸ் முன்பு தனது பங்குகளை இந்தியக் கம்பெனிகளுக்கு விற்றுக் கொண்டு இருந்தார். முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய அரசாங்கம் தவறிவிட்டது என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி 2015ஆம் ஆண்டின் இறுதியில் அவர் வெளியேறிவிட்டார். இப்போது அவர் தான் மீண்டும் இந்தியாவிற்கு வரலான என யோசிக்கிறேன் என்று கூறுகின்றார். இதுவரை இல்லாத அளவு இந்திய சந்தைகள் வளர்ச்சி அடைந்து வரும் நிலையில், இந்தியாவில் அவர் தனது வாய்ப்பை தவறவிட்டுவிடக் கூடாது என நினைக்கிறார். ''ஜி.எஸ்.டியைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன், அதிர்ச்சி அடைகிறேன், செயல் மறந்து நிற்கிறேன்'', என அவர் ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர்களை இழுக்கின்றது. மது அருந்துதல், உணவகங்களில் சாப்பிடுதல், பயணம் மேற்கொள்ளுதல், சொத்து வாங்குதல் முதலான நடவடிக்கைகளுக்கு அதிக அளவில் செலவழிக்க வேண்டி உள்ளதற்காக குடிமக்கள் அசௌகரியமாக கருதுவதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் 81% நுகர்பொருள்கள் மீது விதிக்கப்படும் ஜி.எஸ்.டி வரியானது இவற்றை விலை மலிவானதாக மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறுகிய காலத்திற்கே சிரமம்; ஆனால் நீண்ட காலத்திற்கு நன்மை. இது நாடு ஒரு புதிய வரிவிதிப்பு அமைப்புக்கு மாறுவதால் ஏற்படும் நிலையாகும். இந்நிலை இயல்பானதுதான்.

**-டி.என். அசோக்,** பி.டி.ஐ நிறுவனத்தின் பொருளாதாரப் பிரிவு ஆசிரியர். இவர் ஹாம்பர்க்கில் இருந்து வரும் லாக் இதழின் இணை ஆசிரியரும் கூட.

# சரக்கு மற்றும் சேவைவரி பின்னலமைப்பு (GSTN) : இந்தியாவின் மிகவும் புரட்சிகரமான வரி சீர்திருத்தத்தின் பின்புலத்தில் இருக்கும் தொழில்நுட்பசக்தி

- பிரகாஷ் குமார்

ஜுலை 1, 2017 இதுவரை இல்லாத மிகவும் புரட்சிகரமான வரி சீர்திருத்தங்களை இந்தியா கட்டவிழ்த்து விட்ட நாள். இந்த நிகழ்வு பொருளாதாரத்தில் ஒரு புதிய வீரியத்தைப் பாய்ச்சியது. தேசம் முழுவதையும் ஒரே சந்தையாக மாற்றியது. தனது பொருளாதாரத்தை வெளிஉலகுக்குத் திறந்துவிட்ட 26 ஆண்டுகளுக்குப் பிறகு தாராளமயமாக்கலின் வளர்ச்சி ஆதாயங்களை உறுதிப்படுத்தவும், அதை மேலும் முன்னெடுத்துச்செல்லும் நோக்கத்தோடும் இன்னொரு முக்கியமான நிதி சீர்திருத்தத்தை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப்புதிய சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் மத்திய மாநில அரசுகள் இதுவரை விதித்துவந்த 17 வகையான வரிகளும், 22வகையான செஸ் வரிகளும் இதன் கீழ் உட்படுத்தப்பட்டு ஒரே வரியாக உருப்பெற்றுள்ளது. பலவகைப்பட்ட வரிகளினால் உருவாகும் பெரும் சிக்கல்கள் இதன் மூலம் தவிர்க்கப்படுகின்றன. தொடர்ச்சியாகப் பெருகிவரும் வரிவகைகள் நீக்கப்பட்டுள்ளன. மறைமுக வரிவிதிப்பு இதன் மூலம் கணிசமாக எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலங்கள் விதித்துவந்த 34 வெவ்வேறு வகையான மதிப்புக்கூட்டு வரிகளுக்கு வெவ்வேறு விதமான 97 வகைக்கணக்குகள் 317 விதமான இணைப்பு ஆவணங்களுடனும் 28 வகை உறுதி ஆவணங்களுடனும் இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுவந்தன. மத்திய சுங்கவரிக்கு இதைப்போலவே 13வகை கணக்கு ஆவணங்களை உறுதிப்பத்திரத்துடன் சமர்ப்பிக்கவேண்டி இருந்தது. இதற்கான பணம் செலுத்தும் படிவங்களோ 12 வகைப்பட்டவைகளாக இருந்தன. இவை அனைத்துமே இப்போது 12 கணக்குப்படிவங்கள், ஒரு பணம் செலுத்துப்படிவம் என்று குறைக்கப்பட்டுவிட்டன. நாடு முழுவதற்கும் இது பொருந்தும். வரிகளை செலுத்துவதையும், கணக்குகளை சமர்ப்பிப்பதையும் ஜிஎஸ்டி எளிமையாக்கியிருப்பதோடு மட்டுமின்றி வரிச்சட்டங்களுக்குக் கீழ்ப்படியும் சுமையையும் வெகுவாகக் குறைத்துள்ளது. எளிமையாகத்தொழில் செய்வது என்பது வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## GSTN: ஜிஎஸ்டிக்கான தகவல் தொழில்நுட்ப ஆக்கம்

சரக்கு மற்றும் சேவை வரி பின்னலமைப்பு (GSTN) ஜிஎஸ்டிக்கான தகவல் தொழில்நுட்ப முதுகெலும்பாக இருக்கிறது. இந்த அமைப்பு புதிய வரிவிதிப்புப் பரிபாலன முறைக்குத் தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை உருவாக்கித்தருகிறது. இதுவரை இருந்துவந்த பலமுனை வரியிலிருந்து ஒற்றை வரி விதிப்புக்கு மாறுவதற்கு இது வழி செய்யும். இந்திய அரசாங்கமும், மாநில அரசுகளும் இணைந்து GSTN கட்டமைப்பை உருவாக்கிஉள்ளன. இந்த அமைப்புமுறை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவு செய்வதற்கானது. இது ஒரு இலாப நோக்கில்லாத நிறுவன அமைப்பாகும். இதன் 24.5% பங்குகள் மத்திய அரசிற்கும், 24.5% பங்குகள் அனைத்து மாநில அரசுகளுக்கும் உரியவை. மீதமுள்ள பங்குகள் ஐந்து தனியார் நிதி நிறுவனங்கள் வசம் இருக்கின்றன. முக்கியமான கட்டுப்பாடுகள் அரசிடம் இருக்கும் வேளையில் இந்தக் கட்டமைப்பு தனியார் துறையின் நெகிழ்ச்சித்தன்மையையும் கொண்டுவருகிறது.

எந்தத்தவறும் நேர்ந்துவிடக்கூடாது. வெவ்வேறு நிர்வாகப் படிநிலைகளில் செயல்பட்டுவரும், அபாரமான எண்ணிக்கையில் இருக்கும் வரிவிதிப்பு முறைகளை ஒற்றை இடைமுகத்தில் இணைப்பது சாதாரணமான காரியமல்ல. சரக்கு மற்றும் சேவை வரி அமைப்புமுறைத்திட்டம் தனித்தன்மையுடைய ஒன்று. இது ஒரு சிக்கலான தொழில்நுட்ப முன்முயற்சி. வரிசெலுத்துபவர், மத்திய அரசு, மாநில அரசுகள் ஆகிய அனைவரும் பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒத்த தன்மையுள்ள இடைமுகப்பை நிறுவவேண்டிய தேவையின் அடிப்படையில் இது உருவானது. வெவ்வேறு முதிர்ச்சி நிலைகளில் இருக்கும் முற்றிலும் வெவ்வேறான 36 வழிமுறைகளை இணைத்து ஒன்று சேர்த்து முடிப்பது மிகவும் சிக்கலான செயலாகும். ஜிஎஸ்டி என்பது பொருள்கள் வாங்கப்படும் இடத்தில் வசூலிக்கப்படுவது என்பதோடு, IGSTக்கு மத்திய, மாநில அரசுகளுக்கிடையே ஒரு வலுவான பைசல் அமைப்பு முறையும் தேவைப்படுகிறது. மாநிலங்களுக்கிடையே வலுவான தகவல் தொழில்நுட்பக்கட்டமைப்பும்,

சேவைப்பின்புலமும் ஏற்படுத்தப்பட்டு தரவுகள் பெறப்பட்டு, ஆராயப்பட்டு வரி செலுத்துவோர், மாநிலங்கள், மத்திய அரசு, கணக்கு பார்க்கும் அலுவலகங்கள், வங்கிகள், ரிசர்வ் வங்கி ஆகியவற்றுடன் தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டால்தான் பைசல் சாத்தியப்படும்.

திட்டமிட்டு, வியூகங்கள் அமைத்து, நடைமுறைப்படுத்தி, சரக்கு மற்றும் சேவைவரி பின்னலமைப்பை (GSTN) வளர்த்தெடுப்பதற்கு கடந்த சில ஆண்டுகளாக ஓய்வின்றி உழைத்து ஒரு பொதுவான ஜிஎஸ்டி நுழைவாயில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த GST – IT அமைப்பு முறையில் இது செயல்பட்டுவருகிறது. பயன்படு மென்பொருள்களை உருவாக்குவதற்கு GSTN இன்போசிஸ் உடன் இணைந்து செயலாற்றியது. சேவை வழங்கலை நிர்வகிக்கும் பொறுப்பில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இன்போசிஸ் இருந்துவரும்.

பொதுவான ஒரு ஜிஎஸ்டி நுழைவாயில் நாட்டின் எந்தப்பகுதியிலிருந்தும் வரி செலுத்தக்கூடிய அனைவருக்குமான ஒற்றை இடைமுகப்பாகத் திகழும். வரி செலுத்துபவர்களில் யாரேனும் தணிக்கைக்கோ, மீளாய்வுக்கோ உட்பட நேர்ந்தால் அத்தகையவர்கள் மட்டுமே வரித்துறை அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளவேண்டி நேரிடும். மற்ற அனைத்து நேர்வுகளிலும், ஏறத்தாழ 95% நேர்வுகளில் பொதுவான GST இடைமுகப்பே வரி செலுத்துவோருக்கான ஒரே நுழைவாயிலாக இருக்கும்.

### இது எப்படி வேலை செய்கிறது?

பதிவு செய்துகொள்ளுதல், பணம் செலுத்துவதற்கான படிவங்களை குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் உருவாக்குதல், தொழில் செய்வோருக்கிடையேயான விலைப்பட்டியல் விவரங்களின் அடிப்படையில் கணக்குகளை சமர்ப்பிப்பது ஆகியவற்றை செய்வதற்கு ஏற்ற வகையில் GSTN வடிவமைக்கப்பட்டுள்ளது. கணிப்புகள், மேல்முறையீடுகள், செயலாக்கம் போன்றவற்றிற்குத் தேவைப்படும் பின்புலத்தொகுப்புக்களை 27 மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் வழங்குமாறு GSTN கேட்டுக்கொள்ளப்பட்டது. மதிப்புகூட்டுவரி (VAT), சேவைவரி, மத்திய சுங்கவரி, மற்ற பிற வரிகளுக்காக ஏற்கனவே பதிவு செய்துகொண்டிருப்பவர்கள் ஜிஎஸ்டியில் பதிவுசெய்துகொள்வதற்கான தொகுப்புகளை நவம்பர் 8, 2016இல் GSTN வெளியிட்டது. இத்தகைய வரிகள் யாவும் தற்போது ஜிஎஸ்டியால் உட்கிரகிக்கப்பட்டுவிட்டன. எனவே இந்தப் புதிய நுழைவாயில் வரிசெலுத்தும் அனைவருக்கும் பொதுவான ஒரே நுழைவாயிலாக ஆகியிருக்கிறது. இங்கு பெறப்படும் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அவை முழுமையானதாக இருக்கும் பட்சத்தில் PAN, CBDT, DIN/CIN, ஆதார் ஆகியவற்றுடன் சரிபார்க்கப்படுகிறது.

ஜிஎஸ்டி நுழைவாயிலில் உருவாக்கப் பட்டிருக்கும் ஒரு பணம் செலுத்தும் படிவத்தைக்கொண்டு, வரிசெலுத்துவதும் தொடங்கியிருக்கிறது. பணம் செலுத்தும் படிவம் GSTNஇல் உருவாக்கப்பட்டதும் வரி செலுத்துபவரின் பெயர், தொகை, எந்தெந்தத் தலைப்புகளைன் கீழ் வரி செலுத்தப்படுகிறது போன்ற விவரங்கள் அதில் நிரப்பப்படவேண்டும். ஏற்பளிக்கப்பட்டுள்ள 25 வங்கிகளில் மின்னணு பரிமாற்றத்தின் மூலம் பணம் செலுத்தலாம். வங்கியில் மாதத்திற்கு ரூ.10ஆயிரம் வரையிலான வரிப்பணத்தை நேரடியாக செலுத்தமுடியும். NEFT/RTGS முறைகளைப் பயன்படுத்தி எந்த வங்கியிலிருந்தும் பணத்தைச் செலுத்தலாம். ஒவ்வொரு நாளும் பெறப்பட்ட வரிக்கட்டணங்களை உறுதிசெய்து அதில் மத்திய, மாநில அரசுகளுக்கு உரிய பங்கினைப் பிரித்துக்காட்டி, இதுவரை செலுத்தப்பட்டுள்ள வரி பற்றிய முழு விவரங்களையும் தெரிவித்து, கணக்கில் காணப்படும் வேறுபாடுகளைக் களைந்து சரிசெய்வதற்கு வரித்துறையினருக்கு GSTN உதவுகிறது. பணம் செலுத்தப்பட்ட விவரங்களை வங்கிகளிடமிருந்து ரிசர்வ் வங்கி நாள்தோறும் பெறும். பணம் செலுத்தப்பட்ட விவரங்கள் சரிபார்த்து உறுதி செய்யப்பட்டு வரி செலுத்துவோரின் கணக்குப்பேரேட்டில் பதிவு செய்யப்படும்.




### இணக்கத்தை எளிமையாக்குதல்:

வரி செலுத்துவது வரி செலுத்தவேண்டியவர்களின் கடமை. வரிக் கணக்குகளை எளிமையான விதத்தில் பதிவு செய்வதற்கான வசதிகளும், குறுகிய காலத்தில் இணக்கமான முறையில் வரி செலுத்துவதற்கான வழிவகைகளை எற்படுத்தித்தருவதும் வரி வசூலிப்பவர்களின் கடமை. எளிய முறையில்

இணக்கமான வழியில் வரி செலுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்ற எண்ணமே வரி சீர்திருத்தங்களின் பின்புலமாக இருக்கிறது. வரி வசூலையும், வரிக்கணக்கு சமர்ப்பிப்பதையும் எளிமையாக்குவதற்கு GSTN போன்ற பலவிதமான சேவைகளும், தொழில்நுட்பம் சார்ந்த வசதிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதமும் GST பரிபாலனத்தில் சாதாரணமான, வழக்கமான வரிசெலுத்துவோர் தாங்கள் பொருள்களை வெளியில் விற்ற விவரங்களை அடுத்த மாதத்தின் 10ஆம் தேதிக்குள் GSTN 1 வடிவத்தில் சமர்ப்பிக்கவேண்டும். இதன் ஒரு பகுதியாக மிக எளிதாக, மிகக்குறைவான செலவில் மாதாந்திரக்கணக்குகளை தயாரித்து அனுப்புவதற்கு வசதியாக எக்செல் வடிவத்தில் மிக எளிய படிவத்தினை GSTN உருவாக்கித்தந்துள்ளது. எல்லாவிதமான விலைப்பட்டியல்களிலிருந்தும் தரவுகளை தொடர்ந்து ஒப்பிட்டுப்பார்க்கமுடியும். அதை JSON கோப்பாக மாற்றி ஜிஎஸ்டி முகப்பில் பதிவேற்றம் செய்துவிடவேண்டும். இந்த ஒரு காரியத்துக்கு மட்டுமே வரிசெலுத்துவோருக்கு இணைய இணைப்பு தேவைப்படும்.

நுகர்வோருக்கு மட்டும் விற்பனை செய்யும், சிறிய அளவில் வரி செலுத்துவோரிடம் வணிகர்களுக்கிடையிலான விலைப்பட்டியல் இருக்காது. இத்தகையவர்கள் வெறும் ஐந்து வரிகளில் விவரங்களைத் தந்துவிடமுடியும். அதைப்போலவே, 75 இலட்சமும் அதற்குக்கீழும் வரவு செலவு உள்ள வரி செலுத்துநர்கள் 3 மாதத்திற்கு ஒரு முறை வரிகணக்கை சமர்ப்பிக்கும் விருப்பத்தேர்வை செய்துகொள்ளலாம். இந்தக் கணக்கும் மிக எளிய முறையில் இருக்கும்.

வரிக்கணக்கு தயாரிப்பதையும், சமர்ப்பிப்பதையும் எளிதாக்குவதுதான் நமது நோக்கம். எக்செல் வடிவில் இருக்கும் கோப்பைப் பயன்படுத்தி பல்வேறு தலைப்புகளின் கீழ் உள்ள தரவுகளை வரிசெலுத்துவோர் நிர்வகிக்கமுடியும். வாராவாரமோ அல்லது சீரான இடைவெளிகளிலோ பொருள்களை விற்பனை செய்யும் விவரங்களை வரிசெலுத்துவோர் தயாரித்துக்கொள்ளமுடியும். அதனை ஜிஎஸ்டி முகப்பில் எளிதில் பதிவுவேற்றம் செய்துகொள்ளவும் முடியும். இந்தச்செயலி ஒரே சமயத்தில் 19000 வரிகளில் இடம்பெற்றுள்ள தரவுகளை உள்வாங்கிக்கொண்டு அதை 5MB கோப்பாக உருவாக்கும். இதன் வழியாக, தரவுகளை பலமுறை உள்ளீடு செய்து பதிவேற்றம் செய்து, தேவைப்பட்டால் GSTR-1 ஐ உருவாக்கமுடியும். இந்த வழிமுறையின்படி வணிகத்தொடர்புடைய நடுத்தர வரி செலுத்துநர்கள் தங்களின் வரி தொடர்பான கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிக்கமுடியும். GSTR-1 வரிக்கணக்கை இணைய இணைப்பு இல்லாமலேயே உருவாக்கிக் கொள்ளவும் முடியும். இணைய இணைப்பு சரிவர இல்லாத தொலைதூரப் பகுதிகளில் இருக்கும் வரி செலுத்துவோர் இதனால் பயன் பெற இயலும்.

## தொழில் செய்வதை மேலும் சுலபமாக்கும் வழிமுறை:

எளிதாகத் தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு பொருளாதாரத்தின் வெளிப்படையான, ஏதுவான தன்மைக்கு முக்கியமான அடிப்படை. துரதிருஷ்டவசமாக இந்தியா, உலகப்பொருளாதாரத்தில் இந்த வகையில் தொடர்ந்து பின்தங்கி வந்துள்ளது. எளிதாகத் தொழில் புரிவது எனும் உலக வங்கியின் அறிக்கை தொழில் ஆரம்பிப்பதிலும், அதனை நடத்துவதிலும் தொழில் முனைவோர் சந்திக்கும் பல்வேறு இடையூறுகளை சுட்டிக்காட்டும் காரணிகளில் முக்கியமான ஒன்றாக வரிசெலுத்துவதைக் கணக்கில் கொண்டுள்ளது. இங்கு அலசி ஆராயப்பட்ட முக்கியமான குறியீடுகளில் ஒன்று எளிதில் வரி செலுத்துவது என்பதுமாகும்.

GSTNஇன் நோக்கம் வரி செலுத்துவதை உறுதிப்படுத்துவது மட்டுமல்ல. வரி செலுத்தும் வழிமுறையை எளிதாகவும், வசதியாகவும் மாற்றுவதும் தான். இந்தக்குறியீடு ஒன்றை மட்டுமே சீர்படுத்தி அமைப்பதின் மூலம் எளிதாகத்தொழில் செய்வதை கணிசமாக உயர்த்தி உலகஅரங்கில் இந்தியாவின் தரவரிசையை மேம்படுத்திவிடமுடியும். தாங்களாகவே செய்துவிடக்கூடிய எளிய வரி செலுத்துமுறை கைபேசியிலும் கூட வைத்துக்கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கி அளிக்கப்பட்டுள்ளது. தொழில்கள் சிறக்கவும், தொழில் முனைவோர் அதிகாரம் பெறவும் வரி செலுத்துமுறை எளிதாகவும் இது உதவும்.

GSTNஆல் சக்தியளிக்கப்பட்ட GSTயை அமலாக்குவதால், எளிதில் தொழில் செய்யும் வகை முறையில் இந்தியா மிகப்பெரிய ஆதாயங்களை எதிர்நோக்கிஉள்ளது. GSTஇன் அமலாக்கம் தொழில்வளர்ச்சியை ஊக்கப்படுத்தும், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

– **பிரகாஷ் குமார்**, தலைமை செயல் அதிகாரி, சரக்கு மற்றும் சேவை வரிக்கட்டமைப்பு (GSTN).

# ஜி.எஸ்.டி - புதுயுகத்தின் விடியல்

- உபேந்தர்குப்தா

ஜூன் 30, 2017 நள்ளிரவில் நாடாளுமன்றத்தில் ஒலித்த மணியின் ஓசை இந்தியாவின் அரசியல் முதிர்ச்சி, ஒட்டுறவு ஆகியவற்றை உலகம் முழுவதும் எக்காலமிட்டு எதிரொலித்தது. மறைமுக வரிவிதிப்பை அதன் சிக்கலான அராஜக நிலையிலிருந்து மாற்றி அமைத்து சிறப்பான ஒற்றை வரி விதிப்பை நாடு முழுவதற்கும் அறிமுகம் செய்தபோது அது இந்தியப்பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான திருப்பமாக அமைந்தது. இந்திய அரசியல்வாதிகளுக்கு GST வெற்றிக்கோட்டையாக அமைந்துள்ளது. இந்தியப்பொருளாதாரத்தை அநேகவிதமான கொடுங்கோன்மைகளிலிருந்தும், சிக்கலான வழிகளில் சிக்கித்தவித்துவந்த நிலையிலிருந்து வணிகம், தொழில், பொதுமக்கள் ஆகியோரை காப்பாற்றிய மீட்பராக GST கருதப்படுகிறது.

அரசியல் ரீதியாக இந்தியா என்பது மாநிலங்கள் சேர்ந்த ஒன்றியம். 1947 முதல் நாம் ஒரே தேசமாக இருந்து வருகிறோம். ஆனால், நாம் பொருளாதார ஒன்றியமாக இருக்கிறோமா? தமிழ்நாட்டில் உட்கார்ந்து கொண்டு ஒரு வணிகர் தனது பொருள்களுக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள வரிவிகிதங்கள் பற்றிய கவலைகள் ஏதுமின்றி இமாச்சலப்பிரதேசத்திற்கு விற்கமுடியுமா? ஜம்முகாஷ்மீரிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு புறப்படும் ஒரு வாகனம் கன்னியாகுமரி வரை பயணிக்கும் போது ஒவ்வொரு மாநில எல்லையிலும் உள்ள சோதனைச்சாவடிகளில் நிறுத்தப்படாமல் செல்லமுடியுமா? இத்தகைய தங்கு தடைகளை நீக்கும் வல்லமை கொண்டதாக, இந்தியாவை ஒற்றைப்பொருளாதார நாடாக அல்லது ஒரேதேசிய சந்தையாக மாற்றியமைக்கும் திறனுடையதாக GST இருக்கிறது. நாட்டின் எந்த மாநிலத்திலும் எந்தவித அச்சமும் தயவும் இன்றி ஒரு தேசியப் பொதுச்சந்தையில் வணிகம் செய்யமுடியும்.

GST என்பது என்ன என்பது பற்றிய பொதுவான முரண்டு பிடித்தல் இப்போது இல்லை. தேசமெங்கும் விழிப்புணர்வு பரவி இருக்கிறது. ஜிஎஸ்டி என்பது சரக்கு மற்றும் சேவை வரியைக் குறிக்கிறது என்று குழந்தைகள் கூட அறிவார்கள். இது போலியான வாதமன்று. ஆகப்பெரிய இத்தகைய சீர்திருத்தத்திற்குக் கட்டியம் கூற வேண்டிய தேவை என்ன? என்பதைத்தான் அவர்கள் அறியவேண்டிஇருக்கும். புதிய சகாப்தம் பிறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கும் மேல் ஆனது ஏன்? நம்முடைய வரிவிதிப்பு முறையின் வரலாற்றுப்பின்புலத்தில் இதற்கு சரியான பதில் இருக்கிறது. காலகாலமாக, மத்தியஅரசுதான் உற்பத்திப்பொருள்களின் மீது சுங்கவரியை விதித்துவந்திருக்கிறது. சேவைகளுக்கு சேவை வரியை விதித்திருக்கிறது. மாநிலங்களுக்கிடைய பொருள் விற்பனை நடக்கும் போது மத்திய அரசு CST வரியை விதித்துவந்தது. ஆனால் இந்த வரி மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும். இவை தவிர மாநில அரசுகள் சில்லறை விற்பனைக்கு மதிப்புக்கூட்டுவரியை (VAT) விதித்தன. மாநிலத்திற்குள் பொருள்கள் கொண்டுவரப்படும்போது நுழைவுவரி போடப்பட்டது. ஆடம்பரவரி, கொள்முதல் வரி போன்றவையும் விதிக்கப்பட்டு வந்தன. இத்தகைய வரிகளின் எண்ணிக்கை தலைசுற்றக்கூடிய வகையில் இருந்ததோடு மட்டுமின்றி, இத்தகைய வரிகளை வசூலிக்கும் நடைமுறைகள் வரி செலுத்துவோருக்கு சிம்மசொப்பனமாக இருந்துவந்தன. இத்தகைய வரிகள் தனித்தனி குழிகளைகளைப்போல இருந்ததுதான் மேலும் சிக்கல்களை உண்டாக்கியது. மத்தியஅரசுக்கோ அல்லது மாநிலஅரசுகளுக்கோ செலுத்தப்படும் வரிகளில் எந்தவிதமான கழிவும் கிடையாது. இதன் விளைவாக வரிவிதிப்பின் தொடர்ச்சியான விளைவுகள் தெரியத்தொடங்கின. மாநிலங்களுக்கு இடையிலும், மாநிலங்களுக்கு உள்ளேயும் நடைபெறும் விற்பனைகளில் நேர்மையற்ற மனிதர்கள் சிலர் இத்தகைய தடைகளைப்பயன்படுத்திகொண்டு ஆதாயம் பெற்றுவந்தனர். மெத்தனம், திறமையற்ற நடைமுறைகள் இவற்றோடு சேர்ந்திருந்த சிக்கலான வரிவிதிப்பு நடைமுறைகள் இந்தியாவில் வணிகத்தை துயர்மிகுந்த செயலாக மாற்றி இருந்தன.

இத்தகைய இடர்மிகுந்த அனுபவங்கள் ஒரு கெட்ட கனவாக மறக்கப்பட இருக்கின்றன. இனி நாம் பார்க்கப்போவது திறன்மிகு நிர்வாகம். இதன் முக்கிய பண்புகளான தார்மீகத்தன்மை, பரிவுடன் மறுமொழி கூறுகிற வெளிப்படையான போக்கு ஆகியவை இதில் இருக்கும். ஜிஎஸ்டியுடன் பல்வேறு வரிகள் ஒன்றிணைக்கப்பட்டு பொருள்கள், சேவைகளின் மீது விதிக்கப்படும் ஒற்றைவரியாக அது இருக்கும். உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளரிலிருந்து தொடங்கி கடைசியாக இருக்கும் சில்லறை வணிகர்கள் வரை உள்ள ஒவ்வோர் நிலையிலும் பொருள்களுக்கும் சேவைக்கும் இது விதிக்கப்படும். மத்திய, மாநில அரசுகளுக்கு வரி விதிக்கும் தனித்தனி அதிகாரங்கள் உள்ள கூட்டாட்சியாக இந்தியா ஆகியிருக்கிறது. இந்தியாவில் ஜிஎஸ்டி இருவிதமாக வசூலிக்கப்படும். மத்திய சரக்கு மற்றும் சேவைவரி (CGST), சரக்கு மற்றும் சேவைக்கான மாநிலவரி (SGST) என இது விதிக்கப்படும். மாநிலங்களுக்கிடையே பொருள்களும் சேவைகளும் வழங்கப்படும் போது மத்திய அரசு ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவைவரியையும் (IGST) விதிக்கும். இது தவிர யூனியன் பிரதேச சரக்கு மற்றும் சேவைவரி (UTGST) சட்டசபைகள் இல்லாத யூனியன் பிரதேசப்பகுதிகளுக்கிடையே பொருள், சேவை பரிமாற்றம் நிகழும் போது விதிக்கப்படும். அதோடு கூட, ஜிஎஸ்டி அறிமுகம் செய்யப்படுவதால் மாநிலங்களுக்கு ஏதேனும் வருவாய் இழப்பு ஏற்பட்டால் அதை ஈடு செய்வதற்கான நிதிக்காக ஜிஎஸ்டி இழப்பீட்டு வரி சில குறிப்பிட்ட ஆடம்பரப்பொருள்கள், சேவைகளுக்கு விதிக்கப்படும்.

**ஜிஎஸ்டிஇன் முக்கியமான இயல்புகள்:**

ஜிஎஸ்டியைப்பற்றி புரிந்துகொள்வதற்கு பின்வரும் விவரங்கள் உதவும்:

i) ஜம்முகாஷ்மீர் உள்பட இந்திய நிலப்பரப்பு முழுவதற்கும் ஜிஎஸ்டி வரிவிதிப்பு பொருந்தும்.

ii) பொருள்கள், சேவைகள் வழங்கலுக்கு அவை வழங்கப்படும் இடத்தில் மட்டும் ஜிஎஸ்டி வரிவிதிப்பு செய்யப்படும். இதுவரை பொருள் உற்பத்திக்கும், விற்பனைக்கும், சேவை வழங்களுக்கும் தனித்தனியே வரி விதிப்பு செய்யப்பட்டு வந்தது.

iii) இலக்கு நோக்கி விதிக்கப்படும் வரி என்பது இதன் தாத்பரியமாகும். பொருள் உற்பத்தியாகும் இடத்தில் வரியை விதிக்காமல் பொருள்கள் நுகரப்படும் இடத்தில் விதிக்கப்படும் வரியாகும் இது.

iv) இறக்குமதியாகும் பொருள்கள் மாநிலங்களுக்கிடையில் நடைபெறும் பொருள்வழங்கலைப்போலக் கருதப்படும். அவற்றிற்கு விதிக்கப்படும் சுங்க வரிகளோடு சேர்த்து IGST வரியும் விதிக்கப்படும்.

v) வேறு நாடுகளிலிருந்து வழங்கப்படும் சேவைகள் மாநிலங்களுக்கு இடையிலான சேவையைப்போலவே கருதப்பட்டு IGST வரி விதிப்புக்கு உட்படுத்தப்படும்.

vi) மத்திய ஜிஎஸ்டி வரி, மாநில ஜிஎஸ்டி வரி, யூனியன்பிரதேச ஜிஎஸ்டிவரி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டிவரி ஆகியவை மத்திய அரசும், மாநில அரசுகளும் ஜிஎஸ்டி குழுமத்திடம் பரஸ்பரம் ஒப்புக்கொண்டஅளவில் விதிக்கப்படும்.

vii) 5%, 12%, 18%, 28% ஆகிய நான்கு விகிதங்களில் ஜிஎஸ்டி வரிவிதிப்பு இருக்கும். மதிப்புமிக்க உலோகங்களுக்கு 3% ஜிஎஸ்டி விதிக்கப்படும். குறிப்பிட்ட சில பொருள்களுக்கும் சேவைகளுக்கும் விதிவிலக்கு தரப்பட்டுள்ளது.

viii) அனைத்துவிதமான சரக்குகள், சேவைகளையும் உள்ளடக்கியதாக ஜிஎஸ்டி அமைகிறது. மனிதர்களின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்படும் ஆல்கஹால் அரசியல் சட்டப்படி ஜிஎஸ்டியின் கீழ் வராது. ஆல்கஹால் தவிர பெட்ரோலியப்பொருள்கள் (கச்சா எண்ணெய், பெட்ரோல், டீசல், ATF, இயற்கை எரிவாயு போன்றவை தற்போது ஜிஎஸ்டியில் வரவில்லை. ஆனால், இவைகளை ஜிஎஸ்டி குழுமத்தின் பரிந்துரையின் பேரில் எந்த நேரத்திலும் ஜிஎஸ்டி வரம்பிற்குள் கொண்டுவரமுடியும்.

ix) ரூ.20இலட்சம் வரையிலும் ஒரு பொதுவான ஆரம்பநிலை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டப்பிரிவு 279A இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிவகை மாநிலங்களுக்கு இந்த விலக்கு ரூ.10இலட்சமாகும். ஜம்மு காஷ்மீர் மாநிலம் இந்த விலக்கில் இடம்பெறாது). மத்தியஜிஎஸ்டி, மாநில ஜிஎஸ்டி, யூனியன் பிரதேச ஜிஎஸ்டி ஆகிய மூன்றுக்கும் இந்த விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. இது தவிர, தொகுப்புத்திட்டத்தின் கீழ் வரியை செலுத்தும் விருப்பத்தேர்வும் இருக்கிறது (அதாவது நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாக செலுத்துவது). ஆண்டுக்கு 75

இலட்சத்துக்கு வரவுசெலவு மேற்கொள்ளும் சிறிய அளவிலான வரிகட்டுவோருக்கு இது பொருந்தும். இந்த விருப்ப வரிவிதிப்புக்கான உச்சவரம்பு அரசியல் சட்டப்பிரிவு 279Aஇன் கீழ் வரும் தனிவகை மாநிலங்களுக்கு (ஜம்மு காஷ்மீர் தவிர) ரூ.50லட்சம்).

x) சிறப்புப் பொருளாதாரமண்டலத்திற்கு பொருள் வழங்குவதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் ஜிஎஸ்டி வரி கிடையாது.

xi) மூலதனப்பொருள்களுக்கு செலுத்தப்பட்ட மத்திய ஜிஎஸ்டி, விற்பனைப்பொருளுக்கான மத்திய ஜிஎஸ்டியுடனும், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் மூலதனப்பொருள்களுக்கு செலுத்தப்பட்ட வரி மாநில, யூனியன் பிரதேச விற்பனை வரியுடனும் நேர் செய்துகொள்ளப்படலாம். இவற்றை வேறுவிதமாக நேர் செய்து கொள்ளமுடியாது. IGST செலுத்தப்பட்ட சில குறிப்பிட்ட நேர்வுகளில் சில குறிப்பிட்ட வழிமுறைகளின்படி வரிகளை நேர் செய்துகொள்ளமுடியும்.

xii) வரிக்கணக்குகளை மின்பதிவு மூலம் சமர்ப்பிக்கலாம்.

xiii) இணையவழி வங்கிச்சேவை, பற்று அட்டை, கடன் அட்டை, தேசிய மின்னணுப்பணப்பரிமாற்றம் (NEFT) உடனடி பெருந்தொகைப்பரிமாற்றம் (RTGS) போன்ற பலவிதமான வழிமுறைகள் உள்ளன.

xiv) கூடுதலாக செலுத்தப்பட்ட வரிப்பணத்தைத் திரும்பப்பெறுவதற்கு வரி செலுத்துபவர் இரண்டு ஆண்டுகளுக்குள் கோரிக்கை சமர்ப்பிக்கலாம்.

xiv) பதிவுசெய்துகொண்டுள்ள நபர் தாமாகவே கணக்கிட்டு வரி செலுத்துவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

xvi) வரி விஷயங்களில் கட்டுப்பாடுகள் தெளிவாக இருக்கவேண்டும் என்று வரி செலுத்துபவர் அதற்குரிய மாநில அதிகார அமைப்பை நாடலாம். மாநில அதிகார அமைப்புகளின் யோசனைகளை CGST சட்டத்தின் கீழ் மத்திய அரசு பின்பற்றும்.

xvii) பொருள்களிலும், சேவையிலும் குறைக்கப்பட்டுள்ள வரியை நுகர்வோர் பயன்பெறும்படி வணிக அமைப்புகள் வழி செய்யவேண்டும். வணிக அமைப்புகள் ஆதாயம் அடைவதற்கு எதிரான சட்டக்கூறுகள் ஜிஎஸ்டி சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

xviii) தற்போது வேறு வகைகளில் வரி செலுத்தி வருபவர்கள் ஜிஎஸ்டி வரி முறைக்கு இடரின்றி மாறுவதற்கு விரிவான இடைக்கால ஏற்பாடுகள் பல செய்யப்பட்டுள்ளன.

**ஜிஎஸ்டியினால் கிடைக்கக்கூடிய ஆதாயங்கள்:**

அ) இந்தியாவில் உற்பத்தி:

i) இந்தியாவிற்கு ஒன்றுபட்ட ஒரு பொதுச் சந்தையை உருவாக்க உதவுகிறது. அந்நிய முதலீடுகள் அதிகரிக்கவும், இந்தியாவில் உற்பத்தி பெருகவும் உதவும்.

ii) மூலப்பொருள்களுக்கு செலுத்தப்படும் வரியை கழித்துக்கொள்வதன் மூலம் பொருள்கள், சேவைகளில் ஒவ்வொரு படிநிலையிலும் ஏற்படக்கூடிய தொடர் விளைவுகளை மட்டுப்படுத்தும்.

iii) சட்டங்கள், வழிமுறைகள், வரிவிகிதங்கள் ஆகியவற்றிற்கிடையே ஒத்திசைவு

iv) நம்முடைய பொருள்களின் ஏற்றுமதியில் வரி விதிப்பை திறன்பட சமன்படுத்துவதன் மூலம் அவை பன்னாட்டுச் சந்தையில் போட்டியிடமுடியும். இந்தியாவின் ஏற்றுமதியும் அதிகரிக்கும்.

v) உற்பத்தி நிறுவனங்களின் சராசரி வரிச்சுமை குறையும். இதனால் விலை குறையும். விலை குறைவதால் நுகர்வு அதிகரிக்கும். நுகர்வு அதிகரித்தால் உற்பத்தியும் அதிகரிக்கும். இதனால் உற்பத்தி நிறுவனங்கள் வளர்ச்சி அடையும். இதன் காரணமாக இந்தியா ஒரு உற்பத்திக் கேந்திரமாக மாறும்.

ஆ) எளிமையாக தொழில் செய்வது:

i) ஒரு சில விதிவிலக்குகளை மட்டுமே கொண்டிருக்கும் எளிமையான வரி விதிப்பு முறை

ii) தற்போதுள்ள பலதரப்பட்ட வரிவிதிப்பு முறைகளைக்குறைத்துஎளிதாக்கி சீரான தன்மையைக்கொண்டுவருதல்

iii) வரி செலுத்தும் வழிவகைகளில் குறைவான செலவினம் பலவிதமான பதிவேடுகளை வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஆகவே இதற்கான முதலீடும், மனித ஆற்றல் தேவையும் வெகுவாகக்குறையும்.

iv) பதிவு, வரிக்கணக்கு சமர்ப்பித்தல், பணம் திரும்பப்பெறுவது, வரி செலுத்துவது ஆகிய பல வழிமுறைகளும் எளிமையாக்கப்பட்டு தானியங்கி முறையில் செயல்படுத்தப்படுகின்றன.

v) அனைத்துவிதமான இடைவினைகளையும் ஜிஎஸ்டிஎன் நுழைவாயில் மூலமாகவே செய்துகொள்ளமுடியும். எனவே வரி செலுத்துபவரும் வரி நிர்வாகத்தினரும் நேரடியாக சந்திதுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

vi) வரி செலுத்துபவர்கள் பதிவு செய்துகொள்வதற்கும், வரிக்கணக்கு சமர்ப்பிப்பதற்கும், வரிவிகிதங்களுக்கும் எளிய நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பொருள்களும் சேவைகளும் பொதுவான விதத்தில் பகுக்கப்பட்டுள்ளன.


இ) நுகர்வோருக்கு ஆதாயங்கள்:

i) உற்பத்தியாளர், மொத்த விற்பனையாளர், சில்லறை விற்பனையாளர் ஆகியோருக்கிடையே வரிகளைச் சமன் செய்யும் இசைவான ஏற்பாடுகளின் காரணமாக பொருள்களின் விலை குறைய வாய்ப்புள்ளது.

ii) கம்பெனிகளின் சராசரி வரிச்சுமை குறையும் வாய்ப்பிருப்பதால் பொருள்களின் விலை குறையும். விலை குறைவதால் நுகர்வு பெருகும்.

**முடிவுரை:**

ஜிஎஸ்டி வரியை குறுகிய பார்வை கொண்டு பார்க்கும்போது, மறைமுக வரி சீர்திருத்தத்தின் சில நிழல்கள் மட்டுமே புலப்படும். இந்த நிலைமாற்ற சீர்திருத்தத்தை விசாலமான, பரந்த பார்வைகொண்டு




பார்க்கும்போது, இது ஒரு வணிக மாற்றமாக, சமூக மறுஉற்பத்தியாக, பொருளாதார வளர்ச்சியின் தொய்வை நீக்கும் ஒரு புரட்சியாக, உலக மாற்றங்களினால் நமது பொருளாதாரம் பாதிப்புகளுக்கு உள்ளாகாமல் தடுக்கும் தடுப்பு சக்தியாகப் பார்க்கமுடியும். நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையதாக நமது பொருளாதாரம் உயரும் என்பது திண்ணம்.

- **உபேந்தர்குப்தா**, சுங்கம் மற்றும் கலால் வரித்துறையின் மத்திய வாரியத்தில் GST ஆணையாளர்.

# GSTயும் எளிதாகத் தொழில்செய்தலில் அதன் தாக்கமும்

- டானிஷ் ஏ.ஹாஷிம், வர்ஷாகுமாரி

**1. அறிமுகம்:**

மிக முக்கியமான வரி சீர்திருத்தத்திற்கான தேசத்தின் 17 ஆண்டு காலத் தொடர்பயணத்திற்குப்பிறகு இது பற்றி நடைபெற்ற பல சுற்று விவாதங்கள், கலந்துரையாடல்கள், கூட்டங்கள், ஆலோசனைகள், கருத்துவேறுபாடுகள் ஆகியவற்றைக் கடந்து, ஜூலை 1 ஆம் தேதி முதல் சரக்குமற்றும் சேவைவரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப்பயணம் அடல்பிஹாரி வாஜ்பாயி அரசாங்கத்தில் 2000 ஆண்டில் தொடங்கியது. ஒரு குழு அமைக்கப்பட்டு GSTக்கான மாதிரியை பரிந்துரைக்குமாறு அப்போது அக்குழுவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் பிறகு, 2003இல் விஜய்கேல்கர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன்பிறகு எந்தவிதமான பின்வாங்கலுமின்றி மத்திய அரசானது மாநில அரசுடன் இணைந்து முரண்களின்றி இதற்காக உழைத்து வந்தது. GSTயை விரைவில் அறிமுகம் செய்யவேண்டும் என்பது நோக்கமாக இருந்தது.

GSTயை செயல்படுத்தி இருப்பதால் இந்தியா 160க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் அணியில் சேர்ந்துள்ளது. ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து, தென்கொரியா, ஜப்பான், கனடா, ஆஸ்திரேலியா போன்ற பல நாடுகள் GSTயை அறிமுகம் செய்துள்ளன. GSTயை அறிமுகப்படுத்திய முதல் நாடு பிரான்சு. வரி ஏய்ப்புகளைத்தடுப்பதற்காக 1954இல் இங்கு GST அறிமுகம் செய்யப்பட்டது. இந்தியாவில் GSTஇன் அறிமுகம் எளிதில் தொழில் செய்யும் நிலையைக் கொண்டுவருவதில் ஒரு பெரிய முன்னெடுப்பாகும். உலக வங்கி வெளியிட்டுள்ள 'தொழில் செய்தல்' பற்றிய 2017ஆம் ஆண்டின் அறிக்கையில் உலகின் 190 நாடுகளில் இந்தியா தற்போது 130வது இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. GSTயைப் புரிந்து கொள்ளுதல்:**

உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கு வரக்கூடிய பொருள்கள், சேவைகள் ஆகியவற்றிற்கு நுகர்வு நடைபெறும் ஒற்றை இடத்தை மட்டும் குறிவைத்து விதிக்கப்படும் வரி விதிப்புதான் ஜிஎஸ்டி. மத்திய மாநில அரசுகள் இதுவரை விதித்து வந்த பலதரப்பட்ட மறைமுக வரிகள் நீக்கப்பட்டு ஜிஎஸ்டி என்ற ஒரே வரி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசத்தை ஒற்றைச் சந்தையாக மாற்றமுடியும் (அட்டவணை 1). மற்ற ஆதாயங்களோடு சேர்த்து, எளிதாக தொழில் செய்வதை மேம்படுத்தக்கூடிய ஒன்றாக ஜிஎஸ்டி அமையும். வரி செலுத்துவதில் இணக்கம், வரியின் மீது வரி என்ற நிலை நீங்குவதால் வரிச்சுமைக்குறைப்பு, வரி நிர்வாகமேம்பாடு, விரிவாக்கம்செய்தல், செலவினங்களுக்கான வருவாயைப்பெருக்குதல் ஆகியவற்றிற்கும் ஜிஎஸ்டி வழிவகுக்கும். தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களுக்கு முன்பு செலுத்தப்பட்டு வந்த 25-28% வரையிலான வரியை ஜிஎஸ்டி இப்போது 18% ஆக குறைத்துள்ளது.

17விதமான மறைமுக வரிகளை ஜிஎஸ்டி நீக்குகிறது. 8 மத்திய வரிகளும், 9 மாநில வரிகளும் இதில் அடங்கும். மத்திய மாநில அரசுகளின் 23 வகை செஸ் வரிகளையும் இது நீக்குகிறது. பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரிகளை பொருத்தமான அளவில் மாற்றிஅமைத்திருக்கிறது. GSTயில் மத்திய GST, மாநில GST ஆகிய இரு வகைகள் உள்ளன. மத்திய, மாநில அரசுகள் ஏற்கனவே விதித்து வந்த பலவிதமான வரிகள் இதில் உள்ளடக்கப்பட்டுவிட்டன. முந்தைய வரி பரிபாலன முறையில் வரி மீது வரி விதிக்கப்பட்டு பெரும் பிரச்னையைத்தோற்றுவித்தது. இத்னால் உற்பத்திச் செலவு அதிகரித்தது. உதாரணமாக, ஒரு உற்பத்தியாளர் 100 ரூபாய் மதிப்புள்ள சட்டைக்கு 12 ரூபாய் சுங்கவரி செலுத்துவார். மாநில அரசு அடுத்தகட்டமாக இந்த 112 ரூபாய்க்கு 15% மதிப்புக்கூட்டு வரியை விதிக்கும். வரி மேல் வரி விதிக்கப்படுவதால் பொருளின் விலை அதிகரிக்கும்.

**அட்டவணை 1:**

| வரிசை எண் | மத்திய அரசு | மாநில அரசு |
|---|---|---|
| 1 | மத்திய கலால் வரி | மாநிலங்கள் விதிக்கும் மதிப்புக்கூட்டுவரி (VAT) |
| 2 | கலால் தீர்வைகள் (மருந்து போன்றவற்றிற்கு) | மத்திய விற்பனை வரி |
| 3 | கூடுதல் கலால் வரிகள் (தனிப்பட்ட முக்கியத்துவம் உடைய பொருள்கள்) | ஆடம்பர வரி |
| 4 | கூடுதல் கலால் வரிகள் (ஆடை, துணி வகைகள்) | அனைத்துவகை நுழைவு வரிகள். |
| 5 | கூடுதல் சுங்கவரிகள் (CVD) | பொழுதுபோக்கு, கேளிக்கை வரி (உள்ளாட்சி அமைப்புகள் விதிக்கும்போது தவிர) |
| 6 | சிறப்புக்கூடுதல் சுங்க வரிகள் (SAD) | விளம்பரங்களின் மீதான வரிகள் |
| 7 | சேவை வரி | கொள்முதல் வரி |
| 8 | மத்திய மிகைவரிகள், செஸ் வரிகள், இதுவரை சரக்கு மற்றும் சேவை வழங்கலுடன் தொடர்புடையவை | சூதாட்டம், குலுக்குச்சீட்டுகள், பணையம், பந்தய வரிகள் |
| 9 | | சரக்கு, சேவைஆகியவற்றுடன் தொடர்புடைய மாநில மிகை வரிகளும், செஸ் வரியும் |

மாநிலங்களின்எல்லைகளின் ஊடாக பொருள்களும், சேவைகளும் இசைவான வழியில் செல்ல அனுமதிப்பதற்காக மாநிலங்களுக்கு இடையேயான வரிவிதிப்பு போன்ற தடைகளை நீக்கிவிட்டு மத்திய அரசு ஒருங்கிணைந்த ஜிஎஸ்டியை விதிக்கிறது. இதனால் பலமுறை வரி செலுத்தவேண்டிய அவசியம் இருக்காது. மாநிலங்களின் எல்லைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் காத்துக்கிடக்க வேண்டியதில்லை. இதனால் பொருள்களை இடம் விட்டு இடம் கொண்டுசெல்லும் போது ஏற்படும் காலதாமதம் 60% அளவுக்குக் குறையும்.

ஜிஎஸ்டி நான்கு அடுக்கு வரிவிதிப்பாகும். 5, 12, 18, 28% வரிகள் விதிக்கப்படும். அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருள்களுக்கு குறைந்தபட்சவரியும், ஆடம்பரப்பொருள்களுக்கு அதிகபட்சவரியும் விதிக்கப்படும். அதோடு கூடுதல் செஸ்வரியும் இருக்கும். மறைமுக வரிவருவாயில் ஏதேனும் இழப்பு நேரிட்டால் அதை சரிசெய்துகொள்வதற்கு அதிகபட்ச வரியுடன் சேர்த்து விதிக்கப்படும் செஸ் வரி உதவும். நுகர்வோர் விலைக்குறியீட்டுப்பட்டியலில் இருக்கும் 30 முதல் 35% பொருள்கள் வரிவிலக்கு பெற்றவையாக இருக்கின்றன. இதனால் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயராமல் தடுக்கப்படும். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கும், சேவைகளுக்கும் ஜிஎஸ்டி வரிவிதிப்பு இருக்காது. மத்திய, மாநில அரசுகளின் வரி வசூல் மோசமான பாதிப்புக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ 60% பொருள்கள் 18 அல்லது 28% ஜிஎஸ்டி வரி விதிப்புக்கு உள்ளாகின்றன. 20% பொருள்கள் 28% வரிவிதிப்பைப்பெறும். ஆடம்பரப்பொருள்கள், வேண்டாத பொருள்கள், சாக்லெட், சூயிங்கம், ஷாம்பூ, வாசனைதிரவியங்கள், பெயின்ட் போன்றவை 28% வரிவிதிப்பில் அடங்கும். மின்சாரவரி, பத்திரப்பதிவுக்கட்டணம், சுங்கவரி, ஆல்கஹால், பெட்ரோலியப்பொருள்கள் மீதான மதிப்புக்கூட்டுவரி போன்றவை இப்போதைக்கு ஜிஎஸ்டி வரிவிதிப்புக்கு உட்படாதவை. வரிவிதிப்பற்ற பொருள்களின் வணிகம், மாநிலங்களுக்கிடையில் ரூ.20இலட்சத்திற்கும்குறைவாக உள்ள வணிகம் போன்றவற்றிற்கு ஜிஎஸ்டி வரிக்கணக்கு தாக்கல் செய்வதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஜிஎஸ்டி பெரும்பாலும் விலைவாசி ஏற்றத்தில் சொற்பமான தாக்கத்தையே ஏற்படுத்தும். (நீண்ட காலம் உழைக்கக்கூடிய நுகர்பொருள்கள், கட்டுமானப்பொருள்கள், அதிகமாக விற்பனையாகும் நுகர்பொருள்கள் போன்றவை) இத்தகைய பொருள்களுக்கு இதற்கு முன்பிருந்த வரி விகித அளவை ஒட்டியே ஜிஎஸ்டி வரியும் விதிக்கப்பட்டுள்ளது. அதிகம் விற்பனையாகும் நுகர்பொருள்களின் மீதான தாக்கம் அந்தந்த மாநிலங்கள் இதற்கு முன்பு அந்த்ப்பொருள்களுக்கு விதித்துவந்த மதிப்புக்கூடுவரியைப் பொறுத்து மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடும். ஒரு மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலத்திற்குச் செல்வதால் அதிக அளவில் வணிகவரி (CST) செலுத்திவந்த வணிகப்பொருள்கள் 2% அளவுக்கு ஆதாயத்தை அடையும். வாகனப்போக்குவரத்துத் துறையில் இதற்கு முன் செலுத்தப்பட்டுவந்த 50% வரியிலிருந்து 43% (28% ஜிஎஸ்டி + 15% செஸ்) ஆக தற்போது வரிக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் இத்துறையில் வரிசேமிப்பு அதிகமாக இருக்கும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, வாகனங்களும், அதிகம் விற்பனையாகும் நுகர்பொருள்களும் ஜிஎஸ்டிக்குப்பிறகு விலைகுறையும்.

## 3.எளிதாக வணிகம் செய்வதற்கு ஜிஎஸ்டியின் துணை:

மறைமுக வரி செலுத்துவதில் எந்தெந்த வகைகளில் இடையூறுகள் இருக்கின்றன இவை இந்தியாவில் தொழில் செய்வதற்கு எப்படி பாதகமாக இருக்கின்றன என்பது பற்றி இந்தியத்தொழில் கூட்டமைப்பு 2014ஆம் ஆண்டு ஒரு கணக்கெடுப்பு (CII – KPMG 2014) நடத்தியது. மதிப்புக்கூட்டுவரி, சுங்கவரி, கலால்வரி, சேவைவரி ஆகியவற்றை செலுத்துவதற்காகப் பதிவுசெய்யும் போதும், பொருள்போக்குவரத்திலும், வரிஅதிகாரிகளுடனும், வரி தாவாக்களைத் தீர்த்துக்கொள்வதிலும் வரி செலுத்தியதற்கான ஊக்கத்தொகையைப் பெறுவதிலும் மிகப்பெரிய பிரச்னைகளை கம்பெனிகள் சந்தித்து வருவதாக இதிலிருந்து தெரியவந்தது. முந்தைய வரிபரிபாலன முறையில் மாநிலங்கள் விதவிதமான வரி விகிதங்களை விதித்து வந்தன. வரி அதிகம் வசூலிக்கப்படும் மாநிலங்களில் இருந்து இன்னொரு மாநிலத்திற்குப் பொருள்களை அனுப்பும்போது இரு மாநிலங்களுக்கும் வரி செலுத்தவேண்டியிருந்தது. வரிகளில் சீர்மை இல்லாத நிலை குழப்பத்தையும்,



நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்திவந்தது. பொருள் உற்பத்தியின் பலநிலைகளிலும் செலுத்தப்பட்ட வரிகளை சமன் செய்யும் வழிமுறை முந்தைய வரிவிதிப்பில் இல்லை. இதனால் வரிக்கு மேல் வரி என்ற நிலை ஏற்பட்டு தொடர் விளைவுகள் ஏற்பட்டன.

ஜிஎஸ்டியைத் திறம்பட செயல்படுத்துவதால் இது போன்ற சிக்கல்களுக்குத் தீர்வுகிடைக்கும். வரி செலுத்துவது உறுதிப்படுத்தப்படுவதன் மூலமும், மாநிலங்களுக்கிடையே பொருள்கள் தடையின்றி செல்வதாலும், வரிச்சுமைகள் குறைவதாலும், கூடுதலாக செலுத்தப்பட்ட வரிப்பணம் உடனுக்குடன் திரும்பப் பெறப்படுவதாலும் இன்னும் பல சிக்கல்களுக்குத் தீர்வு உண்டாகும். இதன் விளைவாக, வரிசெலுத்துவதில் உலக அரங்கில் இந்தியாவின் தரவரிசை நிலை உயரும். உலகவங்கியின் 'தொழில் செய்தல்' அறிக்கையின்படி தற்போது வரி செலுத்துவதில் இந்தியா 190 நாடுகளில் 172வது இடத்தில் இருக்கிறது.

**எளிதாகத் தொழில் செய்வதில் ஏற்படக்கூடிய சில பெரிய ஆதாயங்கள்:**

முந்தைய வரி முறையில் பலவிதமான வரிகளுக்கு பலவிதமான கணக்குகளை அளிக்கவேண்டி இருந்தது. பல மட்டங்களிலும் பணிபுரியும் வரி அதிகாரிகளை எதிர்கொள்ள வேண்டிஇருந்தது. மறைமுக வரிகளைக் கணக்கிடுவதில் அதிகார மட்டத்தில் தாமதங்கள் ஏற்பட்டன. அனைத்துவகையான மறைமுக வரிகளையும் ஒன்றிணைத்து ஜிஎஸ்டி என்ற ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதால் இணக்கமான முறையில் வரிகள் செலுத்தப்படும். ஜிஎஸ்டிஎன் கட்டமைப்பு என்ற தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பைப் பயன்படுத்துவதால் மத்திய, மாநில அரசுகளுடன் நம்பகமான, விரைவான தகவல் பரிமாற்றம் சாத்தியப்படும். வரி செலுத்துபவர்கள் எந்தநேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் இணையத்தின் வழியாகப் பதிவு செய்துகொள்ளவும் கணக்கு சமர்ப்பிக்கவும், பணம் செலுத்தவும், மிகைப்பணத்தைத்திரும்பப்பெறவும் முடியும். வரி அதிகாரிகளை சந்திக்க வேண்டிய அவசியம் இருக்காது. இதனால் வரி செலுத்துவதில் இணக்கம் அதிகரித்து, வெளிப்படைத்தன்மையும், வேகமும் கூடும். காகிதம் இல்லாத மின்னணுப்பரிமாற்றம் உற்பத்தியையும் தொழில்களையும் முன்னெடுத்துச் செல்வதில் திறமையை அதிகரிக்கும்.



**மாநிலங்களுக்கிடையேயான பொருள் போக்குவரத்து:**

பொருள்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் முன்பு மட்டுமீறிய தாமதத்திற்கு உள்ளாகி வந்தன. மாநில எல்லைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் அவை காத்துக்கிடக்க நேரிட்டன. நுழைவுவரி, ஆக்ட்ராய் வரி உள்ளிட்ட அனைத்து வகையான மறைமுக வரிகளையும் உள்ளடக்கியதாக ஜிஎஸ்டி வரிவிதிப்பு இருப்பதால் இந்த நிலை ஒழியும். இதனால் பணவிரயமும், காலவிரயமும் தவிர்க்கப்படும். வணிகர்களுக்கும், நுகர்வோருக்கும் இதனால் ஆதாயம் கிட்டும். சுங்கச்சாவடிகள் ஒழிக்கப்படுவதால் சரக்கு வாகனப் போக்குவரத்து விரிவடையும்.

**அனைவருக்குமான ஒரே இடைமுகப்பு:**

வரிசெலுத்துவோர், வரித்துறையினர் ஆகியோருக்கு ஒரே இடைமுகப்பாக இருந்து GSTN கட்டமைப்பு பூசல்களைத் தீர்த்துவைக்கும். பொருள் வழங்குபவர், வாங்குபவர், வரி அதிகாரிகள் ஆகியோர் தேவைப்படும் தகவல்களை இந்த முகப்பின் வழியே பெறமுடியும். இதனால் விலைப்பட்டியலை ஒப்பிட்டுப்பார்த்து வரிக்கணக்கை அறியமுடியும். மூலப்பொருள்களுக்கு செலுத்தப்பட்ட வரியைக்கண கிட்டு கழித்துக்கொள்வதற்கு அனைத்து விலைப்பட்டியல்களும் தேவைப்படும். இதனால் விநியோகஸ்தர்கள், வரிக்கணக்குகளை சரியாக சமர்ப்பித்து சரியான நேரத்தில் வரி செலுத்துவதற்கு சில்லறை விற்பனையாளர்கள் அழுத்தம் தருவார்கள்.

**வரிச்சுமை குறைப்பு:**

முந்தைய விதிமுறைகளைப் போலன்றி, மூலப்பொருள்களுக்கும், உள்ளீட்டுப் பொருள்களுக்கும் முந்தைய நிலைகளில் விதிக்கப்பட்ட வரிகளை கணக்கிட்டு அதை ஜிஎஸ்டி சமன் செய்துதரும். இதனால் உற்பத்தியாளர்கள் உற்பத்திப்பொருள்களின் ஒட்டுமொத்த மதிப்பிற்கும் வரி செலுத்த வேண்டியதில்லை.

**பொதுச்சந்தை உருவாக்கம்:**

ஜிஎஸ்டி அமலாவதால் இந்தியா ஒரு மாபெரும் ஒற்றைச்சந்தையாக மாறும். இதனால், மூலப்பொருள்களை எங்கிருந்து வாங்குவது? எப்படி உற்பத்தி செய்வது? எங்கே கிடங்கு அமைப்பது? விற்பனை முனையத்தை எங்கே வைப்பது? ஆகியவை பற்றி அறிவுக்குப்பொருத்தமான முடிவுகளை உற்பத்தியாளர்கள் எடுக்கமுடியும். ஒரே இடத்தில் பதிவு செய்து கொள்ளலாம், ஒரே மாதிரி வழிமுறைளைப் பின்பற்றலாம் எனும் நிலை வரும் போது நாடு முழுவதும் வணிகம் மிக எளிதாகிவிடும்.

**ஏற்றுமதிப்போட்டியை அதிகரித்தல்:**

முந்தைய வரிவிதிப்பில் இரட்டை வரிவிதிப்பின் காரணமாக ஏற்றுமதியோடு ஒரு பகுதி வரியையும் சேர்த்து நாம் ஏற்றுமதி செய்துவந்தோம். இதனால் இந்தியா உலகச்சந்தையில் போட்டிபோட இயலாத நிலை ஏற்பட்டது. இத்தகைய நிலையை ஜிஎஸ்டி மாற்றியமைக்கும். ஏற்றுமதியை அது பெருக்கும். நியூசிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஏற்பட்டதைப்போலவே இங்கும் ஏற்றுமதி பெருகும். நியூசிலாந்தின் ஏற்றுமதி 1986இல் அந்த நாட்டில் ஜிஎஸ்டி அறிமுகம் செய்யப்பட்ட ஒரு ஆண்டிலேயே 22% அதிகரித்தது.

**வளங்களைப்பங்கிடுவதில் ஒரு சார்பு:**

வணிக நிறுவனங்கள் தங்களுக்கு எந்த மாநிலத்தில் குறைவான வரிவிதிப்பு உள்ளதோ, எந்தத் தொழில் பிரிவில் சாதகம் உள்ளதோ அங்கே அதிகமான வளங்களைக் கொண்டுசெல்லும்போக்கு இருக்கிறது. இதனால் வளங்களைப்பங்கிடுவதிலும், பொருள் வழங்குவதிலும் திரிபுகள் நேரிடுகின்றன. அந்த நிறுவனத்தின் ஒட்டுமொத்த போட்டித்தன்மையை அது பாதித்துவிடுகிறது. நாட்டில் எந்த இடத்தில் தொழில் செய்தாலும் ஒரேவிதமான வரிதான் என்ற நிலை ஏற்படும் போது நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொழிலும் வணிகமும் தழைக்க வழிபிறக்கும்.

**குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் எளிதாகத் தொழில் செய்யும் நிலை:**

முந்தைய வரி முறையில் ஆண்டுக்கு ரூ.5இலட்சம் வரவு செலவு செய்யும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் மதிப்புக்கூட்டுவரி செலுத்துவதற்குப் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்ற நிலை இருந்தது. பல மாநிலங்களில் தொழில் செய்யும்போது நிறுவனங்கள் பலவிதமான வரிகளை செலுத்தவேண்டி இருக்கும். ஒவ்வொரு மாநிலத்திலும்

விதிமுறைகளும், வழிமுறைகளும் வெகுவாக வேறுபட்டு இருந்தன. இதனால் MSMEகளுக்கு மிகப்பெரும் சுமை ஏற்பட்டது. வரி செலுத்துவதற்கு தொழில்முறை விற்பன்னர்களின் உதவியை நாட வேண்டி இருந்தது. ஜிஎஸ்டி ஒரே சீரான, விரைவான, வெளிப்படையான, இணைய வழி வரி நிர்வாகத்தை அனைத்து மாநிலங்களிலும் கொண்டுவருவதால் வரி செலுத்துவது சுலபமாவதுடன் பணமும் மிச்சமாகிறது. மூலப்பொருள்களுக்கு செலுத்தப்பட்ட வரி சமன் செய்யப்படும் நிலை இருப்பதால் MSMEக்கள் போட்டியிட்டு தொழில் செய்ய்யமுடிய்ம்.

**4.முன்னிருக்கும் வழி:**

தொழில் செய்வதை எளிதாக்குவதற்கும், உற்பத்தியாளர், நுகர்வோர் இருவருக்குமே வரிச்சுமையைக் குறைப்பதற்கும், அரசின் வரி வருவாயைப் பெருக்குவதற்கும் ஜிஎஸ்டி உறுதி அளித்திருக்கிறது. பொருளாதாரத்தின் முக்கியமான மூன்று பங்குதாரர்களான நுகர்வோர், உற்பத்தியாளர், அரசாங்கம் ஆகியவற்றை இந்த சீர்திருத்தம் தொட்டிருக்கிறது. கூட்டுறவுக்கூட்டாட்சி என்ற முன்னுதாரணமான மன நிலையின் அடிப்படையில் அனைத்து மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்களையும் ஜிஎஸ்டி உள்ளடக்கியுள்ளது. பிரதமர் நரேந்திர மோதி தலைமையில் செயல்படும் இந்திய அரசை ஜிஎஸ்டிக்காக நாம் பாராட்ட வேண்டும்.

ஜிஎஸ்டி அமலாக்கத்தால் எளிதாகத் தொழில் செய்வதற்கு சாதகமான தாக்கங்கள் உருவாகும் என்பதில் எந்த சந்தேகமும் இருக்கமுடியாது. வணிகங்களுக்கு கிடைக்கும் நேரடியான ஆதாயங்கள், வரி செலுத்துவதற்கு ஆகும் குறைவான செலவு, வரிச்சுமை, மாநிலங்களுக்கிடையே சுலபமான பொருள் போக்குவரத்து என இன்னும்பல ஆதாயங்கள் கிடைக்கும். இத்தகையதொரு விரிவான சீர்திருத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய பிறகு ஜிஎஸ்டியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவரை இருந்து வந்த பலவிதமான வரிகள், விதிவிலக்குகள் போன்றவற்றை நீக்கி ஒரு தேசம் ஒரே வரி என்பதைக் கொண்டுவந்துள்ளோம். இந்த எதிபார்ப்பை நிறைவேற்றும் விதமாக நம்முடைய முயற்சிகள் அமையவேண்டும்.தொழிற்சாலைகள், ஜிஎஸ்டியுடன் தொடர்புடையவர்கள் ஆகியோரின் கருத்துக்களை தொடர்ச்சியாகப் பெறுவதற்கு வழிவகை செய்திடவேண்டும். ஜிஎஸ்டியின் பயனை சிறப்பாக அனுபவிப்பதற்கு மாநில அரசுகளும், உள்ளாட்சி அமைப்புகளும் மறைமுக வரிகளைக் கூடுதலாக விதிக்காமல் இருக்கவேண்டும். ஜிஎஸ்டி வலைக்குள் வரக்கூடியதாக இன்னும் பல பொருள்களையும் சேவைகளையும் கொண்டு வருவதும், அமைப்புசாராத தொழில் பிரிவினரையும் இந்த மேடையில் சேருவதற்கு ஊக்குவிப்பதும் முக்கியமான மற்ற இலக்குகள் ஆகும்.

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஜிஎஸ்டி முறையே 7%, 6% என்ற ஒற்றை வரிவிகிதத்திலேயே இருக்கிறது. இப்படி ஒரு குறைவான ஒற்றை ஜிஎஸ்டி வரிவிதிப்பை நோக்கி இந்தியா விரைவாக நகரவேண்டும். இயன்றவரை மிகக் குறைவான விதிவிலக்குகள் மட்டுமே இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். வெவ்வேறு மாநிலங்களில் வணிகம் மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் பதிவு செய்துகொள்ள வேண்டியிருப்பதையும் ஒவ்வொரு மாநிலத்திலும் வரிக்கணக்கு சமர்ப்பிப்பதையும் தவிர்த்து முன் செல்ல வேண்டியது அவசியம். இந்தியாவில் தொழில் செய்வதை எளிதாக்கவும், உலக அரங்கில் இந்தியாவின் போட்டியிடும் திறமையை மேம்படுத்தவும், இந்தியாவில் உற்பத்தி என்பதை வெற்றிகரமானதாக ஆக்கிக்காட்டவும் இதுபோன்ற முன்முயற்சிகள் அவசியம். ஜிஎஸ்டியை அமலாக்கம் செய்வதற்கு நீண்ட பயணத்தை மேற்கொண்ட நாம் ஜிஎஸ்டியை உலகநாடுகளுக்கு நிகராக திறம்பட செயல்படுத்துவதற்கு விரைவான பயணத்தை இனி மேற்கொண்டாக வேண்டும்.

---

- **டானிஷ் ஏ.ஹாஷிம்**, இந்தியத் தொழில் கூட்டமைப்பின் எளிதாகத் தொழில் செய்தல், பொருளாதார விவகாரங்கள் பிரிவின் தலைவர்.

- **வர்ஷாகுமாரி**, இந்தியத் தொழில் கூட்டமைப்பின் எளிதாகத் தொழில் செய்தல், பொருளாதார விவகாரங்கள் பிரிவு ஆலோசகர்

●

# பொருள்கள் மற்றும் சேவைகள் வரி - பெரும் மாற்றமளிக்கக் கூடியது :

- எம். தேவராஜ் ரெட்டி,

ஜூலை 1, 2017இல் துவக்கப்பட்ட பொருள்கள் மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) ஒரு வரலாற்றுப் புகழ் மிக்க வரி சீர்திருத்தமாகும். அது, மத்திய மாநில அரசுகளின் மறைமுக வரிகளில் ஒரு முக்கியமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா சுதந்திரமடைந்ததற்கு பிறகு மேற்கொள்ளப்பட்டுள்ள மிகப்பெரிய வரிசார் சீர்திருத்தமான ஜிஎஸ்டி, ஒரு நாடு, ஒரே வரி, ஒரே சந்தை என்ற இலட்சியத்தை அடைய தொழில்துறை, அரசு மற்றும் நுகர்வோர் ஆகிய அனைவருக்கும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை குறைந்து, பொருளாதாரத்திற்கு ஊக்கமளிக்கப்பட்டு உலகளவில் இந்திய பொருள்கள் மற்றும் சேவைகளின் போட்டித்தன்மை மிகுந்து "இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம்" என்ற முயற்சிக்கு மிகுந்த வலிமை கிடைக்கும். ஜிஎஸ்டியின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு எவ்வித வரியும் இருக்காது. தற்போது மத்திய மற்றும் மாநில அரசுகள் விதிக்கும் வரிகள் சில திரும்பக் கிடைக்காமலேயே போகும் நிலை உள்ளது. ஜிஎஸ்டி முறையில் இந்தியா முழுவதும் ஒரே சந்தையாகக் கருதப்பட்டு, பொதுவான வரி விகிதங்களும், செயல்முறைகளும் மேற்கொள்ளப்பட்டு பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும். ஜிஎஸ்டி பெரும்பாலும் தொழில்நுட்பத்தால் உந்தப்பட்டு, அதிகாரிகளோடு சந்திப்பு குறைக்கப்பட்டு இந்தியாவில் வணிகம் செய்வது மேலும் எளிமையாக்கப்பட்டுள்ளது.

**உதாரணம் :**

ஒரு பொருளின் அடிப்படை விலை ரூ.100 என்று எடுத்துக்கொண்டால், அதற்கு முன்பு, 12 சதவிகித எக்சைஸ் வரி விதிக்கப்பட்ட நிலையில் அந்தப் பொருளின் விலை ரூ.112 ஆகிறது. அந்தப் பொருள் விற்கப்படும்போது, மதிப்பு கூட்டு வரியாக 12.5 சதவிகிதம் விதிக்கப்பட்டால் இறுதியில் நுகர்வோருக்கான விலை ரூ.126ஆக இருக்கும். தற்போது, அறிவிக்கப்பட்டுள்ள ஜிஎஸ்டி முறையில் அடிப்படை விலையான ரூ.100ன் மீது, மத்திய மற்றும் மாநில பொருள்கள் மற்றும் சேவை வரி ஒவ்வொன்றுக்கும் 9 சதவிகிதம் விதிக்கப்பட்டு இறுதியாக நுகர்வோரின் விலை ரூ.118ஆக இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் தொழில்துறை உலகளவில் நன்றாக போட்டியிட முடியும். ஆகவே, ஜிஎஸ்டி என்பது, நுகர்வோரின் பொருள்கள் மற்றும் சேவைகள்மீது விதிக்கப்படும் முழுமையான ஒரே ஒரு வரியாகும். ஜிஎஸ்டி வரி என்பது, ஒரு பொருள் உற்பத்தியாகும் ஒவ்வொரு கட்டத்திலும் விதிக்கப்பட்டு, ஏற்கனவே செலுத்தப்பட்ட ஜிஎஸ்டி கழிக்கப்பட்டு, இறுதியாக, பயன்படுத்தப்படும் போது விதிக்கப்படும் வரியாகும். ஆகவே, ஜிஎஸ்டி என்பது, ஒரு பொருள் பல கட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வெளி வந்தாலும் அவைகள் அனைத்தையும் உள்ளடக்கிய நுகர்வோர் சார்ந்த ஒரே வரியாகும்.

**ஜிஎஸ்டியின் முக்கிய அம்சங்களாவன :**

(a) ஜிஎஸ்டி என்பது மதிப்புக் கூட்டு வரி என்ற அடிப்படையில் விதிக்கப்படுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்படும் மதிப்புக்கூட்டுக்கு ஏற்ப விதிக்கப்படுகிறது. இதற்காக, பொருள் உற்பத்தி செய்பவர்கள் தாங்களே முன்வந்து அளிக்கும் விவரங்களின் அடிப்படையில் அமைகிறது.

(b) நாடெங்கிலும் ஒரே அளவில் பொருள்கள் மற்றும் சேவை மீது வரி விதிக்கப்பட்டு நுகர்வோருக்கு சென்றடையும் கடைசி நிகழ்வில் முன்பு செலுத்திய வரிகள் விலக்கு பெறும்.

(c) அடிப்படை வரி விகிதங்கள் பொதுவாக இரண்டுக்கும் மேற்படாமல் இருக்கும்.

(d) தீர்வை, மறு விற்பனை வரி, கூடுதல் வரி, சிறப்பு வரி, மொத்த வியாபார அளவு வரி ஆகியவை விதிக்கப்பட மாட்டாது.

(e) பொருள்கள் மற்றும் சேவைகள் மீது விற்பனை வரி, மாநிலத்திற்குள் நுழைவு வரி, ஆக்ட்ராய், கேளிக்கை வரி, மகிழ்வுப் பொருள்கள் வரி போன்ற பலவகையான வரிகள் இருக்காது.

(f) ஏற்றுமதிகள் மீதும், மாநிலங்களுக்கிடையே பரிமாற்றம் செய்யப்படும் பொருள்களுக்கும் சேவைகளுக்கும் தனி வரி கிடையாது.

(g) ஒரு பொருள் அல்லது சேவையின் அடிப்படை உற்பத்தி மீது, குறைந்த அளவே வரி விதிக்கப்படும். இதனால், உற்பத்தி விலையும், இருப்புக்கான மதிப்பும் குறைவாக இருக்கும்.

(h) நாடெங்கிலும் ஒரே நிர்வாகத்தின் கீழ் ஒரே வகையான சட்டமும் நடைமுறைகளும்.

(i) ஜிஎஸ்டி என்பது இறுதியில் நுகர்வோர் ஒரு பொருளையோ, சேவையோ வாங்கும் போதும், பெறும்போதும் செயல்படும் வரியாகும்.

**ஜிஎஸ்டியால் நன்மைகள்**

ஜிஎஸ்டியால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரே இந்தியச் சந்தை உருவாகி பொருளாதாரம் வலுப்பெறும். இறுதியில், அரசு மற்றும் நுகர்வோர் இருவருக்கும் பயனளிக்கும் வகையில் ஜிஎஸ்டி அமையும். ஜிஎஸ்டியால் ஏற்படும் சில நன்மைகள்:

**(a) பல கட்ட வரி விதிப்பு ஒழிப்பு**

மத்திய கலால் வரி, சேவை வரி, விற்பனை வரி, மதிப்புக்கூட்டு வரி ஆகியவை அனைத்தையும் உள்ளடக்கிய வரியே ஜிஎஸ்டியாகும். இதனால், ஒரு பொருள் அல்லது சேவை மீது விதிக்கப்படும் பல தரப்பட்ட வரிகள் விலக்கப்பட்டுள்ளன. உணவு விடுதி சேவைகளுக்கு தற்போது, சேவை வரியும், மதிப்புக்கூட்டு வரியும் விதிக்கப்படுகிறது.

**(b) படிப்படியான வரிகள் குறைப்பு**

ஜிஎஸ்டி விதிமுறைகளின்படி ஒரு பொருள் அல்லது சேவையின் மீது விதிக்கப்படும் வரி இறுதியாக நுகர்வோர் மீது விதிக்கப்படும் வரியாகும். அந்த கட்டத்திற்கு முன் நடைபெற்ற பல அடுக்கு உற்பத்தியின் போது செலுத்தப்பட்ட வரிகள், கடைசியாக வசூலிக்கப்படும் ஜிஎஸ்டியிலிருந்து கழிக்கப்படும். ஆகவே, ஜிஎஸ்டி என்பது ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்பு கூட்டப்பட்ட அளவின் மீது மட்டும் விதிக்கப்படும். தற்போது, சில சமயங்களில் கலால் வரி மீது விதிக்கப்படும் மதிப்புக்கூட்டு வரி போன்ற விதிப்புகள் இருக்காது.

**(c) பொதுவான தேசிய சந்தையை உருவாக்குதல்:**

ஜிஎஸ்டி முறையால் நாடெங்கிலும் எல்லாத் துறைகளிலும் மறைமுக வரிகளைப் பொறுத்தவரையில் ஒரு பொருளுக்கோ, சேவைக்கோ ஒரே மாதிரியான வரி இருப்பதால் அவைகளின் வியாபாரம் மேன்மையடையும். இதனால், பொருளாதாரத் தடைகள் நீங்கி, ஏற்றுமதிகள் ஊக்குவிக்கப்பட்டு பொதுவான தேசியச் சந்தை உருவாகும். இதனால், உள்நாட்டு மொத்த உற்பத்திக்கு எதிரான வரி விகிதம் மேன்மைப்பட்டு, பொருளாதாரத் திறன் உயர்ந்து நீண்டகால பொருளாதார வளர்ச்சி மேம்படும்.

**(d) மக்களே முன்வந்து விதிகளை ஏற்பது அதிகமாகும்**

ஜிஎஸ்டி முறையில் பரிவர்த்தனை எளிதாக்கப்பட்டுள்ளதால் தவறுகள் ஏற்படுவது குறைவாக இருக்கும். ஜிஎஸ்டி சம்மந்தப்பட்ட எல்லா தகவல்களும் பொதுவான ஒரே அமைப்பின் கீழ் இயங்குவதால் அதனைப் பின்பற்றுவது எளிதாகவும், தவறு இல்லாமலும் இருக்கும். நுகர்வோர் ஒருவர் தான் வாங்கிய பொருளுக்கு ஜிஎஸ்டி செலுத்திய பின்பே அந்தப் பொருள் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்கு கிடைக்கும். இதனால், ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்பு கூட்டப்பட்ட நிலையில் ஏற்பட்டுள்ள நிகழ்வுகள் முறையாக பதிவு செய்யப்பட்டு வரி வசூலிக்கப்படும். தற்போது மறைமுக வரிகளில் உள்ள பலதரப்பட்ட நடைமுறைகள் தவிர்க்கப்படும்.

**(e) சட்டச் சிக்கல்கள் குறைவு**

கணினி மென்பொருள், பொருள்களின் உபயோகம் பற்றிய உரிமை உள்ளிட்ட சில துறைகளில் வரி விதிப்பதில் மத்திய, மாநில அரசுகளிடையே தற்போதுள்ள நிச்சயமற்ற தன்மை போன்று அல்லாமல் ஜிஎஸ்டியின் கீழ் எந்த அரசு எப்படி வரி விதிக்கமுடியும் என்பது மிகவும் தெளிவாக உள்ளதால், வரி சார்ந்த வழக்குகள் குறைவதற்கு

வாய்ப்புண்டு. தற்போதுள்ள சட்டங்களின் கீழ் பல மாநிலங்களில் பொருள்கள் உற்பத்தி, விற்பனை சார்ந்த மதிப்பீடுகள் ஆகியவை பல முனையில் இருப்பதைப் போல் அல்லாமல் ஜிஎஸ்டி முறையில் ஒரே வரிசார் சட்டம் நாடெங்கிலும் செயல்படுகிறது.

### (f) திறமையான அரசு நிர்வாகம்

தற்போதுள்ள பலவகையான வரிகளாலும் அவைகள் ஒரு பொருளின் உற்பத்தியை பல கட்டத்தில் செய்து விற்பனை செய்யப்படும்போது படிப்படியாக விதிக்கப்படும் வரிகளாலும், ஒருங்கிணைந்த செயலமைப்பு இல்லாத நிலையிலும் மறைமுக வரிகளின் நிர்வாகம் அரசுக்கு மிகவும் சவாலாக உள்ளது. இதனால் வரி செலுத்தும் முறைகளும், வரிகளை வசூலிப்பதற்குமான செலவுகளும் மிகுந்துள்ளன. ஜிஎஸ்டி முறையில் ஒருங்கிணைந்த வரி இருப்பதாலும் ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களை வாங்கும் போது செலுத்தும் வரிகள் பிறகு அந்தப் பொருள் இறுதியாக விற்கப்படும்போது கழிக்கப்படுவதாலும் ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி நடைமுறை இருப்பதாலும், இது சார்ந்த தகவல்கள் மிக எளிமையாக எல்லோருக்கும் கிடைப்பதாலும், இதை நிர்வகிப்பது அரசுக்கு எளிதாகவும், திறமையாகவும் இருக்கும். ஒரே ஒரு வரி அமைப்பு இருப்பதால், தவறுகள் குறைந்து, வழக்குகள் குறைந்து, நிர்வாகச் செலவும் குறையும்.

### ஜிஎஸ்டி செயல்முறையில் உள்ள சவால்கள்

வியாபாரிகள், உற்பத்தியாளர்கள், வணிகர்கள் மற்றும் சேவைகளை வழங்குவோர் மீது மிகப்பெரிய அளவிலான நல்ல விளைவுகளை ஏற்படுத்த கூடுமாதலால், பொருள்கள் மற்றும் சேவைகள் வரி "பெருமாற்றம் ஏற்படுத்தக்கூடிய" ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த அமைப்பில், ஒரே ஒரு ஒருங்கிணைந்த வரியின் கீழ் நாடெங்கிலும் செயல்படும் முறை உள்ளது. முன்பிருந்தது போல, பலவகையான வரிகள் சார்ந்த நடைமுறை இல்லை. நாடு சுதந்திரம் பெற்ற 70 ஆண்டுகளில், தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் "ஒரு நாடு, ஒரே சந்தை, ஒரே வரி" என்ற கருத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி ஒரு மிகப்பெரிய வரிசார் சீர்திருத்தமாகும். ஆனாலும் கூட ஒவ்வொரு புதிய சட்டத்திலும் சில பிரச்சினைகள் தோன்ற வாய்ப்புள்ளன.

### ஜிஎஸ்டி அமைப்பிலுள்ள சில சவால்கள்:

- தகவல் தொழில்நுட்பத் தயார் நிலை மற்றும் உள் கட்டமைப்பு வசதிகள். ஜிஎஸ்டி என்பது, தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் செயல்படும் சட்டமாகும். ஆகவே, எல்லா மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் இதற்குத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகளும் போதிய மனித வளமும் இருக்கும் என்று எடுத்துக்கொள்ள முடியாது. கர்நாடகம், மகாராஷ்டிரம் மற்றும் குஜராத் மாநிலங்கள் கணினிசார் நிர்வாகத்தை திறம்பட செயல்படுத்தியிருப்பதைப் போல மற்ற மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் செயல்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பல மாநிலங்களில் இன்றும் மதிப்புக் கூட்டு வரி கையாலேயே தயாரிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட மாநிலங்களையும் நாம் கைகோர்த்து அழைத்துச் செல்ல வேண்டும்.




- **அலுவலர்களுக்கான பயிற்சி** : எந்தவொரு புதிய சட்டத்தை செயல்படுத்தும் போதும் பழைய சட்டம் பற்றியும், புதிய நடைமுறை பற்றியும் மக்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். பழைய சட்டத்தை மறந்து புதிய சட்டத்தின் ஷரத்துக்களைப் புரிந்து கொள்ள வேண்டும். மதிப்புக்கூட்டு வரி, சேவைகள் வரி, கலால் அல்லது சுங்க வரி இவைகளை செயல்படுத்தி வந்த அனைத்து மத்திய, மாநில அரசு அதிகாரிகளும் ஜிஎஸ்டி ஷரத்துக்களையும் தற்போதுள்ள வரி நிலைமையில் அவைகளின் தாக்கத்தையும் புரிந்து கொள்ளவேண்டும்.

மேலும் ஜிஎஸ்டி சட்டம் தகவல் தொழில்நுட்பத்தைப் பெரிதும் சார்ந்துள்ளது. ஆகவே, அவற்றைத் திறமையாகப் பயன்படுத்தி செயல்படுத்த சம்மந்தப்பட்ட எல்லா அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கவேண்டும்.

➢ **புதிதாகப் பதிபவர்கள் :**

ஜிஎஸ்டி ஷரத்துக்கள் விரிவான செயல்பாடு உடையதாலும், விலக்குகள் காரணமாக முன்பு வரி விதிப்பின் கீழ் வராத பலர் புதிதாக பதிவு செய்வார்கள். ஆகவே, தற்போது வரி விதிப்பில் உள்ளவர்கள் புதிய ஜிஎஸ்டி முறைக்கு மாறுவதும் புதிதாக வரி செலுத்துவோர் சார்ந்த சவால்களும் மிகப்பெரியதாகும்.

➢ **மாற்றம் சார்ந்த பிரச்னைகள் :**

ஜிஎஸ்டிக்கு மாறும் நிலையில் உள்ள பல பிரச்னைகளை எதிர் நோக்கவேண்டியுள்ளது. பிரச்னைகளில் சில - பதிவு செய்தல், வரி செலுத்துவோரின் பழைய வரவுகள் மற்றும் புதிய வரவுகள். திரும்பப் பெற வேண்டிய நிலுவையில் உள்ள வரிகள், மானியங்கள் சார்ந்த கோரிக்கைகள், ஒப்பந்தங்களை மறு பரிசீலனை செய்வது, முடிவு பெறாத வணிகச் செயல்களின் வரி, படிவங்களை சமர்ப்பித்தல் ஆகியனவாகும். ஜிஎஸ்டி வெற்றிகரமாக செயல்பட இந்த மாற்றங்கள் எளிதாக நடைபெற வேண்டும். மாற்றம் சார்ந்த செயல்முறைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் சில சிக்கல்கள் ஏற்படலாம். இதனால், ஏற்படும் பலவகையான பிரச்சினைகளை சமாளிக்க ஜிஎஸ்டிசார் செயலர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும்.

➢ **நிலுவையில் உள்ள / பழைய வழக்குகள் :**

தற்போதுள்ள மறைமுக வரிகள் சட்டங்கள் சார்ந்த பல வழக்குகள் தீர்வு அல்லது மேல்முறையீடு நிலையில் மத்திய மாநில அரசுகளின் கீழ் பல நிலுவையில் உள்ளன. ஏற்கனவே நிலுவையில் உள்ள வழக்குகளால் இந்த தீர்வு / மேல்முறையீடு ஆணையங்கள் மற்றும் நீதி மன்றங்கள் பெரும் சுமையைத் தாங்கியுள்ளன. ஆகவே, புதிதாக ஜிஎஸ்டி செயல்படுத்தப்படும் இந்தத் தருணத்தில் அரசு இதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏற்கனவே இருந்த சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகளை முடிவுக்கு கொண்டுவர வரிகள் தீர்வு ஆணையம் அமைக்கப்பட்டது போல், ஜிஎஸ்டி வழக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும். பழைய வழக்குகள், நிலுவையில் இருந்தால் தீர்வு / மேல் முறையீடு ஆணையங்கள் மற்றும் நீதிமன்றங்கள் அவைகளை விசாரிப்பதிலேயே நேரத்தை செலவிடும்போது புதிய ஜிஎஸ்டி சட்டம் சார்ந்த பிரச்னைகளையும், வழக்குகளையும் களைய நேரம் இருக்காது.

➢ **வரி நிர்வாகம் (மாற்றியமைத்தல் / குறைத்தல்)**

பழைய வரி அமைப்பில் இருந்தது போல் அல்லாமல் ஜிஎஸ்டி அமைப்பில் மத்திய மாநில அலுவலகங்கள் ஒரு அமைப்பின் கீழ் இணைந்து செயல்பட்டு, வேற்றுமைகளையும், ஒருங்கிணைந்த செயல்பாடின்மையையும் விட்டுவிட வேண்டும். மேலும், ஜிஎஸ்டி முறையை செயல்படுத்துவதில் பணித்துறைகளுக்கிடையேயான முறைகளும் உருவாகும். மத்திய கலால் மற்றும் சேவை வரிகளைச் செயல்படுத்தும் துறைகள், இந்திய வருவாய் பணி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில வணிகத்துறைகள், இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் தலைமையில் மாநில ஆட்சிப்பணி அலுவல்கள் மூலம் செயல்படுகிறது. மத்திய கலால் மற்றும் சேவைவரித்துறையில், முதன்மை தலைமை கமிஷனர், கமிஷனர் மற்றும் தலைமை கமிஷனர் போன்ற பதவிகள் உள்ளன. ஜிஎஸ்டி அமைப்பில் இந்த வித்தியாசங்கள் எப்படி களையப்பட உள்ளன என்பதை பார்க்க வேண்டும்.

➢ **சிறு தொழில்கள் மீதான தாக்கம்:**

ஜிஎஸ்டியால் சிறு தொழில்கள் மீதான தாக்கம் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. ஜிஎஸ்டி அமைப்பில் மூன்று விதமான சிறு தொழில்கள் / வணிக நிறுவனங்கள் இருக்கலாம்.

- ➢ ரூபாய் 20இலட்சத்திற்கும் குறைவான மொத்த வியாபாரம் உள்ளவர்கள் (சில குறிப்பிட்ட துறைகளில் ரூ.10இலட்சத்திற்கு கீழ்) ஜிஎஸ்டி முறையில் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. நுகர்வோர் பொருள்கள்சார்

உற்பத்தி / வணிகம் மற்றும் உணவு வழங்கு துறைகளில் உள்ளவர்களுக்கு இது பொருந்தும்.

- இந்த அளவுக்கு மேலும் ரூ.75இலட்சத்திற்கும் குறைவான உற்பத்தி உள்ளவர்கள் 2.5 சதவிகிதமும் வியாபாரிகள் 1 சதவிகித ஜிஎஸ்டி வரி செயல்படுத்த விருப்பம் தெரிவிக்கலாம். இடுபொருள்களுக்கான வரி விலக்கு பெறும் வாய்ப்பு உள்ளதால் மற்ற உற்பத்தித் துறைகளோடு வணிகம் செய்பவர்கள் இந்த மொத்த விற்பனை சார்ந்த வரி வாய்ப்பைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்கள், நுகர்வோர் பொருள்களை விற்பனை செய்பவர்கள், பிற உற்பத்தியாளர்கள் மற்றும் உணவு வழங்கு சேவை செய்பவர்களோடு வணிகம் செய்பவர்களாக இருப்பர்.
- மூன்றாவது ரக சிறு தொழில்கள் வரி மொத்த விற்பனை வரம்புக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள்.

**பிற பிரச்சினைகள் :**

- வணிகம் செய்வோர் தங்களுக்கு ஏற்படும் தாக்கத்தை அறிந்து கொள்ள ஜிஎஸ்டி சட்டத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- ஜிஎஸ்டி முறையின் கீழ், இடு பொருட்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளின் அளவு மற்றும் விலக்குகள்.
- புதிய ஜிஎஸ்டி அமைப்பின்கீழ் பொருட்கள் கூடுதல் விலையில்லாமலும் விலை குறைவு இல்லாமலும் இருக்கும் நிலையை உறுதிபடுத்திக்கொண்டு தங்களுடைய துறையிலுள்ள போட்டித் தன்மையையும், மக்கள் எந்த பொருட்கள் விரும்புகிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.
- நிறுவனங்களில் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகள் மற்றும் படிப்படியான செயல் திட்டங்கள்.
- புதிய ஜிஎஸ்டி சட்டத்திற்கு உகந்த வகையில் குறிப்பிட்ட தேதிக்குள் தேவையான மாற்றங்கள், சேர்ப்புகள், விலக்குகள் ஆகியவற்றை செய்ய வேண்டும்.
- மாற்றத்திற்கான தேவைகள்.
- குறிப்பிட்ட தேதிக்குள் சமர்ப்பிக்கப்படும் படிவங்களின் அடிப்படையில் 30 ஜூன் 2017வரையிலான மத்திய மதிப்புக்கூட்டு வரிகளுக்கு மட்டும் கழிவு கொடுக்கப்படும்.
- இருப்பிலுள்ள பொருள்களை சரியாக மதிப்பிட்டுப் பதிவு செய்ய வேண்டும்.
- ஜிஎஸ்டி செயல்முறைக்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப உள் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.
- ஜிஎஸ்டி செயல்முறைக்கு ஏற்ப MIS அறிக்கைகளை ஆய்வு செய்ய வேண்டும்.
- மற்ற சட்டங்கள் மற்றும் செயல்முறைகளோடு இணைக்கப்படுபவைகளை ஆராய வேண்டும்.

மேற்கூறப்பட்ட அனைத்து சவால்களும், பிரச்னைகளும் உள்ள நிலையில் ஜிஎஸ்டி செயல்முறையால் முன்பு பல வரிகள் சார்ந்த பிரச்னைகள் களையப்பட்டு ஒரு பொருள் மீது விதிக்கப்படும் வரிகள்சார் வெளிப்படைத்தன்மை நிலவும். ஜிஎஸ்டி முறையால், பொருள்களும் சேவைகளும் நாடெங்கிலும் தங்கு தடையின்றி செல்லக்கூடிய நிலையில் இந்தியாவின் உள் நாட்டு மொத்த உற்பத்தியின் அளவு 1 முதல் 1.8 சதவிகிதம் வரை உயரக்கூடும். மேலும், பலதரப்பட்ட வரிகள் இருந்த நிலை மாறுவதால், அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கை ஏற்பட்டு, அதனால், அந்நிய நேரடி முதலீடு அதிகரிக்கும்.

நல்ல துவக்கமாக, பொருட்கள் மற்றும் சேவைகள் வரியை அறிமுகப்படுத்திய பிரதமர் நரேந்தி மோதியை நாம் பாராட்ட வேண்டும். செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் முடிவடைந்துவிடவில்லை, ஆனால், வெற்றிகரமாக முதல் அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படும்போது, இந்தியப் பொருளாதாரம் மிக உயர்ந்த நிலைக்கு வரும்.

- **எம். தேவராஜ் ரெட்டி**, இந்திய பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர்.

●

# ஜி.எஸ்.டி-யும் நுகர்வோர்கள் அதைப் புரிந்து கொள்ளுதலும்

- சூரஜ் ஜெய்ஸ்வால்

**• ஜி.எஸ்.டி என்றால் என்ன?**

வரி யார் கட்டுகிறார்கள், வரி எப்படி வசூலிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து வரிகள் நேரடி வரி, மறைமுக வரி என இரண்டு பிரிவாக வகைப்படுத்தப்பட்டு உள்ளன. பொதுவாக வருமானம், இலாபம் அல்லது சொத்துகளின் மீது வரிகள் விதிக்கப்படுகிறது. நேரடி வரிகளுக்கு உதாரணங்களாக வருமான வரி, நகராட்சி வரி, சொத்து வரி மற்றும் செல்வவரி போன்றவற்றைக் கூறலாம். இதற்கு மாறாக சரக்குகள் அல்லது சேவைகள் மீது விதிக்கப்படும் வரிகள் மறைமுக வரிகள் ஆகும். இவை விற்பனையாளரால் அல்லது வாங்குபவரால் செலுத்தப்படுகின்றன. ஆனால், பெரும்பாலும் இந்த வரியை பொருட்களை விற்கும் விற்பனையாளர்கள் பொருளை வாங்குபவர்கள் மீதே சுமத்திவிடுகின்றனர். மறைமுக வரிகளுக்கு உதாரணங்களாக பொருள்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் போது விதிக்கப்படும் சுங்கவரி, வர்த்தக நிறுவனம் வழங்கும் சேவை மீது விதிக்கப்படும் சேவை வரி, உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மீது விதிக்கப்படும் கலால் வரி, விற்பனை செய்யப்படும் பொருள் மீதான விற்பனை வரி போன்றவற்றைக் கூறலாம். சரக்குகள் மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) என்பது ஒரு மறைமுக வரியாகும். மத்திய, மாநில அரசுகள் விதிக்கும் பெரும்பான்மையான மறைமுக வரிகளுக்கு மாற்றீடாக இந்த ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்தியாவில் இந்த ஜி.எஸ்.டி வரியானது ஜுலை 1, 2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. ஜி.எஸ்.டியின் முக்கிய இரண்டு அம்சங்கள் என்னவென்றால்,

1. ஒவ்வொரு உற்பத்திப்பொருளுக்கும், சேவைக்கும் ஒரே வரிதான் விதிக்கப்படும்.
2. இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் இந்த வரியானது மாறாமல் ஒன்று போலவே இருக்கும்.

அதே சமயம் தற்காலிகமாக பெட்ரோலியம், மது மற்றும் ரியல் எஸ்டேட் ஆகியன ஜி.எஸ்.டி வரி விதிப்புக்கு கீழ் வராது எனச் சொல்லப்படுகிறது. இவை முந்தைய வரி விதிப்பு முறைக்குக் கீழேயே தொடர்ந்து இருக்கும். சுங்க வரிகள் தொடரும். ஆனால் அவை ஜி.எஸ்.டியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கும். அதே போன்று நகராட்சி, கிராமப்பஞ்சாயத்து போன்ற உள்ளாட்சி அமைப்புகள் விதிக்கும் வரிகளுக்கும் ஜி.எஸ்.டியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சில விலக்குகள் தவிர, இதற்கு முன்பு நடைமுறையில் இருந்து வரும் மறைமுகவரிகள் அனைத்தும் ஜி.எஸ்.டியால் பதிலீடு செய்யப்பட உள்ளன. ஜி.எஸ்.டியின் கீழ் உள்ளடக்கப்படக்கூடிய முக்கியமான மறைமுக வரிகளாவன: கலால் வரி, சேவை வரி, சிறப்புக் கூடுதல் சுங்கவரி, மாநில வாட் வரி, மாநில விற்பனை வரி, கேளிக்கை வரி, நுழைவு வரி மற்றும் சொகுசு வரி போன்றவை ஆகும்.

**ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்தப்படுவதால் பாதிப்பு அடையக் கூடிய மூன்று முக்கிய பங்குதாரர்கள் யார் யார் என்றால்;**

1. நுகர்வோர்
2. அரசாங்கங்கள்
3. வர்த்தகர்கள்

இந்தக் கட்டுரை முந்தைய வரி அமைப்பில் இருந்து ஜி.எஸ்.டி எவ்வாறு வித்தியாசப்படுகின்றது என ஒப்பிட்டுக் காட்டுவதுடன் நுகர்வோர் மீது ஜி.எஸ்.டி ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்தும் பேசுகின்றது.

**• முந்தைய வரி அமைப்பில் இருந்து ஜி.எஸ்.டி எவ்வாறு வித்தியாசப்படுகின்றது?**

ஒரு நுகர்வோர் தனது சொந்தப் பயன்பாட்டுக்காக ஒரு குறிப்பிட்ட சரக்கு/சேவையை

வாங்குவதற்கு முன்பு, அந்தச் சரக்கானது உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பல படிநிலைகளைக் கடந்து வருகின்றது. அந்தப் பயணத்தில் அந்தச் சரக்கு மீது பல படிநிலைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மறைமுக வரிகள் விதிக்கப்படுகின்றன. இதில் சில வரிகளை மத்திய அரசானது விதிக்கின்றது. சில வரிகளை சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் வசூலிக்கின்றன. உதாரணமாக, இந்தியாவில் தயாரிக்கப்படும் ஒரு டி.வி. பெட்டிக்கு அது தொழிற்சாலையை விட்டு வெளியில் போகும் போது கலால் வரி விதிக்கப்படுகிறது. இந்த டி.வி.யைத் தயாரிப்பதில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உபரி பாகங்கள் பயன்படுத்தப்பட்டு இருந்தால் அந்தப் பாகங்கள் மீது சுங்க வரி செலுத்தப்பட்டு இருக்க வேண்டும். உற்பத்தியாளரிடம் இருந்து மொத்த விற்பனையாளருக்கு டி.வி பெட்டி செல்லும் அடுத்தகட்டப் பயணத்தில் விற்பனை வரியானது வருகின்றது. பிறகு கடைசியாக மொத்த விற்பனையாளரிடம் இருந்து சில்லறை விற்பனையாளருக்கு டி.வி பெட்டி போகும் போது வாட் வரியானது வசூலிக்கப்படுகிறது. இந்த வரி விதிப்பு நிலைமை சரக்குகள் மாநிலம் விட்டு மாநிலம் போகும் போது மேலும் சிக்கலாகின்றது. இவ்வாறு வேறு மாநிலத்துக்குச் செல்லும் போது மத்திய விற்பனை வரி வசூலிக்கப்படுகின்றது. அதே சமயம் மாநிலத்துக்கு மாநிலம் வரி விகிதமும் வேறுபடுகின்றது. உதாரணமாக ஜி.எஸ்.டிக்கு முன்பு மஹாராஷ்டிராவில் மதிப்பு கூட்டப்பட்ட வரி (வாட் வரி) 12.5% என இருந்தது. இதே வரி குஜராத்தில் 15% என இருந்தது. பல தருணங்களில், குறிப்பிட்ட சில பொருட்கள்/சேவைகளை மேம்படுத்த அல்லது ஊக்கத்தொகையைக் குறைக்க சில வரிகள் விதிக்கப்படுகின்றன. சொகுசு வரி அல்லது போதை தரும் பொருள்கள் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இவ்வாறு பல படிநிலைகளில் விதிக்கப்படும் வரிகள் மற்றும் வரி விதிக்கப்படும் பல படிநிலைகள் இரண்டும் சேர்ந்து இரு பிரச்சனைகளை உருவாக்குகின்றன - முதலாவது, வரி செலுத்துபவர்கள் வரி விதிப்புக்கு ஏற்ப இசைந்து நடப்பதை சிரமத்துக்கு உள்ளாக்குவதோடு, வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.



இரண்டாவது, முந்தைய படிநிலைகளில் செலுத்தப்பட்ட வரியையும் உள்ளடக்கி உள்ள விற்பனை விலை மீதுதான் எந்தவொரு புதிய வரியும் விதிக்கப்படும் என்பதால், அடிப்படையில் இது ஏற்கனவே முந்தைய படிநிலைகளில் செலுத்தப்பட்ட வரி மீதான வரியாக அமைகின்றது. வரிகளின் பலபடித்தான வரியாக இது அமைகிறது. இந்த வரிமுறையை கீழ்வரும் படம் எளிதாக விளக்குகிறது-




மேலே உள்ள படத்தில் “அ’’ என்பவர் மொத்த விற்பனையாளர், “ஆ’’ என்பவர் சில்லறை விற்பனையாளர், “இ’’ என்பவர் நுகர்வோர் ஆவர். ‘‘இ’’ என்ற நுகர்வோர் ரூ.130 என்ற விலை உள்ள ஒரு பொருளை வாங்குவதற்கு 20% வரி செலுத்தும் போது அவர் ஏற்கனவே “ஆ’’ என்ற சில்லறை விற்பனையாளர் செலுத்திய வரிக்கும் சேர்த்தே வரியைக் கட்டுகிறார். அதாவது “அ’’ என்ற மொத்த விற்பனையாளரிடம் வரி செலுத்தி “ஆ’’ என்கின்ற சில்லறை விற்பனையாளர் வாங்கிய பொருளுக்கும் சேர்த்தே “இ’’ என்ற நுகர்வோர் வரி செலுத்தி பொருளை வாங்குகிறார். அதாவது “இ’’ என்ற நுகர்வோர் சரக்கின் உண்மையான விலைக்கு வரி செலுத்துவதோடு (ரூ.100 + ரூ.20), “ஆ’’ என்ற சில்லறை விற்பனையாளர் செலுத்திய வரிக்கும் (ரூ.10 மற்றும் ரூ.10ல் 20%) சேர்த்தே வரி செலுத்துகிறார். இத்தகைய வரி மீதான வரி விதிப்புகள் நுகர்வோர் செலுத்தும் இறுதி விலையை அதிகமாக்கிவிடுகின்றன.

ஆனால் புதிய ஜி.எஸ்.டி வரி விதிப்பு முறையின்படி, ஒரு குறிப்பிட்ட சரக்கு/சேவை என்பது ஒரே ஒரு வரி விதிப்பு விகிதத்தை மட்டுமே பெற்றிருக்கும். அதுவும் இந்த வரி விகிதம் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே விதமாகவே இருக்கும். மேலும் ஒவ்வொரு உற்பத்தியாளர் / விற்பனையாளர் / வர்த்தக நிறுவனமும் உள்ளீட்டு வரி கிரெடிட் (ஐ.டிசி.) என்றழைக்கப்படும் திட்டத்தின் பலன்களைப் பெற முடியும். முந்தைய படத்தின் அடிப்படையில் இதனை விவரித்துக் கூறுவதென்றால், “ஆ’’ என்பவர் ரூ.110 மதிப்புள்ள உள்ளீட்டுப் பொருளை வாங்குவதாகக் கொண்டால், இதில் ரூ.10 என்ற வரியும் உள்ளடங்கும். “அ’’ என்பவர் வாங்கும் நபரின் விவரங்களை (இந்த இடத்தில் “ஆ’’ என்பவர்) அரசாங்கத்துக்கு தெரிவித்து இருந்தால் ‘‘ஆ’’ நபர் ரூ.10 என்ற ‘‘வரி உள்ளீட்டு கிரெடிட்டை’’ப் பெறத் தகுதி வாய்ந்தவராக மாறுகிறார். அந்தச் சரக்கை ஆ என்பவர் இறுதியாக ‘‘இ’’ என்பவருக்கு விற்றால், அதிலும் ரூ.130 என்ற விலையில் விற்றால், ‘‘ஆ’’ என்பவர் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.13 ஆகும் (தற்போது ஒரே சீரான 10% ஜி.எஸ்.டி). அதே சமயம் ‘‘ஆ’’ என்பவர் முன்பே ரூ.10க்கான வரி கிரெடிட் வைத்திருப்பதால், அவர் ரூ.3 மட்டும் கூடுதலாகச் செலுத்தினால் போதுமானது ஆகும். இவ்வாறுதான் மறைமுக வரியை ஜி.எஸ்.டி எளிமையானதாக மாற்றுகிறது. அதே போன்று வரி விகிதமானது அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கச் செய்கின்றது. ஐ.டி.சி வழிமுறை மொத்த வரி விதிப்பைக் குறைக்கச் செய்கிறது. இதனால் ஒட்டுமொத்த வர்த்தகச் செலவும் சிக்கனமானதாக மாறுகிறது.

- **ஜி.எஸ்.டி-யால் ஒரு நுகர்வோருக்கு ஏற்படக்கூடிய பலன்கள் / பாதிப்புகள் யாவை?**

நுகர்வோர் மீது ஜி.எஸ்.டி இரண்டு வெவ்வேறு விதமான வழிமுறைகளில் தாக்கங்களை ஏற்படுத்த முடியும். முதலாவது வழிமுறை என்பது ஜி.எஸ்.டியால் ஏற்படும் நேரடி மற்றும் உடனடி தாக்கமாகும். ஒவ்வொரு சரக்கு மற்றும் சேவைகள் மீதான புதிய ‘‘தாக்கம் ஏற்படுத்தும்’’ வரி விகிதமாக இது இருக்கிறது. ஜி.எஸ்.டி காலகட்டத்துக்கு முன்பான வரி விகிதத்தோடு ஒப்பிடும் போது புதிய ‘‘தாக்கம் ஏற்படுத்தும்’’ வரி விகிதங்கள் எந்த வழிமுறைகளில் வேறுபட்டுள்ளன என்பதைப் பொறுத்து விலைகள் அதிகமாகும் அல்லது குறையும். இரண்டாவதாக ஜி.எஸ்.டி-யின் மறைமுக

தாக்கம் எதுவெனில், உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலித் தொடரில் ஏற்படும் மாற்றங்கள் ஆகும். இது நடுத்தர மற்றும் நீண்டகாலப் பயன்பாட்டில்தான் வெளிப்படும். கீழ்வரும் பிரிவுகளில் இந்த இரண்டு விதமாகச் சாத்தியமாகக்கூடிய தாக்கங்கள் குறித்து முழு விவரங்களோடு விவாதிக்கப்படுகின்றன.

ஜி.எஸ்.டி-யின் கீழ் ஒவ்வொரு சரக்கு அல்லது சேவையும் வரையறுக்கப்பட்ட 5%, 12%, 18% மற்றும் 28% என நான்கு வகையிலான வரிவிதிப்பு அளவுகளில் ஏதேனும் ஒன்றன் கீழ் அடங்கும் அல்லது வரிவிதிப்பில் இருந்து விலக்கு பெற்றிருக்கும். அதாவது இதன் அர்த்தம் என்னவென்றால் உருவாகின்றது. உதாரணமாக X என்ற சரக்கு உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வோருக்கு நேரடியாக விற்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். முந்தைய வரி விதிப்பு முறைப்படி இறுதிநிலை விற்பனைக்கு முன்பு விதிக்கப்படும் வரிகள் என கலால் வரி, மாநில வாட் வரி, நுழைவு வரி இவற்றைச் சுட்டிக்காட்டலாம். இந்த வரிகள் அனைத்தும் சேர்ந்து மொத்தமாக 15% இருப்பதாக எடுத்துக் கொள்வோம். ஜி.எஸ்.டியின் கீழ் இந்தச் சரக்கானது 18% வரி விகிதத்தின் கீழ் வரும். அப்படியென்றால் இது செலவு மிகுந்த சரக்காக இருக்கும். என்றாலும் இது 12% அல்லது 5% வரிவிகித அளவிலேயே



இவற்றுக்கான வரிவிகிதம் 0% என்பதாகும். “தாக்கம் ஏற்படுத்தும்” வரி விகிதத்துக்கும் ஜி.எஸ்.டி காலகட்டத்துக்கு முன்பான வரிவிதிப்பு முறைக்கும் ஒப்பீட்டு அளவிலான வித்தியாசம் என்பது சரக்கு/சேவை எந்த வரிவிதிப்பு விகிதத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகின்றது. அப்போதுதான் இது விலை குறைவான சரக்காக இருக்க முடியும். மாநிலங்களுக்கு இடையில் உருவாகும் முக்கியமான வித்தியாசத்தின் காரணமாக ஒரு குறிப்பிட்ட சரக்கு/சேவை ஒரு மாநிலத்தில் விலை மலிவானதாக இருக்கும். ஆனால் வேறொரு மாநிலத்தில் அதிகமாக இருக்கக் கூடும்.

ஜி.எஸ்.டியின் கீழ் உணவு தானியங்கள், பருப்புகள், பழங்கள், காய்கறிகள் மற்றும் பால் போன்ற விவசாய, உணவுப் பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. அதேபோன்று கல்விக்கும் சுகாதாரப் பராமரிப்புக்கும் விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் இதற்கு முன்பு இவற்றுக்காக ஒரு குடும்பம் தனது மொத்த செலவில் 40 முதல் 45% செலவழித்திருப்பது தெரியவரும். இது நுகர்வோர் விலை குறியீட்டு எண் மூலமாகக் கணக்கிடப்பட்டு உள்ளது. அடுத்ததாக இதர இன்றியமையாதப் பொருள்களான நிலக்கரி, சர்க்கரை, சமையல் எண்ணெய், காஃபி போன்ற பொருள்களுக்கு வரி விகிதமானது 5% என நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. எனினும் சேவைகளுக்கான நிலையான விகிதமாக 18% என்று வரி விகிதம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ஜி.எஸ்.டி வரிவிதிப்புக்கு முன்பு இருந்த 14, 15% என்ற விகிதத்தோடு ஒப்பிட இது அதிகம்தான். ஜி.எஸ்.டி வரி விதிப்புக்கு முன்பான காலகட்டத்தில் பலமுறை வரி விதிப்பதும் பல இடங்களில் வரி




விதிப்பும் இருந்த காரணத்தால் ஒவ்வொரு தனிப்பட்ட சரக்கு/சேவைக்கு தகுதியான வரி விகிதத்தைக் கணக்கிட்டு மாற்றுவது என்பது கடினமாகதாகவே உள்ளது. இருந்த போதிலும் சில பொருளாதார நிபுணர்கள் 50% பொருட்கள் மீதான புதிய வரி விகிதமானது முந்தைய வரி விகித அளவிலேயே இருக்கும் எனக் கணக்கிட்டுக் கூறுகிறார்கள். மேலும் 30% பொருட்களுக்கான வரி விகிதம் குறைவாகவே இருக்கும் என்றும் உண்மையில் 20% பொருட்களுக்கான வரி மட்டுமே அதிகரிக்கும் என்றும் அந்த நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மற்றொரு வகையில் பார்த்தால், தகுதியான வரி விதிப்பு விகிதம் மாறுபடக் காரணமாக உள்ளீட்டு வரி கிரெடிட் முறையைக் கூறலாம். இதற்கு முன்பு விளக்கிச் சொல்லியவாறு, இந்த வழிமுறையானது தகுதியான மொத்த வரி விதிப்பைக் குறைப்பதன் மூலம் உற்பத்தியாளர்கள்/விற்பனையாளர்களின் ஒட்டுமொத்த செலவுகளைக் குறைக்கிறது. செலவில் ஏற்படும் இந்த செலவுக் குறைப்பானது நுகர்வோர் செலுத்தும் இறுதி நிலை விலையைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. செலவைக் குறைப்பதன் பலன்கள் நுகர்வோர்ருக்கு கிடைக்காமல் போவதைக் கவனத்தில் கொண்டு அத்தகைய நிறுவனங்களைக் கையாள அரசு ஜி.எஸ்.டி மசோதாவில் ஒரு ஷரத்தை அறிமுகப்படுத்தியது. அந்த ஷரத்து ''அநியாய இலாபம் ஈட்டுவதற்கு எதிரான விதிகள்'' என்பதாகும். உள்ளீட்டு வரி கிரெடிட் மூலமாகக் கிடைக்கும் செலவுக் குறைப்பின் பலனை நிறுவனங்கள்/வர்த்தகர்கள் நுகர்வோர்ருக்கு கிடைக்கச் செய்வதை இந்த விதிகள் கட்டாயமானதாக்கி உள்ளன. அதாவது நிறுவனங்கள்/வர்த்தகர்கள் பொருள்களின் விலைகளைக் குறைத்தாக வேண்டும். அப்போதுதான் நுகர்வோர்ருக்குப் பலன் கிடைக்கும். எவ்வாறு இருந்தாலும், விலைகள் குறைகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவது சிரமமான காரியமாகவே இருக்கும். அதாவது உடனடியாக குறுகிய காலத்திற்கு இந்தச் சிரமம் தொடரும். பொருட்களின் மீது அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலை (எம்.ஆர்.பி) போன்றவையே சவால்களாக உள்ளன.

சில பொருளாதார நிபுணர்களும் விமர்சகர்களும் குறைவான வரி விகிதம் அல்லது அதே அளவான வரி விகிதம் ஆகியவை இருந்தாலும்கூட, எதிர்வரும் காலத்தில் இது உடனடியாக பணவீக்கத்தை அதிகரிக்கவே செய்யும் என தெரிவிக்கின்றனர். இந்த கருத்துக் கணிப்புக்கு பின்னணியில் இரண்டு சாத்தியமான காரணங்கள் உள்ளன. ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் அனுபவங்கள் ஒரு காரணமாகும். இந்த நாடுகளில் ஜி.எஸ்.டி அறிமுகப்படுத்தப்பட்ட

பிறகு பணவீக்கம் அதிகரித்து இருந்தது. எனவே அது போன்ற நிலைமை இந்தியாவிலும் உருவாகக் கூடும். மற்றொரு காரணம் ஒத்திசைவுச் செலவு அதிகரிப்பதனால் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள விலை உயர்வு ஆகும். குறிப்பாக சிறு, நடுத்தர நிறுவனங்களில் இந்த விலை உயர்வு நிகழக்கூடும். இதுதான் கட்டுரையின் அடுத்த பகுதியாக அமைகின்றது. உற்பத்தி, வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலித் தொடர் செயல்முறைகளில் தாக்கம் ஏற்படுத்துவதால் ஜி.எஸ்.டியானது எவ்வாறு நுகர்வோரைப் பாதிக்கிறது என்பது முக்கியமான விவாதப்பொருளாகின்றது.

அர்த்தம் என்னவென்றால், அவை நெறிமுறை மற்றும் வரி செலுத்தும் கடமையில் இருந்து தப்பிவிடுகின்றன என்பதே ஆகும். இந்தத் தப்பித்தல் அல்லது வரி ஏய்ப்பு சில நிறுவனங்களின் ஒட்டுமொத்த செலவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சில சமயங்களில் உதவுகின்றன. இருந்தாலும், உள்ளீட்டு வரி கிரெடிட் அமைப்பின் கீழ் ஒரு நிறுவனம் இந்த கிரெடிட் பலன்களை ஜி.எஸ்.டி நெட்ஒர்க்கில் பதிவு செய்துள்ள ஒரு நிறுவனத்திடம் இருந்து பொருட்களை வாங்கி இருந்தால்தான் பெற முடியும். மேலும் கிரெடிட் பலன்களைப் பெற அந்த நிறுவனம் வரிகளை முறைப்படி செலுத்தி இருக்க வேண்டும்.



ஜி.எஸ்.டியின் அம்சங்களில் மிகவும் பரவலாக விவாதிக்கப்பட்ட அம்சம் எதுவென்றால் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மீதான தாக்கமே ஆகும். தற்போது இந்தியாவில் அதிக அளவிலான வர்த்தக நிறுவனங்கள் முறைசாரா பொருளாதாரத்தின் கீழ்தான் செயல்பட்டு வருகின்றன. இதன் அடிப்படை

இந்த ஷரத்து இருப்பதனால் கொள்முதல் செய்பவர் ஜி.எஸ்.டிக்கு இசைந்து நடக்கும் விற்பனையாளரிடம் இருந்து மட்டுமே பொருட்களை வாங்குவார் என்ற சாத்தியப்பாடு அதிக அளவில் உள்ளது. இதனால் பதிவு செய்ய வேண்டிய கட்டாயத்தை மீறி பதிவு செய்யாமல் செயல்பட்டு வந்த பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் தற்போது பதிவு செய்ய

முன்வரும் வாய்ப்பும் உள்ளது. எனவே அவை, சம்பந்தப்பட்ட நெறிமுறைகளைக் கடைபிடிக்கவும் வரிச்செலவை ஏற்கவும் செய்யும். தற்போது நடைமுறையில் உள்ள நெறிமுறைகளுக்கு ஏற்ப செயல்பட்டு வரும் நிறுவனங்களில்கூட அவை ஜி.எஸ்.டி நெட்ஒர்க்குக்கு மாறும் போது செலவு அதிகரிக்கக் கூடும். குறிப்பாக தொடக்கக் காலகட்டத்திலாவது செலவு அதிகமாகும். மேல்மட்டத்தில் பார்த்தால் அரசுக்கு வரி வருவாயை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு இதில் உள்ளுறைந்து இருப்பது புலனாகும். மேலும் தொடர்புடைய ஒட்டுமொத்த செலவு அமைப்பில் இது எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்து விலைகள் அதிகரிக்கும் வாய்ப்பும் உள்ளது.

இறுதியாகச் சொல்வதென்றால், ஜி.எஸ்.டியின் மற்றொரு முக்கியமான தாக்கம் என்பது சரக்குகளை எடுத்துச் செல்லும் போக்குவரத்து அம்சம் மீதே இருக்கும். அதிலும் குறிப்பாக மாநிலங்களுக்கு இடையிலான பரிவர்த்தனையில் தாக்கம் ஏற்படக் கூடும். தற்போது மாநில எல்லையில் உள்ள சோதனைச்சாவடிகளில் வாகனங்கள் அனுமதிக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதைப் பார்ப்பது என்பது வழக்கான ஒன்றாக உள்ளது. வரி விகிதங்கள் மாநிலங்கள் அனைத்துக்கும் ஒரே சீராக இருக்குமாறு ஜி.எஸ்.டி செய்துள்ளதால், இந்தக் காத்திருப்பு வரிசையானது காணாமல் போய்விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் தருணத்திலேயே 22 மாநிலங்கள் தங்கள் மாநில எல்லையில் இருந்த சோதனைச் சாவடிகளை நீக்கி உள்ளன. நாடு முழுவதும் தடை இல்லாமல் சரக்குகள் எடுத்துச் செல்லப்படும் அம்சமானது சரக்குக் கட்டணத்தைக் குறிப்பிடத்தக்க வகையில் குறைக்கக்கூடும். அதேபோன்று காத்திருக்கும் நேரமும் குறையும். இவை இரண்டும் ஒன்று சேரும் போது ஒட்டுமொத்தச் செலவும் குறையும்.

- **நிறைவுக் கருத்துகள்**

சுதந்திர இந்தியாவில் மிகப்பெரும் வரிச் சீர்திருத்தமாக ஜி.எஸ்.டி பார்க்கப்படுகிறது. இது நிறைய விளைவுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்ப்பதற்கு பல சாதகமான காரணங்களும் உள்ளன. ஒரு நுகர்வோரின் பார்வையில் பார்க்கும் போது ஒட்டுமொத்த விலை நிலையில் ஜி.எஸ்.டி மாற்றத்தைக் கொண்டு வரும் என்பதில் சில நிச்சயமற்ற கூறுகள் உள்ளன. விலை குறைவது அதே சமயம் அதிகரிப்பது என இரு பக்கமும் செயல்படக்கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளன. அதிக எண்ணிக்கையிலான சரக்குகளுக்கு குறைவான தகுதிநிலை வரி, உள்ளீட்டு வரி, கிரெடிட் மற்றும் விநியோகச் சங்கிலித் தொடரில் மேம்பாடு ஆகியன விலையைக் கட்டாயம் குறைக்கச் செய்யும் கூறுகள் ஆகும். இதற்கு மாறாக, சேவைகளுக்கான அதிகமான தகுதிநிலை வரி, ஒத்திசைந்து நடப்பதற்கு ஆகும் செலவு அதிகரித்தல் ஆகியன விலையை அதிகரிக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளன. அதிலும் குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஒத்திசைந்து நடப்பதற்கான செலவு அதிகமாகவே இருக்கும். இரண்டு பக்கங்களிலும் இருக்கின்ற கூறுகள் உடனடியாக எதிர்காலத்தில் விலை எவ்வாறு இருக்கும் என்பதை முன்கூட்டியே சொல்வதற்கு சவாலாக உள்ளன. நமக்கு முன்பே ஜி.எஸ்.டியை நடைமுறைப்படுத்தி உள்ள பிற நாடுகளோடு நம் நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் உந்துதல் இருக்கும் அதே வேளையில் வேறு எந்த நாடும் இந்தியாவைப் போன்று பன்மைத் தன்மையையும் பல அடுக்குகளையும் கொண்டவையாக இல்லை என்பதும் தெளிவாகின்றது. ஜி.எஸ்.டி பதிலீடு செய்யும் முந்தைய வரி விதிப்பு அமைப்பும் சிக்கலானது ஆகும். இந்தப் பின்னணியில், சொல்லப்பட்டுள்ள கூறுகள் அனைத்தும் எவ்வாறு இணைந்து செயல்படப்போகின்றன; நுகர்வோரை ஜி.எஸ்.டி எந்த அளவில் பாதிக்கப்போகிறது என்பனவற்றைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

- **சூரஜ் ஜெய்ஸ்வால்**, புதுதில்லி நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாகப் பொறுப்பு மையத்தின் செயல்முறை ஆலோசகர்.

# மத்திய மாநில அரசுகளின் புதுநிலை

- ஜெயந்தா ராய் சௌத்ரி

வரி விதிப்பதற்கான அரசியல் அமைப்பு சார்ந்த தங்களுடைய உரிமையை மாநிலங்கள் விட்டுக் கொடுத்திருப்பதன் மூலம், இந்தப் புதிய அனைத்து இந்தியாவிற்கும் பொதுவான பொருள்கள் மற்றும் சேவைகள் வரி அமைப்பு வெற்றி பெற வேண்டும் என்பதில் அவர்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு.

ஆனால், புதிய ஜிஎஸ்டி அமைப்பால் உறுதி செய்யப்பட்ட அதிக வருவாய் கிடைக்காத பட்சத்தில் தங்களுக்கு ஏற்படும் இழப்புகளை சமாளிக்க அவர்கள் பகிர்ந்து கொள்ள ரூ.50,000 கோடி அளவிற்கு கூடுதல் தீர்வை விதிக்க அவர்கள் மத்திய அரசோடு கடுமையாக வாதிட்டு வந்திருக்கிறார்கள்.




இதற்கான காரணம் என்னவென்றால், கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றத்தாலும், உலகளாவிய மந்த நிலைமைகளாலும் இந்தியப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டால் அப்போது எதிர் பார்த்த அளவு வளர்ச்சி 7.5 - 8 சதவிகிதத்திலிருந்து குறைந்தும் வருமானங்கள் குறைவும் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஜிஎஸ்டி சார்ந்த பிரச்னை மற்ற வரிகளைப் போலவே, இந்திய பொருளாதாரம் திறம்பட செயல்படுவதைச் சார்ந்துள்ளது. கொள்கை அடிப்படையில், ஜிஎஸ்டி அமைப்பால் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். உள் நாட்டு மொத்த உற்பத்தியில் வரியின் சதவிகிதம் தற்போதுள்ள 10லிருந்து 16ஆக உயர வாய்ப்புள்ளது. ஆனால், இதை அடைய முடியுமா என்பது அடுத்த வருடம்தான் தெரியும். அரசும், தொழில்துறையும் எப்படி இணைந்து சுமுகமாக செயல்பட்டு அனைத்து பரிவர்த்தனைகளையும், ஷரத்துக்களையும் பூர்த்தி செய்வார்கள் என்பதைச் சார்ந்துள்ளது.

மாநிலங்களுடைய நிதி நிலைமை பற்றிய மத்திய ரிசர்வ் வங்கியின் ஒரு அறிக்கையின்படி "ஜிஎஸ்டி செயல்பாட்டால் விளையும் வருவாயின் மொத்த அளவு நிச்சயமற்றத் தன்மையில் இருக்கும் போது, மாநிலங்களுக்கான வருவாய்களும் நிச்சயமற்றத் தன்மையிலேயே உள்ளது".

மற்றொரு வகையில், மாநிலங்களின் செலவுகள், உயர்ந்து கொண்டே போகின்றன. ஏழாவது ஊதியக் கமிஷன் பரிந்துரைகளை செயல்படுத்துவதால், ஊழியர்களுக்கான செலவுகள் மிகவும் அதிகரிக்கக் கூடும். உத்திர பிரதேச அரசு அவசர அவசரமாக விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ததை அடுத்து வேறு மூன்று மாநில அரசுகளும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

மாநிலங்கள் மற்றும் மத்திய அரசுகளைப் பொறுத்த வரையில் அவர்களின் கடன் சுமை ஒரு பெரிய வெடிகுண்டு போல் உள்ளது. அதனால், கிரீஸ் நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை போல இந்தியாவிலும் நேரலாம். மத்திய, மாநில அரசுகளின் மொத்த இந்தியக் கடன்சுமை, உள் நாட்டு மொத்த உற்பத்தியில் 67 சதவிகிதமாக உள்ளது. ஜப்பான் தவிர்த்து மற்ற பெரிய ஆசிய பொருளாதாரங்களை ஒப்பிடும்போது, இது மிகவும் உயர்ந்த அளவாகும்.

நிதியமைச்சகத்தின் கணிப்பின்படி தற்போது எல்லா மாநிலங்களும் விவசாயக்கடன்களை தள்ளுபடி செய்தால், அதனால் அவர்கள் வாங்கும் கடன் மேலும் ரூ.3இலட்சம் கோடி உயரும். இப்படி கடன் வாங்குவது, நிலைத்து நிற்க முடியாது. தற்போதுள்ள நிலைமையில் புதிய அமைப்பின்கீழ், மாநிலங்களின் வருவாய் உயருமா அல்லது குறையுமா என்ற நிலை தெளிவில்லாத வகையில் இருப்பதால் இது மிகவும் ஆபத்தானதாகும் என்று மாநிலங்களும் அறிந்திருக்கின்றன.

இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி மாநிலங்களின் உள்நாட்டு மொத்த வருமானத்திற்கு எதிரான கடன்சுமை கடந்த ஆண்டு 17 மாநிலங்களில் உயர்ந்துள்ளது. மத்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையின்படி "மாநிலங்களின் மொத்த வருவாய் கடந்த சில ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்துள்ளது. 25 மாநிலங்களுக்கான தகவல்களின்படி 2016-17ஆம்

ஆண்டிற்கான மாநிலங்களின் பட்ஜெட்டில் எதிர்பார்க்கப்பட்ட வருவாயை அடைவது சிரமமே''. 2004-05க்கு பிறகு உள்நாட்டு மொத்த உற்பத்திக்கு எதிரான நிதிசார் பற்றாக்குறை 2015-16ஆம் ஆண்டில் சமாளிக்கக்கூடிய அளவு என்று கருதப்பட்ட மூன்று சதவிகிதத்தைவிட உயர்ந்துள்ளது.

இந்த நிலைமைகளில் ஊதியங்களுக்கும், மேம்பாட்டுச் செலவுகளுக்கும், கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கும் அவர்களுக்குப் பணம் தேவைப்படுவதால், அவர்கள் மத்திய அரசுக்கு எதிராகப் போராடும் நிலை ஏற்படும்.

ஆனால், மொத்த மறைமுக வரிகளில் 45 சதவிகிதம் ஜிஎஸ்டியின் கீழ் வராத நிலையில் மாநிலங்கள் கட்டுமானத்துறை, பெட்ரோலியம் பொருட்கள், சாராயப்பொருட்கள் மீதான வரிகளை விதிக்க உரிமை உள்ளதால், அவைகளை அவர்கள் உயர்த்தக்கூடும்.

ஜிஎஸ்டி சட்ட முன்வடிவின்படி படிப்படியாக இவைகளையும், ஜிஎஸ்டி கவுன்சில், ஜிஎஸ்டியில் சேர்க்கும். ஆனால், காலப்போக்கில் தங்களுக்கு நிதிசார் சுதந்திரம் தேவைப்படும் என்பதை மாநிலங்கள் உணர்வார்கள். ஆகவே, தங்களுக்கு உண்டான நிதி ஆதாரங்களைப் பாதுகாப்பதற்காக இந்தப் பொருட்களின் மீது வரி விதிப்பதை அவர்கள் தக்க வைத்துக் கொள்ள நினைப்பார்கள்.

அரசியலமைப்பு சட்ட உருவாக்க மன்றத்தில் மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையேயான நிதிசார் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கும் விவாதம் நடந்த போது, காங்கிரஸ் உள்ளிட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று கோரினார்கள். ஆனால், இப்படி மாநிலங்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் இருந்தால் ஒரே இந்தியா என்ற நிலைக்கு பாதகங்கள் ஏற்படும் என்று முனைப்பாக வாதாடப்பட்டு, வரிகள் விதிப்பதும், அதற்கான சட்டங்களை இயற்றுவதும் மாநிலங்களைவிட மத்திய அரசுக்கே இருக்க வேண்டும் என்று உறுதி செய்யப்பட்டது.





பொருள்கள் மற்றும் சேவைகள் வரி செயல்பாட்டிற்குப்பின் மத்திய அரசிற்கு சாதக நிலைமை மேலும் உயரும் என்று அரசியல் அமைப்பு சட்ட நிபுணர்கள் கருதுகிறார்கள். மாநிலங்கள் தங்களுடைய வரி விதிக்கும் உரிமையை சில பொருட்களுக்கு விட்டு கொடுத்தால் கூட அவர்களுடைய தனித்தனியான பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் பாதிக்கப்படும் என்று நோக்கர்கள் கூறுகிறார்கள். ஜிஎஸ்டியின் பல பிரிவுகளைக் கடுமையாக எதிர்த்த தமிழக அரசு தன்னுடைய வரி திட்டங்களை சார்ந்துதான் பல சமூக சீர்திருத்த திட்டங்களை மேற்கொண்டிருப்பதாகக் கூறியது. தென் மாநிலங்கள், சமூக மேம்பாடு திட்டங்களில் சிறப்பாகச் செயல்பட்டு - குறிப்பாக உடல்நலம் மற்றும் கல்வித்துறைகளில் மற்றவர்களைவிட மிகவும் முன்னேறி வளர்ந்த நாடுகளைப்போல் உள்ளனர் என்பது உண்மையே. பொருளாதார நிபுணர் ஜீன் டீரீஸ் கூறுவதுபோல, ''கேரளாவும், தமிழ்நாடும் மிக உயர்ந்த மேம்பாட்டுக் குறியீடுகளை அடைந்துள்ளது மட்டுமல்லாமல், அவைகளின் வளர்ச்சியும் வேகமாக உள்ளது''.


சட்டரீதியாகப் பார்த்தால், ஜிஎஸ்டி திருத்த சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அமைப்பிற்கு பல துறைகளில் வரிவிதிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி கவுன்சில் மத்திய நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களின் வரி விதிக்கும் அதிகாரங்களை எடுத்துக் கொண்டுள்ளது. அதன் முடிவுகளை, நாடெங்கிலும் செயல்படுத்தப்பட வேண்டிய நிலைமை உள்ளது. ஜிஎஸ்டி கவுன்சிலில் மத்திய, மாநில அரசுகளின் வாக்களிக்கும் உரிமை சதவிகிதத்தை பற்றி கருதாமல் நாம் பார்க்கும்போதுகூட மக்களால், நேரடியாகவும், மறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் நீங்கி நாடெங்கிலும் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் வரி விதிக்கும் அதிகாரம் ஜிஎஸ்டி கவுன்சிலிடம் இருக்கும். இதன் சாராம்சம், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நன்கு கல்வி பெற்ற, ஒரு அதிகாரமுள்ள அமைப்பு செயல்படும். ஆனால், அவர்கள், குடிமக்களுக்கும், வாக்காளர்களுக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஜிஎஸ்டி முறையில், தங்களுடைய வரி விதிக்கும் அதிகாரம் குறைந்த நிலையிலும், தங்களுக்கு கீழ் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் இருக்கும் நிலைமையிலும், மாநிலங்கள் வரிவிதிக்கும் சில அதிகாரங்களைத் தக்க வைத்துக்கொள்ள நினைப்பார்கள்.

உள்ளாட்சி வட்டத்திற்குள் நுழையும் பொருள்கள் வரி, கேளிக்கை வரிகள், பத்திர வரிகள், சாராயம் எரிபொருள் போன்றவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள் மற்றும் மின்சாரம் சார்ந்த தீர்வைகள் இன்னும் ஜிஎஸ்டி அமைப்பின்கீழ் வரவில்லை. ஆகவே, மாநில அரசுகள் இவைகளின் மீதான வரிகளை உயர்த்தியும், குறைத்தும் தங்களுடைய நிதிசார் சுதந்திரத்தை வளர்த்துக்கொள்ள நினைப்பார்கள். ஆனால், தங்களுடைய மொத்த வருவாயில் பெரும் பங்கு ஜிஎஸ்டி கவுன்சிலால் முடிவு செய்யப்படும் நிலையில் அதற்கு மாநில அரசுகள் கட்டுபட்டிருப்பார்கள்.

பெரும்பான்மையான நாடுகளில் இது போன்ற அமைப்புகள், மறைமுக வரிகளை விதிக்கும் அதிகாரங்களைப் பெற்றிருந்தாலும், நேர்முகவரிகளை விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கே உள்ளன. கனடாவில், கடந்த நூற்றாண்டில் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்ட போது, அங்கு, நேர்முகவரிகளை விதிக்கும் உரிமை மாநிலங்களுக்கு இருந்ததாலும், மத்திய அரசுக்கு மறைமுகவரிகளை விதிக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டதாலும் அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால், இந்தியாவில் நேர்முகவரிகளை விதிப்பதற்கு மத்திய அரசு, முழு உரிமை பெற்றுள்ளதில்லாமல், (இதில் ஒரு பங்கு மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது) ஜிஎஸ்டியின் கீழ் வரும் வரிகளில் பாதி அளவிற்கு தனி உரிமை பெற்றுள்ளது.




இறுதியாக பொருள்கள் மற்றும் சேவைகள் வரி செயல்படுத்தப்படுத்தப்படுவதற்கான சவால்களை இந்திய அரசியல் எப்படி எதிர்கொள்ளப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். இப்போது உருவாகியுள்ள வரி விதிக்கும் உரிமைகளை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது இப்போதுள்ள நிலைமையிலிருந்து மாறுதலைக் கோரலாம்.



இப்போதுள்ள நிலையிலிருந்து வேறுபட்ட நிதி அமைப்பை மாநிலங்கள் விரும்பினால், அவை ஆஸ்திரேலிய முன் உதாரணத்தைப் பின்பற்றலாம். அங்கு மொத்த வரிகளில் 75 சதவிகிதம் மத்திய அரசால் வசூலிக்கப்பட்டு ஒரு நவீன முறையில் மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

இந்தியாவின் எதிர்கால வரி அமைப்பும், மத்திய மாநிலங்களுக்கிடையேயான அதிகாரப் பகிர்வும் எப்படி இருக்கும் என்பதை இந்திய அரசியலின் அடுத்த நடவடிக்கைகளில் காலப்போக்கில் காணலாம். ஆனால், ஜிஎஸ்டி முறை ஏற்கனவே இறுதியாக்கப்பட்டுவிட்டதாக நாம் கொள்ளக்கூடாது. விரைவிலேயே மாநிலங்கள் தங்களுடைய வருவாய்களை மேம்படுத்திக் கொள்ள மாற்றங்களைக் கோரலாம்.

- **ஜெயந்தாராய் சௌத்ரி**, தி டெலிகிராப் பத்திரிகையின் வணிகச் செய்திப் பிரிவில் மூத்த ஆசிரியர்.

அடுத்த மாத இதழில்

# "அனைவருக்கும் வீடு"

**திட்டம் பற்றிய சிறப்புக் கட்டுரைகள் இடம் பெறும்.**

## மேம்பாட்டுப்பாதை

# நாடாளுமன்றத்தில் ஜிஎஸ்டி திட்டத் துவக்க விழா

ஜூலை 1, 2017இல் நடைமுறைக்கு வந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரி, ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வரி சீர்திருத்தமாகும். அது இந்தியாவின் மறைமுக வரிகள் நிலைமையை முற்றிலும் மாற்றியமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய மாநில வரிகளை உள்ளடக்கிய ஜிஎஸ்டியை மத்திய மாநில அரசுகள் கூட்டாக செயல்படுத்தும்.

இந்த சரித்திர முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சியைப் போற்றும் வண்ணம் ஜூன் 30 - ஜூலை 1, 2017ஆம் நாள் நள்ளிரவு நாடாளுமன்றத்தின் மத்திய அரங்கில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில், மாண்புமிகு குடியரசுத்தலைவர், மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு மக்களவை சபாநாயகர் மற்றும் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அப்போது பேசிய குடியரசுத் தலைவர் ஜிஎஸ்டியின் அறிமுகம் நாட்டின் ஒரு மகத்தான நிகழ்வு என்று கூறினார். இந்த நேரத்தில், ஜிஎஸ்டி சார்ந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவை மார்ச் 22, 2011இல் தாம் நிதியமைச்சராக இருந்தபோது, நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திய வகையில் மிகவும் திருப்தியளிக்கும் நிலைமையாக உள்ளது. இப்படிப்பட்ட பெரிய ஒரு மாற்றத்தை அறிமுகப்படுத்தும்போது, அது எவ்வளவுதான் நல்லதாக இருந்தாலும், அதனால் சில செயல்முறை பிரச்சினைகளும், தொல்லைகளும் துவக்க கட்டத்தில் ஏற்படத்தான் செய்யும் என்று குடியரசுத்தலைவர் கூறினார். இந்தப் பெரிய மாற்றங்கள் வெற்றி பெற அவற்றின் செயல்பாடு திறமையாக இருக்கவேண்டும். வரும் மாதங்களில் செயல்பாட்டில் ஏற்படும் அனுபவத்தின் அடிப்படையில் ஜிஎஸ்டி கவுன்சிலும், மத்திய, மாநில அரசுகளும் இதுவரை வெளிப்படுத்திய முற்போக்கான எண்ணத்தோடு, தொடர்ந்து பரிசீலனை செய்து தேவையான முன்னேற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

பிரதமர் பேசுகையில், இந்த நாள் நாட்டின் எதிர்காலப்போக்கை நிர்ணயிக்கும் முக்கிய திருப்புமுனையாக இருக்கும் என்று தெரிவித்தார். ஜிஎஸ்டி, ஒத்துழைப்பு மிக்க கூட்டாட்சிக்கு ஒரு நல்ல முன்னுதாரணம் என்று கூறினார். நாம் கடுமையாக உழைத்தால் எல்லா தடங்கல்களையும் களைய முடியும். எந்த ஒரு கடுமையான இலக்கையும்



அடைய முடியும் என்று சாணக்கியர் கூறியதை மேற்கோள் காட்டினார். சர்தார் பட்டேல் நாட்டில் அரசியல்சார் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியதைப் போல ஜிஎஸ்டி, பொருளாதார ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் என்று கூறினார். ஜிஎஸ்டியால், ஒரு நவீன வரி நிர்வாகம் உருவாகும். அது எளிமையாகவும், மிகவும் வெளிப்படையாகவும், இலஞ்சத்தை ஒழிக்கக்கூடியதாகவும் இருக்கும் என்று பிரதமர் கூறினார். "ஜிஎஸ்டி, நல்ல, எளிமையான வரி" இறுதியில் மக்களுக்கு அது பயனளிக்கும் என்றார். பொதுவான இலக்கும், பொதுவான உறுதியும் இருந்தால் சமுதாயத்தில் பங்கு கொள்ளும் எல்லோருக்கும் பரஸ்பரப் பயன்கள் கிடைக்கும் என்று ரிக்வேதத்தில் காணப்படும் ஒரு ஸ்லோகத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு சுதந்திரமடைந்தபின் மேற்கொள்ளப்பட்டுள்ள மிகப்பெரிய வரி சீர்திருத்தமான ஜிஎஸ்டி, "ஒரு நாடு, ஒரே வரி, ஒரே சந்தை" என்ற இலக்கை அடைய வழி கோலும். தொழில்துறை, அரசுகள், நுகர்வோர் போன்ற அனைத்து பங்குதாரர்களுக்கும் ஜிஎஸ்டி பயனளிக்கும். தற்போது மத்திய, மாநில அரசுகள் பலவகையான வரிகளை விதிக்கின்ற நிலையில், ஏற்றுமதிக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட வரிகளுக்கு கழிவுகள் சில சமயங்களில் கிடைக்காத நிலையில், ஜிஎஸ்டி அமைப்பில் ஏற்றுமதிகளுக்கு எந்தவொரு வரியும் இருக்காது. ஜிஎஸ்டி பெரும்பாலும் தொழில்நுட்பத்தால் உந்தப்படுவதால், மனிதர்களின் நேர்முகத் தொடர்புகள் பெருமளவு குறையும். ●